Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 43 | 16 - 22 - டிசம்பர் - 2005




## நாங்கள் எங்கள் சொந்த இடத்திற்கு போகவேண்டும்...

## சிறிலங்காவின் அவலம்....

உடம்பு சூடானால் குளிர்ந்த நீரில் குளித்து உடம்புச் சூட்டைத் தணிக்கிறோம். ஆனால் தண்ணீரே சூடானால் என்ன செய்வது உலகத்தில் உள்ள எல்லாக் கடல்களிலும் தண்ணீர் சூடாகி வருகின்றது. இதற்கு மனிதர்களின் நடவடிக்கையே காரணம் என்று அண்மையில் அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது. கலிபோர்னியாவிலுள்ள ஸ்கிரிப்ஸ் கடல் வளக் கழகத்தைச் சேர்ந்த டிம் பார்னெட் என்ற அறிவியல் அறிஞர் தலைமையில் ஆராய்ச்சியாளர் குழு கணனி மாதிரிகளையும் நடைமுறை உலகில் கிடைத்த தகவல்களையும் வைத்து ஆராய்ந்ததில் பசுமை இல்ல வாயுவினால் உருவாகும் வெப்பம்.



# உடல் சூடானால் நீரில் குளிக்கலாம்-ஆனால் கடலே சூடானால்..?

கடலுக்குள்ளும் ஊடுருவியிருப்பது தெரியவந்துள்ளது. இந்தக் கடல் வெப்பம் அதிகரிப்பு மனிதர்களின் நடவடிக்கைகளால் தான் ஏற்படுகின்றது என்று ஆராய்ச்சியாளர்கள் முடிவு கட்டியுள்ளனர். கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இவ்வாறு மனிதனால் கடல் நீர் வெப்பமடைந்து வருவதை அவர்கள் கணனி மாதிரிகளைக் கொண்டு கணக்கிட்டுள்ளனர்.

கடல் நீரின் வெப்பநிலை மாற்றத்திற்கு இயற்கையான காலநிலை மாற்றம் காரணமா, அல்லது எரிமலை வெடிப்பு, சூரிய ச்க்தி போன்ற புறசக்திகள் காரணமா என்று விளக்கம் காண முயற்சிக்கப்பட்டது. ஆனால் கடல் நீரின் பரப்பில் வெப்பநிலை இசைந்ததாக அந்த ஆராய்ச்சி முடிவுகள் இல்லை. தற்போது புவிவெப்பமடைவதற்கு இவை சான்றுகளாகும்.' கடல் வெப்பம் கடந்த் காலத்தில் எப்படி இருந்தது, எதிர்காலத்தில் எப்படி இருக்கும் என்பதை வெற்றிகரமாக ஆராய முடியும் என்கிறார் பார்னெட்.

கடல் வெப்பத்தின் பாதிப்பு புறவெளியிலும் இந்த நிலத்திலும் பெரிய அளவிலான மாற்றங்களை ஏற்படுத்தும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

தென் அமெரிக்காவின் ஆன்டெஸ் மலையிலும் மேற்குச் சீன மலைகளிலும் பனி உருகி கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் இடர்கள் ஏற்படக் கூடும். கோடைகாலத்தில் போதிய அளவு தண்ணீர் கிடைக்காமல் போகலாம் என்று பார்னெட் கூறினார்.

கடல் நீர் வெப்பமடைவதற்கான மனித நடவடிக்கைகள் யாவை என்பதை ஆராய்ந்து கொண்டிருப்பதை விட இந்த விளைவுகள் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். கடல் நீர் வெப்பமடைவதால் ஏற்படக் கூடிய தீவிரமான பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றி சமுதாயம் தான் முடிவெடுக்கவேண்டும்.

இதற்கிடையில் சைபீரியாவில் 125 ஏரிகள் காணாமல் போய் விட்டன என்பதை அறிவியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். சைபீரியாவில் உள்ள 10,000க்கும் அதிகமான ஏரிகள் பற்றிய செயற்கைக் கோள் படங்களை அமெரிக்க ஆய்வாளர்கள் ஆராய்ந்தனர். 1973 இல் 10.882 ஏரிகள் இருந்தன என்றும் அவை 199712 ஆகக் குறைந்து விட்டன என்றும் இந்த ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன. மொத்தம் 125 ஏரிகளை காணவில்லை என்றும் எஞ்சிய ஏரிகளின் பரப்பும் சுருங்கி வருவதாகவும் அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

காணாமற் போன ஏரிகளைக் கண்டு பிடித்துத் தருவோருக்கு பரிசு என்று அறிவிக்கலாமா முடியாது.

ஏனென்றால் புவி வெப்படைவதால் உண்டாகும் விளைவு சைபீரியக் குளிரின் வேகத்தையும் குறைத்து விட்டது. சைபீரியா என்றென்றும் பல பனி உறைந்து கிடக்கும் நிலப் பகுதியாகும். அங்கேயே புவிவெப்பம் பரவி உறைந்த ஏரிகள் உருகி காணாமல் போய்விட்டன. இவ்வாறு ஏரி உருகியதால் வழிந்தோடும் நீர் பூமிக்குள் ஊடுருவ முடியாமல் பனிக்கட்டி மண் தடுக்கிறது. இதனால் நிலத்தடி நீர்வளம் குறைந்து விட்டது. இப்படியே போனால் குளிர்ப் பிரதேசமான சைபீரியாவில் கூட தண்ணீர்ப் பஞ்சம் தலை விரித்தாடலாம் அப்படி ஒரு செய்தி ஒலிபரப்பானால் ஆச்சரியப்படாதீர்கள்.

# பலதும்... பத்தும்

'என்ன நான் சொன்னது காதுல ஏறினதா...! என்ற மனைவியின் எரிச்சல்படும் இந்தக் காட்சி எல்லாக் குடும்பங்களிலும் நடப்பது தான். மனைவியின் பேச்சு மட்டுமல்ல எந்த ஒரு பெண்ணின் பேச்சும் ஆணின் செவிப்பறையை எட்டுவது கடினம் என்கிறார்கள் அறிவியல் அறிஞர்கள். இங்கிலாந்தின் வட பகுதியல் உள்ள ஷெபீ'.டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆணின் ஒலிக்கும் பெண்ணின் ஒலிக்கும் மூளை பிரதிபலிப்பதில் பெருத்த வேறுபாடு உள்ளது என்ற திடுக்கிடும் உண்மையைக் கண்டறிந்துள்ளனர்.

ஆண்கள் பெண்களின் குரலைப் புரிந்து கொள்ள தங்கள் மூளையில் உள்ள இசை உணர்பகுதியைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. ஆனால் ஆணின் குரலைப் புரிந்து கொள்ள இவ்வளவு



## பெண்களின் பேச்சு ஆண்களின் காதில் ஏறாது..!

சிக்கலான மூளைச் செயல்பாடு பெண்களுக்கு தேவை இல்லை என்கின்றனர்.

"ஆணின் குரலைவிட பெண்ணின் குரல் மிகவும் சிக்கலானது. இதற்குக் காரணம் ஆண்-பெண் குரல் நாண்கள் மற்றும் குரல்வளையின் அளவும் வடிவமும் வித்தியாசப்படுகின்றது. மேலும் பெண்களின் குரலில் இயற்கையாகவே ஒரு மெலடி இருக்கிறது. இதனால் ஆணின் குரலை விட பெண்ணின் குரலில் ஒலி அலைகள் மிகவும் சிக்கலான ஒரு விஸ்தாரத்தில் உள்ளன. என்று" மைக்கேல் ஹன்ட்டர் என்ற ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்.

காதுக்குள்ளே ஏதோ பேசுகின்றது என்று மருள்கிற பைத்தியங்களுக்கு கூட ஆண் குரல்தான் கேட்கிறதாம்.

# செயற்கை மழை..!

இயற்கையின் சீற்றம் உலகெங்கும் ஒரே மாதிரிதான் இருக்கிறது. சில பகுதிகளில் மழை வெள்ளம் சில பகுதிகளை வரட்டி வதைக்கும் வறட்சி. அந்தக் காலத்தில் அதாவது வரலாறு எட்டிப்பார்க்காத புராணகாலத்தில் மழை வேண்டி வருணபகவானுக்கு யாகம் செய்யப்பட்டதாக புராணங்கள் உண்டு. சொர்க்கத்தில் இருக்கின்ற வருணபவானை திருப்தி செய்வதற்குப் பதிலாக வானிலையையே மாற்றத் தொடங்கியது உலகம் வறட்சியையும் எக்கச்சக்கமான பணச்செலவையும் சமாளிப்பதற்காக வானிலே கருமேகங்களை உண்டாக்கும் செயற்கை மழைத் திட்டம் தொடங்கப்பட்டது.

அது சரி செயற்கை மழை எவ்வாறு பெய்கிறது. அதாவது, செயற்கை மழை பெய்யும் போது திடீரென பிரளயம் ஏற்பட்டு விடாது. இரண்டு நாட்களுக்கு மேல் அரும்பாடுபட்டு ரொக்கெட்டுகள், விமானங்கள், பீரங்கிகள் ஆகியவற்றின் மூலமாக மழையைக் கருத்தரிக்கும் படி மேகங்களைத் தூண்டுகின்றனர். அதாவது உப்பு சில்வர் அயடீன் போன்ற ஐஸ் உருவாக்கும் பொருட்களை ஆகாயத் தில் தெளிக்கின்றன. இதனால் உருவாகும் மேகங்கள் மழை யைப் பொழிகின்றன.



சரி செயற்கை மழை பெய்கின்றது சரி தான். இதை இயற்கை மழையில் இருந்து எப்படி வித்தியாசப் படுத்துவது இதற்கும் பதில் வைத்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

இயற்கை மழையையும் செயற்கை மழையையும் வித்தியாசப்படுத்தமுடியாது. ஆனால் செயற்கை மழையில் விழும் மழைத் துளி பெரியாக இருக்கும் என்று நம்பப்படுகின்றது.

செயற்கை மழை ஆரோக்கியமானதா? நாம் உண்ணும் உணவுக்கு சுவை கூட்டுவதற்காகப் போடப்படும் அயடீன் கலந்த உப்பு ஆரோக்கியமானது தானே. செயற்கை மழையில் உள்ள அயடீன் உப்பில் உள்ள அயடீனை விட குறைவான அளவுதான். ஆகையால் செயற்கை மழையால் உடநலனுக்கு ஆபத்து இல்லை.

செயற்கை மழை எங்கெல்லாம் பெய்கின்றது.

சந்தேகம் என்ன சீனாவில் தான். உலகெங்கும் 20 இக்கும் மேற்பட்ட நாடுகள் வானிலையைத் திருத்தி செயற்கை மழையை வரவழைக்க முயன்று கொண்டிருந்தாலும் சீனாவில் தான் பெரிய அளவில் செயற்கை மழை பெய்விக்கப்படுகின்றது.

# செவ்வாய் மனிதனுக்கு ஏற்ற இடம்தானா..?

அடுத்த 30 ஆண்டுகளுக்குள் செவ்வாய் கோளுக்கு மனிதர்களை அனுப்பப் போவதாக அமெரிக்க அதிபர் புஷ் கூறியிருக்கிறார். அதற்கு முன்னேற்பாடாக அடுத்த பத்தாண்டுகளுக்குள் செவ்வாய் கோளில் ரோபோ மனித எந்திரத்தைக் கொண்டு போய் இறக்கவும் செவ்வாய்க் கோளை வலம்வர செயற்கைக் கோளை அனுப்பவும் அமெரிக்காவின் நாசா விண்வெளி அமைப்பும், ஐரோப்பிய விண்வெளி அமைப்பும் திட்டமிட்டுள்ளன.

அது சரி ஆனால் செவ்வாய்க் கோள், மனிதன் வசிப்பதற்கு ஏற்ற இடம்தானா அல்லது அங்கேயும் தண்ணீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடுமா அந்தக் கவலை வேண்டாம் என்கிறார் அமெரிக்க விஞ்ஞானி மேரி பௌர்க். அண்மையில் டப்ளின் நகரில் பிரிட்டிஷ் சங்கத்தின்அறிவியல் விழாவில் பேசிய அவர் மக்களின் இந்த சந்தேகத்தை நீக்கக் கூடிய சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

சூரியக் குடும்பத்திலேயே மிகப் பெரிய மணல் திட்டுக்கள் செவ்வாய்க் கோளில் உள்ளன. இவற்றில் 50 விழுக்காடு வரை பனியும் உறைபனியும் கலந்திருக்கலாம் என்கிறார்.



செவ்வாய்க் கோளில் எப்போதாவது உயிரினங்கள் வசித்த னவா செவ்வாய்க் கோளின் மண்ணுக்கு அடியில் இன்னமும் சில நுண்ணியிரிகள் புதைந்திருக்கக் கூடுமா என்ற கேள்விகளுக்கும் விடைகாணத் துடிக்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். ஏனென்றால் செவ்வாய் கோள் முழுவதும் மண் திட்டுக்கள் நிரம்பியுள்ளன. செவ்வாய் கோளில் மனிதன் காலடி எடுத்து வைத்ததும் அருகில் தென்படக் கூடிய ஒரு மணல் திட்டுக்குப் போய் அதைத் தோண்டினால் தண்ணீர் கிடைக்கக் கூடும் என்று கூறும் மேரி பௌர்க் செவ்வாய்க் கோள் வட துருவத்தில் உள்ள மணல்கடல் மற்றும் தென்பகுதியின் மணல் திட்டுப் பள்ளம் ஆகியவற்றின் செற்கைக் கோள் படங்களை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்திருக்கிறார். இவற்றின் புவியியல் தன்மைகளை ஆராய்ந்ததில் தண்ணீரினால் கெட்டிப் பட்டவைதான் இந்த இரண்டு மணல் திட்டுக்கள் என்ற முடிவுக்கு வந்திருக்கின்றார்.

பகுதி-02

# மகிந்த ராஜபக்ஷவின் வெளியுறவுக்கொள்கை

உலகப்பொருளாதார மன்றத்தின் ஒரு பகுதியாக புதுடில்லியில் அண்மையில் இந்தியப் பொருளாதார உச்சிமாநாடு நடந்தது. இதில் உரையாற்றிய இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங் பின்வருமாறு கூறியிருக்கிறார்...

"இந்தியப் பொருளாதாரம் எதிர்பாராத அளவுக்கு வளர்ந்துகொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகாலகட்டத்துள் பத்து வீத வளர்ச்சியை நாம் இலக்குவைக்க வேண்டும்.அது பெருமளவுக்குச் சாத்தியமானது....... இந்தியப்பொருளாதாரம் மிகவும் திறந்ததாக மாறியிருக்கிறது. பூகோள ரீதியாக போட்டிபோடவல்லதாக மாறியிருக்கிறது. எனினும் எம்மத்தியில் தொடர்ந்தும் ஐயுறவு வாதிகளும் கவலைப்படுவோரும் விமர்சகர்களும் உண்டு.சிலர் மாற்றங்களைக்குறித்து நேர்மையான கவலைகளைக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களோ இறந்தகாலத்தின் கைதிகளாய் இருக்கிறார்கள்...."





இந்தியா இறந்தகாலத்தில் வாழவிரும்பவில்லை என்று மன்மோகன்சிங் கூறுகிறார். அதாவது கெடுபிடிப்போர் காலத்து காலாவதியான வியூகங்களை இந்தியா சுமக்கத் தயாரில்லை என்று இதற்கு அர்த்தம்.

ஆனால் பெரிய இந்தியாவுக்கு அருகேயுள்ள சின்னஞ்சிறிய இலங்கைத்தீவில் திருமகிந்த ராஜபக்ஷ இறந்தகாலத்தில் வாழப்போவதாகக் கூறுகிறார்.தேர்தலில் அவர் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் சிங்கள மக்களை இறந்த காலத்துக்கு இட்டுச்செல்பவைதான். இப்படி இறந்த காலத்துக்கு திரும்பிச் செல்ல முற்படும் மகிந்த இந்திய மைய-இண்டோசென்ரிக்- வெளியுறவுக்கொள்கை ஒன்றையே தனது மனதில் வைத்திருப்பவராக தோற்றம் காட்டுகிறார்.

தகவல் யுகத்தின் மிகவேகமாக வளர்ந்து வரும் இரண்டாவது பெரிய பொருளாதாரமாகக் காணப்படும் இந்தியா மகிந்தவுடன் சேர்ந்து இறந்து காலத்துக்கு இழுபட தயாராக இருக்குமா?

இப்போதைக்கு உடனடியாக அவர்கள் அதற்குத் தயாரில்லை என்றே தோன்றுகிறது. பதவியேற்றவுடனேயே மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெறுவது போல புதுடில்லிக்கு ஓடிப்போன மங்கள சமரவீரவுக்கும் அப்படியொரு பதிலே தரப்பட்டதாக தெரிகிறது.

இதனால்தான் நோர்வேயை மறுபடியும் அனுசரணை செய்யுமாறு மகிந்த கேட்டிருக்கிறார். இது விசயத்தில் அவர் ஜே.வி.பி,ஜாதிக ஹெல உறுமய என்பவற்றுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளிலிருந்து தற்காலிகமாகவேனும் சற்றே விலகி வந்துவிட்டார் என்றே தோன்றுகிறது.அதாவது பதவியேற்று சிலவாரங்களுக்குள்ளேயே மகிந்த தனது வெளியுறவுக்கொள்கைக்கு இருக்கக்கூடிய வரையறைகளையும் தனது சிந்தனைகளுக்கு இருக்கக்கூடிய சர்வதேச மற்றும் பிராந்திய வரையறைகளையும் உணரத்தொடங்கி விட்டார் எனலாம்.

மேலும் அவருடையபட்ஜெட்டில் அவர் வழங்கியிருக்கும் கவர்ச்சியான வாக்குறுதிகளின் படி அவர்மேலும் மேலும் தனது சிந்தனைகளிலிருந்து பின்வாங்க வேண்டியிருக்கும் என்றே தோன்றுகிறது. சிறியதும் வறியதுமான சிறிலங்கா தனது பட்ஜெட் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக தவிர்க்கவியலாதபடி உதவிவழங்கும் நாடுகளிடமே கையேந்த வேண்டி வரும்.அதாவது உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம் போன்றவற்றின் உலகளாவிய வியூகத்துள் விழநேரிடும்.

அப்படியொரு நிலைதோன்றும் போதுமகிந்தவின் வெளியுறவுக்கொள்கை மேலும் மேலும் நெருக்கடிக்குள்ளாகும். இந்திய மைய அல்லது பிராந்திய மைய வெளியுறவுக் கொள்கை என்று அவர்சொல்லிக் கொண்டிருப்பதிலிருந்து பின்வாங்கினால் தவிர அவர் தனது பட்ஜெட் வாக்குறுதிகளை முழு அளவுநிறைவேற்ற முடியாது.

ஆயின் மகிந்த குத்துக்கரணம் அடிப்பாரா?

தனது அணிசேரா மற்றும் ஆசிய மைய வெளியுறவுக் கொள்கைகளை சந்தடியின்றிக் கைவிடுவாரா? அல்லது அவற்றில் மாற்றங்களைக் கொண்டுவருவாரா?

மகிந்த மாறமாட்டார் என்று சொல்வதற்கு உத்தரவாதங்கள் இல்லை.ஏனெனில் சிங்களத் தலைவர்களின் வெளியுறவுக்கொள்கை எனப்படுவது ஒரு மாறிலியான அம்சம் அல்ல. கொழும்பில் மாறிலியான ஒரேயொரு அம்சம் தான் உண்டு.அது தமிழர்களை தோற்கடிப்பது என்ற சிந்தனையே.

**நிலாந்தன்**

தமிழர்களைத் தோற்கடிப்பது என்ற மாறாத ஒரே அம்சத்தின் மீது சிங்களத் தலைவர்களின்வெளியுறவுக்கொள்கைகள் காலத்துக்குக்காலம் சமயோசிதமாக மாற்றப்பட்டு வந்திருக்கின்றன.

எண்பதுகளில் கெடுபிடிப்போர்க்காலத்தில் ஜெயவர்த்தன அமெரிக்க மைய வெளியுறவுக் கொள்கையைக் கடைப்பிடித்தார்.ஆனால் ஒரு கட்டத்தில் இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவை மீறிப்போவதில் உள்ள நடைமுறை வரையறைகளை இந்தியா வானிலிருந்து உணவுப் பொதிகளைப் போட்டு உணர்த்தியபோது ஜே.ஆர் சரணடைந்தார். இந்தியாவுடன் ஒரு உடன்படிக்கைக்கும் போனார். பின்னர் அந்த உடன்படிக்கையை ஒரு பொறியாக மாற்றி புலிகளையும் இந்தியாவையும் மோதவிட்டார்.

இந்திய இலங்கை உடன்படிக்கையை அப்போது எதிர்க்கட்சியாக இருந்த எஸ்.எல்.எவ்.பி கடுமையாக எதிர்த்தது. அப்பொழுது மகிந்த கட்சியின் பிரதானிகள் வரிசையில் இருந்தார். ஆனால் இப்பொழுது அவர் இந்தியாவை மையப்படுத்தும் ஒரு பிராந்திய வியூகத்தை வகுத்து அதற்குள் புலிகளைச்சிக்கவைக்கத் திட்டமிடுகிறார்.

அதிகம் போவானேன்?. இப்பொழுது மகிந்தவின் கூட்டாளியாக இருக்கும் ஜே.வி.பி அந்நாட்களில் இந்திய விஸ்தரிப்புவாதத்தை விட்டுக்கொடுப்பின்றி எதிர்த்தது.ஜே.வி.பியின் முதலாவது கிளர்ச்சியை ஒடுக்கியதில் இந்தியாவுக்கும் கணிசமான பங்குண்டு. பின்னாளில் ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சியின் போது ஜே.வி.பி இந்தியப் பொருட்களைத்தடைசெய்தது. பம்பாய் வெங்காயத்தைக் கூட இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கருவியாகக் கொண்டது. அந்நாட்களில் இந்தியப்பொருட்களை விற்ற மற்றும் வாங்கியவர்களை அது மிகக் குரூரமாகத் தண்டித்தது. ஆனால் இப்பொழுது இந்தியாவின் துணையுடன் புலிகளை நசுக்க வேண்டும் என்று ஜே.வி.பி சிந்திக்கிறது.

எனவே சிங்களத்தலைவர்களின் வெளியுறவுக்கொள்கை எனப்படுவது மாறிலியான ஓர் அம்சம் அல்ல.மாறாக மாறிலியான அம்சமாயிருப்பது தமிழர்களைத் தோற்கடிக்கவேண்டும் என்ற அந்தச் சிந்தனைதான்.

மகிந்தராஜபக்ஷவும் இந்த வெளியுறவுக் கொள்கைகளின் நீட்சியாக முடிவெடுப்பதற்குரிய அகப்புறநிலைமைகளே அதிகம் தென்படுகின்றன. இதன் அர்த்தம்அவர் ஒரேயாடியாக தனது தேர்தல் வாக்குறுதிகளை கைவிட்டு விடுவார் என்பதல்ல.அப்படிக் கைவிடவும் அவரால் முடியாது. ஏனெனில் அவர் இப்பொழுது அவரே பெற்றவெற்றிகளின் கைதி. எனவே அவரால் உசுப்பி விடப்பட்டிருக்கும் சக்திகளுக்குத் தலைமை தாங்குவதைத்தவிர வேறுதெரிவு இப்போதைக்குஅவருக்கு இல்லை. அதாவது இருபத்தியோராம் நூற்றாண்டின் சிங்கள இனவாதத்துக்கு அவர் தலைமைதாங்க வேண்டும்.

ஆனால்அப்படித் தலைமை தாங்குவது என்பது தற்சமயம் நிலவும் பூகோள அரசியல் பொருளாதார யதார்த்தத்திற்கு முரணாகச் சென்றுவிடாதபடியும் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கும். அதாவது இருபத்தியொராம் நூற்றாண்டின் பூகோள அரசியல் பொருளாதார யதார்த்தத்திற்கும் பணியவேண்டும்.அதே சமயம் இருபத்தியோராம் நூற்றாண்டின் இனவாதத்திற்கும் தலைமை தாங்க வேண்டும்.இந்த இரண்டு அம்சங்களுக்குமிடையில் ஏதாவதொரு சமநிலையைக் கண்டுபிடிக்கும் போதே அவருடைய வெளியுறவுக் கொள்கை அதன் இறுதிவடிவத்தை பெறமுடியும்.

கெடுபிடிப்போருக்குப் பிந்திய உலகம் தொழிநுட்ப ரீதியாகவும்,பொருளாதார ரீதியாவும் அதிகமதிகம் அமெரிக்க மைய உலகமாக மாறிவருகிறது.இந்த யதார்த்தத்தை உள்வாங்கியே பெரிய இந்தியா, மன்மோகன் சிங்கின் வார்த்தைகளில் கூறின் " மிகவும் திறந்ததாக" மாறியிருக்கிறது. பெரிய இந்தியாவே தன்னைத் திறந்து வைத்திருக்கும் போது சின்னஞ்சிறிய சிறிலங்கா தன்னை எப்படி பிராந்திய எல்லைகளுக்குள் மூடிவைத்திருக்க முடியும்? அதுவும் உள்நாட்டுப்போரால் அதிகம் சின்னாபின்னப்பட்டுக்கிடக்கும் சிறிலங்கா இது விசயத்தில் சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் முடிவெடுக்கமுடியுமா?

எப்பொழுது கொழும்பில் உள்ள அரசாங்கங்கள் தமிழர்களைத் தோற்கடிப்பது என்ற இலட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு தமது வெளியுறவுக்கொள்கையை வகுக்கும்ஒரு நிலை தோன்றியதோ அப்பொழுதே சிறிய இலங்கைத்தீவு சர்வதேச மற்றும் பிராந்திய அளவில் தனது பேரம்பேசும் சக்தியை இழக்கத் தொடங்கிவிட்டது.தமிழர்களைத் தோற்கடிப்பதற்காக அவர்கள் யாருடன் எல்லாம் கூட்டுச் சேர்ந்தார்களோ, எந்தளவுக்கு இறங்கிச் சென்றார்களோ அந்தளவுக்கு அவர்களுடைய பேரம் பேசும் சக்தியும் குறைந்துகொண்டே வந்திருக்கிறது.

பேரம் பேசும் சக்தி குறையக் குறைய நாட்டின் இறைமையும் நலிந்துகொண்டே செல்லும்.1987 இல் இலங்கை வான்பரப்பில் இந்தியப் போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்து உணவுப்பொதிகளைப் போட்ட அக்கணத்திலேயே சிறிலங்காவின் இறைமை ஆத்தமிழந்துவிட்டது என்று சில விமர்சகர்கள் கூறுவதுண்டு. இந்நிலையில் அண்மையில் தன்னைச் சந்தித்த யசூசி அகாசியிடம் மகிந்த ராஜபக்ஷ இலங்கைத் தீவின் இறைமை பற்றி கதைத்திருக்கிறார்.


அவர் நினைக்கிறார் வெள்ளை வேட்டியும்,வெள்ளை நஷனலும்அணிந்து செங்கட்டிச் சிவப்பில் ஒரு துண்டையும் கழுத்தில் போட்டுக்கொண்டு இனிமேல் உத்தியோகபூர்வ வைபவங்களில் சிங்களத்திலேயே கதைக்கப் போவதாக சொல்வதன் மூலம்சிறிலங்கா ஒரு இறைமையுடையநாடு என்று நம்பச்செய்து விடலாம் என்று.

இல்லாத இறைமை பற்றிய அவருடைய இத்தகைய கற்பனைகளின் அடிப்படையிலேயே அவர் தொடர்ந்தும் சிந்திப்பாராக இருந்தால் அவருடைய வெளியுறவுக் கொள்கை எனப்படுவது அகமுரண்பாடுகளின் கதம்பமாகவும் அடிக்கடி மாற்றப்படுவதாகவுமே காணப்படும்.

தனது நாடு எப்பொழுது எங்கேயிருந்து அதன் பேரம்பேசும் சக்தியை இழக்கத் தொடங்கியது என்பதை அவர் கண்டுபிடிக்காதவரை அவரால் ஸ்திரமானதும், சுதந்திரமானதும், சுயாதீன மானதுமாகிய ஒரு வெளியுறவுக் கொள்கையை வகுக்கவே முடியாது. ஏனெனில் இறைமையற்ற ஒரு நாடு என்றைக்குமே சுதந்திரமான, சுயாதீனமான ஒரு வெளியுறவுக் கொள்கையைக் கொண்டிருந்ததில்லை.

# நறுக்கென...

## பயணங்களும் பிற உதவிகளும்



அண்மையில்தான் இலங்கைக்கு இந்திய இராணுவத்தின் தென்பகுதி இராணுவத்தளபதி லெப். ஜெனரல் தக்கார் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன் பின்னர் இலங்கைக்கு இரண்டு இந்திய கடற்படைக் கப்பல்கள் வந்திருந்தன. அவை இலங்கை கடற்படையின ரோடு இணைந்து ஒரு கடற்பயிற்சி ஒத்திகை ஒன்றில் ஈடுபட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதற்காக இந்தியாவின் கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சுரேஷ்மேத்தா ஒரு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

இந்தப் பயணங்கள் இப்பிடியிருக்க பலாலி விமானத் தளத்தை விஸ்தரிப்பதற்கான நிதி உதவியை சிறிலங்கா அரசிற்கு இந்திய அரசு வழங்க இருப்பதோடு பலாலி விமானத்தள விஸ்தரிப்பிலும் இந்திய இராணுவ பொறியிலாளர்கள் ஈடுபட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியாவை பங்கெடுக்கச் செய்யும் சிறிலங்கா அரசின் விருப்பத்தில் நேரடிப் பங்கெடுப்பதிலிருந்து விலகிக்கொண்ட இந்தியா தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்திருக்கும்சிறிலங்கா படை இயந்திரத்தை பலப்படுத்துவதில் சிறிலங்கா அரசோடு இந்தியா நெருங்கி செயற்படுகிறது.

தீர்வு காணப்படாது ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினை நீண்டு சென்று கொண்டிருக்கும் நிலையில் சிறிலங்கா இராணுவஇயந்திரத்தை பலப்படுத்துவதென்பது தமிழ்மக்களின் அரசியல் இருப்பிற்கு ஆபத்தை விளைவிக்க வல்லது என்பது இந்தியாவுக்கு தெரியாததல்ல.


ஆயினும் சிறிலங்கா இராணுவ இயந்திரத்திற்கு இராணுவ ரீதியில் இந்தியா முண்டுகொடுக்க நினைப்பதென்பது இந்தியா கூறுவது போல இலங்கைப் பிரச்சினையில் இந்தியா பார்வையாளர்களாக இருப்பதாககொள்ள முடியாது.

இந்தியாவின் இத்தகைய செயற்பாடானது சிறிலங்கா அரசை ஒரு இராணுவ வலிமையில் இருக்கச் செய்து அதனூடாக அரசு ஏதாவது ஒரு அற்ப சொற்ப தீர்வுகளை தூக்கியெறியட்டும் என விரும்புவதையே காட்டுகிறது.

இந்தியாவின் இந்த நிலைப்பாடானது ஈழத்தமிழ் மக்களை மட்டும், இந்தியா புறந்தள்ளவில்லை. பதிலாக இந்தியாவின் தமிழக மக்களின் உணர்வுகளையும் சேர்த்தே புறந்தள்ளுகிறது.

இந்தவகையில் இந்தியா இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒன்றும் பார்வையாளராக இருப்பதாக கூறுவதை ஏற்கமுடியாது.அது தமிழ் மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய சிறிலங்கா அரசின் முயற்சிகளுக்கு ஏதாவதொரு வகையில் தனது பங்களிப்பை ஆற்றியே வருகிறது.

## அகாசியின் பயணம்..!



ஐந்துநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு யப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசி இலங்கைக்கு வந்து சென்றுள்ளார்.

யசூசி அகாசிக்கு இம்முறை இலங்கைக்கான பயணம் அவ்வளவு இனிமையானதொரு பயணமாக நிச்சயம் இருந் திருக்காது.

இதனை உறுதிப்படுத்துமாப் போன்றே அவரும் பல விடயங்களைப் பத்திரிகையாளர் சந்திப்பிலும், மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலும் தெரிவித்திருந்தார்.

யசூசிஅகாசியின் பயணத்தின் ஒரு அங்கமாக கிழக்கு மாகாணத்துக்கு மட்டுமே அவரால் பயணத்தை மேற்கொள்ள முடிந்தது.

சமாதான முயற்சியின் ஒரு தரப்பான அரச தரப்பையும், அனுசரணையாளர்களான நோர்வேயின் இலங்கைக்கான தூதரையும் மட்டுமே சந்திக்க முடிந்தது.

யசூசி அகாசி யப்பானின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவராக இருந்த போதிலும், சமாதான முயற்சியின் இன்னுமொரு தரப்பான புலிகளின் தலைமைகளை சந்திக்கவோ,வன்னிக்குச் செல்லவோ அவருக்கு அனுமதியை வழங்க அரசு மறுத்துவிட்டது.

அரசின் இந்த நடவடிக்கையானது சமாதான முயற்சியானது மிகவும் நெருக்கடியான ஒருகட்டத்தை நோக்கி சென்றுகொண்டிருப்பதை அகாசி நிச்சயம் புரிந்திருப்பார்.


அத்தோடு சமாதான முயற்சியினை புதிய அரசு குற்றுயிரும் குலையுயிருமாக்கும் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியிருக்கிறது என்பதையும் நிச்சயம் புரிந்துகொண்டிருப்பார்.

ஏனெனில் சர்வதேச சமூகத்தின் அனுசரணையோடு மேற்கொள்ளப்படும் இந்த சமாதான செயற்பாடுகளிலிருந்து சர்வதேச சமூகத்தை புலிகள் இயக்கத்தோடு மேற்கொள்ள வேண்டிய தொடர்புகளை அரசு மட்டுப்படுத்த முனைகிறது.

ஒரு தடையற்ற தொடர்பு இல்லாதபட்சத்தில் சமாதான முயற்சியில் தமிழர் தரப்பின் நியாயங்கள் வெளித்தெரிவதில் பல சிக்கல்களை ஏற்படுத்தலாம் என்பதோடு சமாதான முயற்சி முன்னகர்வதிலும் பல சிக்கல்களை தோற்றுவிக்கும்.

இதனை யசூசிஅகாசி இம்முறை இலங்கை விஜயத்தின் போது புரிந்துகொண்டிருப் பார்.அந்தவகையில் எதிர்வரும் நாட்களில் பிரசெல்ஷில் கூடவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் மாநாட்டில் ஆக்கபூர்வமான பல விடயங்கள்ஆராயப்படும் என எதிர்பார்க்கலாம். அங்கு யசூசி இலங்கைக்கான தனது பயண அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வார் எனவும் எதிர்பார்க்கலாம்.

## சந்தேகம் தரும் படைத்தரப்புக்கான மறுப்பு..!



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் எந்தவொரு சந்திப்பையும் மேற்கொள்ளக் கூடாது என்று அனைத்துப் பாதுகாப்புப் படையதிகாரிகளுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.இதை உறுதிப்படுத்துமாப் போன்றே அணமையில் பிரதமரும் பிரதிவெளிவிவகார அமைச்சருமாகிய ரட்ணசிறி விக்கிரமநாயக்க முப்படையினரும் எந்தப் பேச்சுவார்த்தைகளிலும் கலந்துகொள்ள வேண்டிய தேவை எதுவும் இல்லையெனவும் முப்படையினர் எல்லைகளைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டால் போதுமானதென தெரிவித் திருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசில் பிரதி பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்புச் செயலர் புதிய இராணுவத்தளபதி என படைத்தரப்பை பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் எல்லோருமே கடும் போக்காளர்களாகவேகாணப்படுகின்றனர்.

இந்தநிலையில் அரசு- புலிகளுக்கிடையில் செய்துகொள்ளப்பட்டபுரிந்துணர்வு உடன்படிக்கை யின் அமுலாக்கத்தில் பிரதான பங்கு வகிக்கின்றவர்கள் பாதுகாப்புத் தரப்பினரே.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள சரத்துக்களின் படி நடந்துகொள்ளாத்துடன் அவற்றை முறிக்கும் வகையிலானசெயற்பாடுகளிலும் இந்தப்படைத்தரப்பினரே ஈடுபட்டு வருகின்றனர்.

மக்களின் பெரும் வாழ்விடங்களையும் மாணவர்கள் கல்விகற்க வேண்டிய பாடசாலை களையும் இராணுவமுகாம்களாக பயன்படுத்துகின்ற மையும், ஒட்டுக்குழுக்களைப் பயன்படுத்தி கொலை, வன்முறைச்சம்பவங்களிலும் பிரதான பங்கெடுப்பவர்கள் படைப்பதரப்பினரே.

ஆயினும் இந்தப்படைத்தரப்பினரும்-புலிகளும் சந்திப்புக்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் கண்காணிப்புக்குழுவினருக்கே அதிகமிருந்தது.


முன்பும் மாவட்ட மட்டங்களில் படைத்தரப்பினரோடு பல சந்திப்புக்களை புலிகள் இயக்கம் நடத்தியபோதும் அங்கு எடுக்கப்பட்ட உடன்பாடுகள் எதனையும் அமுல்படுத்துவதில் படைத்தரப்பினர் அக்கறை காட்டியது கிடையாது.

இந்தநிலையல் படைத்தரப்பினருடனான சந்திப்புக்களை புலிகள் இயக்கம் தவிர்த்தே வந்துள்ளனர். இந்தவகையில் பாதுகாப்பு அமைச்சு தற்போது எடுத்திருக்கும் இந்த முடிவு புலிகள் இயக்கத்தை பொறுத்தவரை ஒரு பெரிய விவாகரமேயல்ல.

ஆனால் கடும் போக்குக் கொண்ட ஒரு புதிய இராணுவத்தளபதியின் நியமனத்தின் பின்னணியில் அரசு மேற்கொள்ளும் இந்த உத்தியோகபூர்வமான முடிவானது இனிவரும் காலங்களில் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்துவிடப்போகும் வன்முறைகளுக்கான முன்னோடி நிகழ்ச்சியாக இது இருக்கலாம் என்ற சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

ஏனெனில் நாம் செய்வதை செய்வோம் எம்மை எவரும் கேட்கமுடியாது என படைத்தரப்பு நடந்துகொள்ளப் போவதைத்தான் இது காட்டுகிறது போலும்.

## ஹெல உறுமயவினரின் கபட நோக்கம்



சமாதான நடவடிக்கைகளில் அனுசரணைப்பணி வகிக்கும் நோர்வே அரசாங்கம் அதிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென்ற தமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை யென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக்கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவிக்கையில், இந்தியாவிற்கு இணைத்தலைமைத்துவத்தை வழங்கவேண்டும். விடுதலைப் புலிகள் தொடர்பான விடயத்தில் தமக்கு உரிய நியாயமான தீர்ப்பு வழங்கப்படுவதில்லை.இதனால் மூன்றாவது மத்தியஸ் தம் ஒன்று தேவைப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

என்னவோ தாங்கள் நியாயமாக நடந்துகொள்கிற போதும் தமக்கு எந்தநியாயமும் வழங்கப்படுவதில்லையென்பது போலவும் இந்த ஹெல உறுமயவினர் கோசமிடுகின்றனர்.

உண்மையில் இந்த ஜாதிக ஹெல உறுமயக்கட்சியின் சின்னமான அம்பும் வில்லும் எப்படி ஆதிவாசிக்குரிய ஆயுதமோ அந்தவகையில் அது எவ்வளவு பழமைவாய்ந்ததோ அதேபோன்றே இந்த ஹெல உறுயக்கட்சியினரின் சிந்தனையும் நோக்கும்.காலத்துக்குப்பொருந்தும் வகையிலில்லாமல் ஆதிவாசிகள் போன்று உலகம் புரிந்துகொள்ளப் போகாக்சோசங்களை இட்டுவருகின்றனர்.

அத்தோடு எப்படியாவது இந்தப்பிரச்சினைக்குள் இந்தியாவை மாட்டிவிட்டு வேடிக்கை பார்க்க வேண்டும் என்பதில் இந்த ஹெல உறுமயக்காரர்களுக்கு தீராத காதல்.

இந்தியா என்ன கொக்கா...? ஹெல உறுமயவின் கூச்சலுக்கு செவிசாய்க்க.

இந்தக்ஹெல உறுமயவின் செயற்பாட்டையும், இந்தியாவின் நடவடிக்கைகளையும் பார்க்கும் போது என்னவோ சோழர்காலத்தை நினைவுபடுத்துகிறது.

ஏனெனின் இராஜேந்திரசோழன் இலங்கைக்கு வந்த போது பிக்குகளால் இலங்கையின் மணிமகுடத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இராஜேந்திரசோழனிடம் மணிமகுடத்தை வழங்கிய போது இராஜேந்திர சோழன் அதனை ஏற்காது விலகிச்சென்றான்.

காரணம் பிக்குகள்வழங்கும் அந்த மணி மகுடம் சோழர்களுக்கு வழங்கப்படும் விலங்கு என்பதை அன்றே அந்த இராஜேந்திர சோழன் உணர்ந்து செயற்பட்டான்.

இந்தவகையில் ஜாதி ஹெல உறுமயவினர் கூச்சலிடுவது போல நோர்வேயை அனுசரணைப்பணியிலி[illegible] நீக்க வேண்டிய அவசியம் என்ன? இந்தியாவை கொண்டுவரவேண்டிய தேவ[illegible]? என்பதற்கு ஹெல உறுமயவினர் போன்றோர் கூறும் காரணங்கள் காரணங்களே அ[illegible]

இந்த நாட்டில் தமிழ் மக்க[illegible] அடிமைகளாக தாம் வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காவேயன்றி வேறொன்றுக்குமல்ல.

வேழினி

# தமிழ் மக்கள் மீதான அரச வன்முறைகளை உலகம் கண்டுகொண்டதாக இல்லை

## வடக்கு கிழக்கு மனித உரிமைச் செயலாளர் கலாநிதி ந. மாலதி

**வடக்கு கிழக்கு மனித உரிமைச் செயலாளர் நாயகம் கலாநிதி ந.மாலதி அவர்கள் வழங்கிய பேட்டி.**

தமிழ்மக்கள் மீது அரச வன்முறைகள் மூலமாக மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச சமூகம் புரிந்து கொள்வதாக இல்லை. இந்த நிலையில் தமிழர் தாயகத்தின் யதார்த்தம் வேறு. ஆனால் சர்வதேச சமூகத்தின் பார்வை வேறாகவேயுள்ளது. விடுதலைக்காகப் போராடும் மக்களின் அடிப்படை மனித உரிமை பற்றி சர்வதேச சமூகம் சரியாகப் புரிந்து கொள்வதாகத் தெரியவில்லை என வடக்கு கிழக்கு மனித உரிமைச் செயலகத்தின் செயலாளர் கலாநிதி ந.மாலதி தெரிவித்தார்.

அவர் வழங்கிய பேட்டியின் முழு விபரம் வருமாறு;

**கேள்வி:-தமிழ்மக்களின் மனித உரிமை பேணப்படும் நிலையை சர்வதேச சமூகம் எப்படியான பார்வையில் நோக்குகின்றது?**

பதில்:-மனித உரிமைகள் என்ற பதத்திற்கு மூன்று மட்டங்களில் கருத்துக்கள் சொல்லலாம். ஒன்று சாதாரண மக்கள் என்றும் அவர்களின் சமத்துவமான ஒருங்கிணைந்த வாழ்வு. இரண்டாவது ஐ.நா சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட மனித உரிமை சாசனங்கள். இவை அரசுகளால் எழுதப்பட்ட சாசனங்கள் என்பதை மனதில் எப்போதும் வைத்துக்கொள்ள வேண்டும். மூன்றாவதாக மனித உரிமைகள் பற்றிப் பேசும் அரசசார்பற்ற நிறுவனங்களும், அவர்கள் ஐ.நா மனித உரிமைகள் சாசனங்களிலிருந்து தம்முடைய விருப்பத்திற்கு ஏற்ப தெரிந்தெடுத்து விமர்சிக்கும் தன்மையும் அதனூடாக மேலோங்கும் கருத்துக்களையும் சொல்லலாம்.



இம்மூன்று கருத்துக்களில் உலக மக்கள் மிக அதிகமாக மூன்றாம் மட்ட கருத்துக்களாலேயே ஆக்கிரமிக்கப்படுகின்றனர். இதனால் உண்மையான சாதாரண மக்கள் விரும்பும் மனித உரிமை கருத்து மறைக்கப்படுகின்றது. இதனாலேயே தமிழ் மக்களின் மனித உரிமை நிலைப்பாடு பற்றிய பெரியதொரு மயக்கம் உலக மக்களிடம் காணப்படுகின்றது.

தமிழ் மக்கள் மீதான அரச பயங்கரவாத மனித உரிமை மீறல்களை சர்வதேச சமூகமும் பன்னாட்டு மனித உரிமை நிறுவனங்களும் கவனமெடுப்பதாகவோ அதனை நேர்மையான முறையில் கையாள்வதாகவே தெரியவில்லை.

**கேள்வி:-வடகிழக்கில் இடம்பெற்று வரும் இனப்பிரச்சினையால் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் பற்றி பல்வேறு புள்ளி விபரங்கள் வெளிவந்திருக்கின்றன. இது பற்றி சரியான தகவல்கள் உண்டா? மாவட்டரீதியில் தரமுடியுமா?**

பதில்:-வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் வடகிழக்கு புள்ளி விபரப்பகுதியுடன் சேர்ந்து 1977 ஆம் ஆண்டிலிருந்து பாதிக்கப்பட்டவர்களின் விபரத்தைத்தேடும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளது. இதுவரை தொகுக்கப்பட்ட புள்ளி விபரங்கள் அட்டவணை-01 இல் கீழே தரப்பட்டுள்ளது. இதில் கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் மிகப்பெரிய இடப்பெயர்வுகளினால் சிதறிக்கிடக்கும் வடகிழக்கு சமூகத்திடமிருந்து புள்ளிவிபரங்களைத் திரட்டுவது மிகப்பெரிய சவாலாக உள்ளது.இதனால் கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் முழுமையானவை என்று நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. மேலதிகமாக திரட்டுவதற்கு பல விடயங்கள் உள்ளன.

அட்டவணை-01

**1977 ஆம் ஆண்டுக்குப் பின் யுத்தத்தின் போது சகல தரப்பினராலும் வடக்கு கிழக்கில் பாதிப்படைந்த பொதுமக்களின் வயது ரீதயிலான பரம்பல்.**

| பாதிப்பின்தன்மை | 10இற்குகீழ் | 11-20 | 21-30 | 31-40 | 41-50 | 51-60 | 61-70 | 71-80 | 80இற்குமேல் | வயது தெரியாதவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இறப்பு | 1185 | 7177 | 11318 | 5428 | 3479 | 2389 | 1578 | 795 | 207 | 1767 | 33556 |
| ஊனம் | 143 | 738 | 1126 | 611 | 446 | 213 | 96 | 39 | 05 | 117 | 3417 |
| காயம் | 444 | 1500 | 1756 | 1266 | 898 | 476 | 216 | 69 | 20 | 160 | 6645 |
| காணாமற் போனவர் | 23 | 500 | 942 | 366 | 167 | 84 | 37 | 20 | 07 | 337 | 2146 |
| கைது | 39 | 1587 | 3374 | 1740 | 777 | 236 | 49 | 12 | 03 | 00 | 7817 |
| சித்திரவதை | 21 | 679 | 1418 | 827 | 354 | 104 | 33 | 04 | 00 | 733 | 3440 |
| சித்தசுவாதீனம் | 43 | 46 | 80 | 59 | 48 | 15 | 15 | 01 | 00 | 65 | 307 |
| மொத்தம் | 1898 | 12227 | 20014 | 10297 | 6169 | 3517 | 2024 | 940 | 242 | 3179 | 57328 |

**கேள்வி:-தமிழர் தாயகத்தில் சிறிலங்காப் படையினரால் அழிக்கப்பட்ட வழிபாட்டுத் தலங்கள் பற்றிய விபரம் தங்களிடம் உண்டா? அது பற்றி விபரிக்கமுடியுமா?**

பதில்:-சிறிலங்காப் படையினரால் வடகிழக்கில் உள்ளவழிபாட்டுத்தலங்கள் தேடி அழிக்கப்பட்ட சம்பவங்கள் ஏராளம். மூன்று மதங்களையும் (அதாவது சைவ,கிறிஸ்தவ,முஸ்லிம்) சார்ந்த மக்களின் கலாச்சார வாழ்வு இவ் வழிபாட்டுத் தலங்களையே மையமாகக் கொண்டிருந்தன. இப்படி சிறிலங்காப் படையினர் வழிபாட்டுத்தலங்களை தேடி அழித்தமை ஓர் கலாச்சார அழிவை திட்டமிட்டுச் செயற்படுத்தியதாகவே நாங்கள் பார்க்க வேண்டும். இதற்கு ஆதாரமாக அட்டவணை-02 இல் காணப்படும் அழிக்கப்பட்ட வழிபாட்டுத் தலங்களின் தொகையைக் காட்டலாம்.

இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் 2355 ஆலயங்கள் அழிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டுமிருக்கின்றன. ஆனால் மாவட்ட ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட மேலுள்ள அட்டவணையில் 1621 ஆலயங்கள் அழிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும் உள்ளன. இது தொடர்பான தகவல்களைத் தொடர்ந்து திரட்டும் முயற்சியில் வடக்குகிழக்கு மனித உரிமைகள் செயலகம் ஈடுபட்டுள்ளது?

அட்டவணை-02

**அழிக்கப்பட்டதும் சேதமாக்கப்பட்டதுமான ஆலயங்களின் மாவட்ட ரீதியான விபரங்கள்**

| மாவட்டங்கள் | தொகை |
|---|---|
| அம்பாறை | 62 |
| மட்டக்களப்பு | 108 |
| யாழ்ப்பாணம் | 612 |
| கிளிநொச்சி | 353 |
| மன்னார் | 16 |
| முல்லைத்தீவு | 210 |
| திருகோணமலை | 131 |
| வவுனியா | 129 |
| மொத்தம் | 1621 |

**கேள்வி:-தமிழர் தாயகப் பகுதியில் படையினரால் அழிக்கப்பட்ட பாடசாலைகள் எத்தனை? இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பாடசாலைகள் எத்தனை?**

பதில்:-இராணுவத்தினர் திட்டமிட்டு மேற்கொண்ட கலாச்சார அழிவில் வடகிழக்கில் மேலோங்கியிருந்த கல்வித்தரத்தை அழிப்பதும் ஓர் முக்கிய அம்சம். இதற்கு ஆதாரமாக 10 வருடங்களாக 40 வீதம் ஆசிரியர் பற்றாக்குறையை அரசாங்கம் கவனத்தில் எடுக்காமையையும், தமிழ் மாணவர்களுக்கு தரக்குறைவான பாடப்புத்தகங்களை வெளியிட்டமையையும், பாடப்புத்தகங்கள் தமிழ் மாணவர்களுக்கு உரிய நேரத்தில் சென்றடைவதற்கான நடவடிக்கையை எடுக்காமை ஆகியவற்றைக் கூறலாம்.இதைவிட சிறிலங்காப் படையினரால் குண்டுகள் போட்டு ஏராளமான பாடசாலைகள் உடைக்கப்பட்டுள்ளன. இதைவிட உயர்பாதுகாப்பு வலயத்தில் முடக்கப்பட்ட பாடசாலைகளையும் அட்டவணை-03 இல் காணலாம். இத்திட்டமிட்ட கல்வி அழிவுச் செயற்பாட்டின் விளைவாகவே இன்று வடகிழக்கில் கல்வித்தரம் கவலைக்குரிய நிலையில் உள்ளது.

**கேள்வி:-உயர்பாதுகாப்பு வலயம் என சிங்களப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் பற்றிய புள்ளிவிபரம் உண்டா? மாவட்ட ரீதியில் குறிப்பிடுவீர்களா?**

பதில்:-சிங்கள அரசின் இன அழிப்பின் ஒரு முக்கிய அம்சமாக உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் வாழ்விடங்களைக் காணலாம். உயர் பாதுகாப்பு வலயங்களின் கண்மூடித்தனமான ஆக்கிரமிப்புக்களின் விபரங்களை அட்டவணை-03 இல் காணலாம்.

அட்டவணை-03 **ஆக்கிரமிக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வலயங்கள்**

| மாவட்டங்கள் | அம்பாறை | மட்டக்களப்பு | திருகோணமலை | வவுனியா | முல்லைத்தீவு | மன்னார் | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|---|---|---|---|
| உயர் பாதுகாப்பு வலயங்களின்பரப்பு(ஏக்கர்) | 260 | 700 | 200 | 1000 | 16800 | 1360 | 3800 |
| உரிமையாளர் வெளியேற்றப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | 72 | 399 | 305 | 1505 | 1004 | 50 | 28830 |
| மக்கள் செல்ல முடியாத வழிபாட்டுத்தலங்கள் | 02 | 04 | 0 | 23 | 14 | 02 | 201 |
| பாவனை மறுக்கப்பட்ட விவசாய நிலங்கள் (ஏக்கர்) | 40 | 86 | 50 | 106 | 16711 | 42 | 12929 |
| மக்களிற்கு மறுக்கப்பட்ட கடல்,குளக்கரையின் தூரம் (முஅ) | 01 | 01 | 20 | 21 | 19 | 24 | 80 |
| நேரடியாக பாதிக்கப்பட்ட தொழிற் குடும்பங்களின் எண்ணிக்கை | 32 | 193 | 286 | 1103 | 1004 | 65 | 20969 |
| முடக்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை | 00 | 01 | 00 | 21 | 04 | 07 | 35 |

**கேள்வி:-தமிழர் தாயகத்தில் அடிப்படை மனித உரிமை விழிப்புணர்வு பற்றிய தெளிவு மக்கள் மத்தியிலும் சரி அதிகாரிகள் மத்தியிலும் சரி மந்த நிலையில் உள்ளது. இது பற்றி மக்கள் மத்தியில் விழிப்பூட்டும் செயற்றிட்டம் ஏதும் தங்களிடம் உண்டா?**

பதில்:-வடகிழக்கு மனித உரிமைச் செயலகம் இப்பாரிய மனித உரிமை மீறல்களுக்கு அடிப்படைக்காரணம் மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட அவர்களின் சுயநிர்ணய உரிமையே என்றுகருதுகின்றது. இதனடிப்படையில், வடகிழக்கில் மீறப்பட்ட மனித உரிமைகள் பற்றிய ஓர் சிறிய கையேடும், அதனை இலகுவாக விளங்கக்கூடிய வகையில் திரை வடிவிலான கணனிப் பதிவொன்றினையும் தயாரித்து இதன் மூலம் சிரேஷ்ட பாடசாலை மாணவர்களுக்கும் அலுவலகப் பணியாளர்களுக்கும் மனித உரிமை விழிப்புணர்வை ஊட்டும் பட்டறைகளைத் தொடர்ந்து நடாத்தி வருகின்றது.

**நேர்காணல்:- ச.சங்கரன்**

**கேள்வி:-சிறிலங்கா மனித உரிமைகள் செயலகத்திற்கும் வடகிழக்கு மனித உரிமைச் செயலகத்திற்கும் பணி ரீதியான தொடர்பு நிலை பேணல் உண்டா?**

பதில்:-சிறிலங்கா மனித உரிமை ஆணைக்குழுவும் வடகிழக்கு மனித உரிமைச் செயலகமும் இணைந்து பணியாற்றுவது இத்தீவு மக்களின் மனித உரிமை மேம்பாட்டுக்கு மிகவும் பயனுள்ளது. இதற்குரிய ஆரம்ப நிலைத் தொடர்புகளே இப்போது உள்ளது. இது வருங்காலத்தில் விரிவுபடுத்தப்படும் என நாம் நம்புகிறோம்.

**கேள்வி:-அரச பயங்கரவாதம் பற்றி தங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்:-ஐ.நா.மனித உரிமைச் சாசனங்கள் மனித உரிமையைப் பேணும் முக்கியமான பொறுப்பை அந்நாட்டு அரசிற்கே விட்டிருக்கின்றது.

(21 ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 16. 12 . 2005

மின் அஞ்சல :- weekly @ eezhanatham.com

# அரசின் மனப்பாங்கு..!

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையில் மாற்றங்கள் கொண்டு வர வேண்டும் என்பதில் தீவிரம் காட்டி வருகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையானது படைத்தரப்பினரை பொறுத்த வரையில் பல்வேறு பாதகமான அம்சங்களைக் கொண்டிருப்பதாகவும் அதனால் புரிந்துணர்வு உடன்படிக்கை மாற்றத்திற்கு உட்படுத்தபட வேண்டியது மிக அவசியமானது எனவும் படைத்தரப்பு தெரிவித்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக படைத்தரப்பு இந்தப் புரிந்துணர்வு உடன் படிக்கையில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள்/ திருத்தங்கள் என்ற வகையில் ஒரு விபரத்தை அரசிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் நான்கு ஆண்டு காலத்தை அண்மிக்கும் இந்த யுத்தநிறுத்த காலத்தில் செய்யப்பட்ட ஒரு காரியமாக இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை காணப்படுகின்றது.

உண்மையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட உட்சரத்துக்களில் பெருமளவானவற்றை அமுல்படுத்துவதில் தொடர்ந்தும் படைத்தரப்பு கெடுபிடிப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது.

இந்த விடயத்தில் படைத்தரப்பு இரண்டு நிலைகளில் செயற்பட்டு வருகின்றது.

ஒன்று -புரிந்துணர்வு உடன்படிக்கையின் உட்சரத்துக்களை அமுல் படுத்தாது கைவிடப்பட்ட நிலைமை.

இரண்டு- புரிந்துணர்வு உடன்படிக்கையின் உட்சரத்துகளுக்கு எதிரான வகையில் காரிய மாற்றி வருகின்றமை.

இதன் விளைவாக நான்கு ஆண்டு காலத்தை அண்மிக்கும் காலத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கை மிக நெருக்கடியான சூழலுக்குள் தள்ளப்பட்டிருப்பதுடன் பல விமர்சனங்களையும் தோற்றுவித்து உள்ளது.

இந்த நிலையில் கடந்த மாவீரர் தின உரையில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களால் புதிய அரசிற்கு ஒரு கால அவகாசம் வழங்கப்பட்டிருக் கிறது.

இந்தக் கால அவகாசமானது ஒரு அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பதற்கே அன்றி ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் புரிந்துணர்வு உடன் படிக்கையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கல்ல.

புலிகள் இயக்கம் ஏற்கனவே தனது நிலைப்பாட்டை மிகத் தெளிவாக பலமுறை வெளிப்படுத்தி விட்டது அதாவது புரிந்துணர்வு உடன் படிக்கையின் அமுலாக்கம் குறித்து பேச்சு நடாத்த தயாராக இருக்கிறோமே யொழிய புரிந்துணர்வு உடன்படிக்கையில் எந்த மாற்றங்களையும் கொண்டுவர வேண்டிய அவசியமில்லை என தெரிவித்துள்ளது.

ஆனால் படைத்தரப்பும், அரச தரப்பும் தொடர்ந்தும் புரிந்துணர்வு உடன் படிக்கையில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்பதில் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டின் படி புரிந்துணர்வு உடன் படிக்கையின் சரத்துக்கள் உரிய முறையில் அமுல்படுத்தப்படுகின்ற பட்சத்தில் இந்த நெருக்கடிகள் எவையும் எழாது என்பதே.

ஆனால் அரசு இதனை அமுல்படுத்தாது தாமே நெருக்கடிக்கு மூலகாரணகர்த்தாக்களாக இருந்து கொண்டு புரிந்துணர்வு உடன் படிக்கையில் மாற்றம் கொண்டு வர வேண்டுமென கூறுவதானது அரசுக்கு இதன் மூலமாக வேறு தேவைகள் இருப்பதையே காட்டுகிறது.

ஏனெனில் புரிந்துணர்வு உடன்படிக்கை என்பதை ஒரு யுத்தத்தை மட்டும் தவிர்க்கும் வகையில் செய்து கொள்ளப்பட்ட ஒரு எழுத்து மூல ஆவணமல்ல. மாறாக பல தசாப்த காலமாக போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வை மீள ஆரம்பித்தல், அவர்களின் ஆதனங்கள் அவர்களை சென்றடைதல், என்பதோடு அவர்களுக்கு இதுவரை காலம் மறுக் கப்பட்டு வரும் கௌரவமான உரிமைகள் அவர்களை சென்றடைவது என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

இன்னும் ஒரு வகையில் கூறுவதானால் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலமாக அடைய முயலும் பிரதான சமாதான முயற்சியே இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையினை அடிப்படையாகக் கொண்டே முன்னெடுக்கப்படுகிறது.

இதன் காரணமாகவே அரசும் அரசபடைகளும் தொடர்ந்து இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையினை அமுல்படுத்தாமலும் அதனை மாற்றியமைக்க வேண்டும் எனவும் கோரிவருகின்றனர்.

அரசு இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையினை மாற்றி அமைப்ப தன் மூலம் சமாதான முயற்சி தொடர்பாக ஏற்கனவே இருக்கும் ஒழுங்கை சிதைத்து தனக்கு சார்பானதாக மாற்றிக் கொள்ளலாம் என்ற மனப்பாங்கை கொண்டுள்ளது.

அரசு தொடர்ச்சியாக இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் மாற் றம் தொடர்பாகச் செயற்படுகின்றமை அரசின் இந்த கபட மனப்பாங்கையே வெளிப்படுத்துகின்றது.

இதனை அடைவதற்கான மார்க்கங்களாகவே மிக அண்மைக் காலமாக தெரிவித்து வரும் அனுகுமுறை மாற்றம், தொடர்பாடல் மாற்றம், அனுசரணை [illegible] கண்காணிப்புக் குழுவின் தலைமையிலுமான மாற்றம் [illegible] என்ற கருத்துக்கள் அரசின் இந்த ஆழ் மனத் திட்டங்களை வெளிப்படுத்துபவை ஆகும்.

இந்த வகையில் பார்க்கும் போது இந்த அரசு சமாதான முயற்சிகளை [illegible] உரிய இயல்பான திசையில் செல்ல அனுமதிக்கப் போவதில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது.

# விபத்துக்களைத் தடுத்து உயிர்களைக் காப்போம்

நாள்தோறும் கூடிய எண்ணிக்கையான திடீர் விபத் துக்கள் ஏற்படுகின்றன. கிடைக்கப்பெற்ற விபரங்களுக்கு அமைய வருடம் ஒன்றுக்கு உலகிலேயே ஏறத்தாழ 35இலட்சம் பேர்கள் விபத்துக்களினால் மரணம் அடை கின்றனர். இன்னும் 35 இலட்சம் பேர்கள் நிரந்தரமாகவே ஊனமடைந்தவர்களாக உள்ளனர். காயங்களுக்கு சிகிச்சை பெறும் நோயாளிகளுள் 1/3 பங்கினர் விபத் துக்களினால் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை பெற் றுள்ளனர். இலங்கையின் நிலைமையும் இதனை ஒத்ததே.

எமது அவதானத்தின் படி விபத்துக்கு உள்ளாகும் 30 வீதமானோர் பிள்ளைகளே ஆவர். பெற்றோர் எவ்வ ளவோ சிரமத்தின் மத்தியிலும் வளர்த்த பின்னர் இப் பிள்ளைகள் கவனயீனம் காரணமாக அபாக்கிய நிலையில் திடீர் விபத்துக்களுக்கு உள்ளாவது மிகவும் கவலைக்குரிய விடயம் ஆகும்.அண்மைக் காலத்திலே திடீர் விபத்துக்கள் அதிகரித்துள்ளன. அதற்கு பல காரணங்களும் உள்ளன. திட்டம் இடப்படாத வகையி லேயே நகரவாழ்க்கை உருவாக்கப்பட்டமையே இதற்குக் காரணம் ஆகும். போதிய பாதுகாப்பு இன்றி தொழில் மய மாக்கப்பட்டதும் இன்னொரு காரணமாகும். முன் னேற்றம் அடைந்த நாடுகளில் இருந்து வரும் குடிப்பழக் கம் முன்னேற்றம் அடைந்துவரும் நாடுகளின் கிராம வாழ்க்கையிலேயே ஊடுருவியதும் விபத்துக்கள் அதிகரிப் பதற்கு உறுதுணையாகியுள்ளன. நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறையில் கவனம் குறைந்து வருவதும் விபத்துக்கள் உண்டாவதற்கு மிகுந்த காரணமாக அமைகின்றனர். இதனால் சிறு பிள்ளைகளே விபத்துக்களுக்குஅதிகமாக ஆழாகின்றனர்.

பாதுகாப்பற்ற விளையாட்டுப் பொருட்கள் மூலமும் விபத்துக்கள் உண்டாகின்றன. தமது தலைவிதிப்படியே விபத்துக்கள் ஏற்படுகின்றன என்ற கொள்கையை உடையவர்களும் எம்மத்தியிலேயே இருக்கின்றனர். எனவே விபத்துக்களைத் தடுப்பதற்கு அந்த அளவு முயற்சிகள் எடுப்பதில்லை. எவ்வாறாயினும் விபத்துக் களை தடுப்பதற்கான பொது முயற்சிகளை மேற் கொண்டு பிள்ளைகளுக்கு நன்மையான உலகினை உருவாக்கும் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கான செயற்பாட்டுத் திட்டத்திற்கு நாம் அனைவரும் ஒருங்கிணைந்து ஒத்துழைக்க வேண்டும்.

நாம் முதலில் எமது வீட்டைப் பற்றிச் சிந்திப்போம். அநேகமான பிள்ளைகள் நெருப்பு,அல்லது சூடான திரவம்,மின்சாரம் போன்றவற்றின் மூலம் எரிகாயங் களுக்கு ஆளாகின்றனர்.பாதுகாப்பு அற்ற மண் ணெண்ணை குப்பி விளக்கு, உரியவாறு தயாரிக்கப்படாத அடுப்புகள் மற்றும் போறணை, சுடுநீர், சூடான கறிவகைகளை பிள்ளைகளுக்கு எட்டக் கூடிய தூரத்திலே வைத்தல் வேண்டும். பாதுகாப்பு இடப்படாத பிளாக் பொயின், மின்கம்பி, உரியவாறு பொருத்தப்படாத தடுக்கு ஆழி போன்றன விபத்துக்க்ளை ஏற்படுத்தக் கூடிய சாதனங்கள் ஆகும். கிருமிநாசினிகள் அமில வகைகள்மற்றும், காரம் கூடிய இரசாயன பொருட்கள் போன்றவற்றை பிள்ளைகளுக்கு எட்டாத தூரத்தில் பாதுகாப்புடன் வைக்காத காரணத்தினாலேயே விபத்துக்கள் ஏற்படுகின்றன. விபத்துக்களில் 7 சதவீதமானவை நச்சுத்தன்மையினாலேயே ஏற்படு கின்றன. அளவுக்குஅதிகமான மருந்து மாத்திரைகளை உட்கொள்ளல், மேலும் நச்சுப் பொருட்களை உட்கொள் ளுதல், வேறு ஒருவருடைய மருந்தை வைத்திய ஆலோசனை இன்றி தான் உட்கொள்ளல் போன்ற வையும் விபத்துக்கு காரணமாகின்றன. மேலும் பழுத டைந்த உணவு தகரங்களிலே அடைக்கப்பட்ட (காலா வதியான), (திகதி முடிவடைந்த) உணவுகள் மூலமாக வும் உணவு நச்சுத் தன்மை அடையலாம்.இவையாவும் தடுக்கக் கூடிய விபத்துக்களே.நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சிறுபிள்ளைகளைத் தனியாக வீட்டிலே விட்டுச் செல்வ தும் விபத்துக்கள் ஏற்படுவதற்கு இன்னொரு கார ணமாகும். தவழ்ந்து செல்லும் போது தவறுதலாக விழு தல், வீதிக்குச்சென்று வாகனங்களிலேயே அடிபடுதல் மூடிவிடப்படாத கிணறு, கட்டாத கிணறு, நீர்க்கிடங்கு போன்றவற்றினுள்ளே விழுதல் போன்ற சம்பவங்களும் இடம்பெறலாம் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

விளையாட்டுப் பொருட்கள் கொடுக்கின்றபோது அதி லுள்ள மணிகள்,மின் உபகரணங்கள், பொத்தான்கள், கூரான பொருட்கள், காசு போன்றவற்றினாலும் (சில் லறை காசு) விபத்துக்கள் ஏற்படலாம்.எனவே சிறு பிள்ளைகள் இவற்றைக்கையாளும் போது நாம் அவதா னமாக இருத்தல் அவசியம். பட்டாசு வெடிகள், பொலித் தீன் பைகளிலே அடைத்த சுண்ணாம்பு பொருட்களினா லும் விபத்துக்கள் ஏற்படலாம். விசேடமாக விழாக்காலங் களிலே பிள்ளைகள் பட்டாசு வெடிகளைக் கொளுத்து வதற்குக் கூட அனுமதித்தல் ஆகாது.

இத்துடன் முதலுதவி அளிக்கும் போது பின்பற்று கின்ற பிழையான செயற்பாடுகள் மூலமாகவும் பிள்ளை கள் விபத்துக்கு ஆளாகின்றார்கள். மயக்கமுற்ற பிள்ளை களின் தொண்டையிலும், திரவங்களைக் கொடுத்தல் குருதி இழப்பை தடுப்பதற்கு குருதி வடம் இடும் போது குருதி அடக்கு வடத்தை பிழையான முறையிலேயே கட்டுக்களை இறுக்கி கட்டுதல், எலும்பு முறிவுற்ற பிள்ளையை பிழையான முறையில் தூக்குதல் போன்ற செயற்பாடுகள் விபத்துக்கள் மூலம் ஏற்படும் பாதிப்புக் களை விட மேலான பாதிப்பை ஏற்படுத்தலாம்.

நெடுஞ்சாலை பாதுகாப்பும், விபத்துக்களைப் பற்றியும் சிந்திக்கும் போது அதன் அவசியம் கவனத்தில் கொள்ள வேண்டியது ஒன்றாகும். ஒவ்வொரு நொடியிலும் உலகின் எப்பாகத்திலேனும் ஏதாவது ஒரு விபத்து நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. ஒவ் வொரு 40 நொடியிலும் எவரேனும் ஒருவர் வீதி விபத்தின் மூலம் உயிர் இழக்கின்றார் என்பதை உலகநாடுகள் ,உலக சுகாதாரதாபனம் தெரிவிக கின்றது. முன்னேற்றம் அடைந்த நாடுகளில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை குறைந்து வரும்போது, முன்னேற்றம் அடைந்துவரும் நாடுகளில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.



இவ்விபத்துக்கள் அதிகரிக்கக் காரணம் வீதி ஒழுங்கை கடைப்பிடிக்காமையாகும். சாரதியின் கவலையீனம், விசேடமாக மது அருந்தல் போன்றன முக்கிய காரணமாக உள்ளன. பொதுமக்கள் பயணம்செய்கின்ற பேருந்துகள், வான்கள்,முட்சக்கர வண்டிகள் போன்ற வற்றின் சாரதி கள் அநேகமானோர் வீதி ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடியாது தமது நன்மையை மாத்திரம் கருதியே வாகனங்களைச் செலுத்துகின்றன. அத்துடன்,பாதசாரிகள், நடைபாதையை பயன்படுத்தாமை போன்றவையும் இவ்விபத்துக்களுக்கு காரணமாய் அமைகின்றன.

திடீர் விபத்துக்களைத் தடுக்க வேண்டும்என்ற கருத்தை யாவரும் ஏற்றுக்கொண்டு வானொலி,தொலைக் காட்சி, பத்திரிகை போன்ற தொலைத் தொடர்பு சாதனங்கள் இவற்றைத் தடுக்கும்முறை பற்றிய விடயங்களில் முன்னுரிமை கொடுத்தல் முக்கியமாகும். மேலும் இவற்றைப் பற்றிய விதிமுறைகளைப் பெற் றோர்கள் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லியும் பிள் ளைகளின் பாதுகாப்பில் மிகுந்த கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமாகும். நாட்டு மக்களின் பாதுகாப்புக்குத் தேவையான சட்ட திட்டங்களை ஏற்படுத்தி அதனை முறையாக செயற்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். மேற்குறிப்பிடப்பட்ட விடயங் களில் அவரவர் கவனத்தில் செலுத்தினால் திடீர் விபத் துக்களை குறைத்து அழிந்துபோகும் மனித உயிர்களைப் [redacted]

# கொம்பு சீவும் ஐ.தே.க

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற சக்திகளுக்கு கொம்பு சீவி விடும் வேலையை ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பித்து விட்டது. அதாவது நோர்வேயை வெள்ளைப்புலிகள் என்று கூறிய இவ்இரு அமைப்புக்களும் இப்பொழுது நோர்வேயையே புலிகளிடம் அனுப்பியிருப்பதாகவும் பொய்கூறி மக்களிடம் வாக்குக் கோரியதற்காக அவர்களிடம் கிராமம் கிராமமாகச் சென்று மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் ஐக்கியதேசியக் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.



தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மக்களை ஏமாற்றும் வேலையை இவ் இரு கட்சிகளும் செய்திருப்பதாகவும் ஆனால் அவ்வாறான தொரு செயலைச் செய்து ஐக்கிய தேசியக்கட்சி பதவிக்கு வர ஒரு போதும் முயலாது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சமாதான முயற்சிகள் என்ற பெயரில் ஐ.தே.க ஆடிய நாடகம் அம்பலப்பட்டுப் போயுள்ள நிலையிலேயே அது தேர்தலில் தோல்வியைத்தழுவிக் கொள்ள நேரிட்டது. அதாவது அது தனக்கு நிரந்தரமாகவுள்ள சிங்கள மக்களின் வாக்கு வங்கியுடன் சிறுபான்மை மக்களின் வாக்குகளை அப்படியே பெற்று சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என்ற திட்டத்துடனேயே சமாதானக் கோசத்தை உரத்து எழுப்பியது. ஆனால் சிங்கள மக்களை ஏமாற்ற முடிந்தது போல தமிழ் மக்களை ஏமாற்ற முடியாததால் தோல்வியுற்று கைபிசைந்து நிற்கிறது. வெறும் சமாதானக் கோசம் மட்டும் தமிழ் மக்களின் வாக்குகளை வாழைப்பழம் வாயில் வீழ்ந்தது போல பெற்றுத் தரும் என அக்கட்சி நினைத்ததற்கு தமிழ்மக்கள் ஒன்றும் செய்ய முடியாது.

இப்போது ஆறுவருடங்கள் அடுத்ததேர்தலுக்காக காத்திருக்க வேண்டியுள்ள போதும் முரண்பாடுகளின் மொத்த வடிவமாகவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் பிளவை ஏற்படுத்தி ஏதாவது செய்து விடலாம் என்ற நம்பிக்கை அதற்கு உள்ளது. 2002ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் சமாதானக் கோசத்துடன் ஐ.தே.க நாடாளுமன்றத்தைக் கைப்பற்றிய போது அந்தத் தோல்வியிலிருந்து சுதாகரித்துக் கொள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி போன்றவற்றுக்கு சுமார் ஒருவருடம் பிடித்தது. அந்தளவிற்கு ஐ.தே.கவின் "சமாதான முயற்சிகளின்" பளபளப்பு இருந்தது.

அதிலும் ஜே.வி.பி ஆரம்பத்தில் தனித்து நடத்திய போராட்டங்கள் தோல்வியில் முடிவுற தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி என்ற பெயரில் ஜே.வி.பியும், சு.க விலுள்ள முக்கியஸ்தர்களும் இணைந்து படிப்படியாக முயன்றே ஐ.தே.க.வின் சமாதானக் கோசத்திற்கு எதிர்ப்பை வெளிப்படுத்த முடிந்தது.

ஆனால் ஐ.தே.க.வுக்கு அவ்வளவு காலம் பிடிக்காது. அதே வேளை அது சமாதான முயற்சிகளுக்கு எதிரான கோசத்தையும் எழுப்பவேண்டிய தேவையுமில்லை. ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட்ட மகிந்தராஜபக்ஷ கண்துடைப்புக்கென நடத்தப் போகும் சமாதான முயற்சிகளை வைத்துக் கொண்டே அவரைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளை ஐ.தே.க உடனடியாக ஆரம்பித்து விட்டது.

அவ்வாறு ஆரம்பிக்க வேண்டிய தேவையும் தற்போது ஐ.தே.கவின் தலைமைப் பீடத்தில் இருக்கும் ரணிலுக்கு மிக மிக அவசியம். ஏனெனில் கட்சிக்குள் அவரது தலைமைத்துவத்திற்கு எதிர்ப்புக்கிளம்பியிருக்கிறது. அதனைச் சரிசெய்வதற்கு தனது செயற்றிறமையைக் காட்டவேண்டிய தேவையுள்ளது.

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நோர்வேயை ஏற்பாட்டாளராகச் செயற்படுமாறு கேட்டுக் கொள்வதென இலகுவாகத் தீர்மானித்து விடவில்லை.

☐ நோர்வையை இந்த முயற்சியிலிருந்து அகற்றுவதற்கு இந்தியாக கூட உதவத் தயாராக இல்லாத நிலை.

☐ பதவியேற்று 15 நாட்கள் கூட ஆகாத நிலையில் அவரை மத வைபவங்களிலும் சம்பிரதாய சடங்குகளிலும் கூட ஈடுபட விடாது யாழ் இல் இடம் பெற்ற தாக்குதல்கள் "சமாதான முயற்சி" குறித்த ஏதாவது நகர்வை விரைந்து எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளியமை. போன்ற காரணங்களால் அவர் நோர்வேயை மீண்டும் ஏற்பாட்டாளராக செயற்பட கோரினார்.

இவ்வாறு நோர்வேயை ஏற்பாட்டா ளராக செயற்படுமாறு கோரமுன் அவர் இது தொடர்பான ஆலோசனையில் ஈடுபட்டது முதலில் பொதுசன ஐக்கிய முன்னணியில் உள்ள ஏனைய சிங்களக் கட்சிகளுடனேயே. அதாவது ஜே.வி.பி யையும், ஜாதிக ஹெல உறுமயவையும் எவ்வாறு சமாளிக்கலாம் என்பது குறித்து நீண்ட நாட்கூட்டாளி களான இடது சாரிகளிடம் அவர் ஆலோசனை கேட்டார். அவர்களும் நோர்வேயின் பங்கு பணியை புறந்தள்ளுவது சாத்தியமற்றது என எடுத்துக் கூறி அப்போதைய சூழலையும் விளக்கினால் ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் சம்மதிக்க கூடும் என ஆலோசனை கூறினர்.

இதற்கமைய ஜே.வி.பி யையும், ஜாதிக ஹெல உறுமயவையும் தனித்தனியே அழைத்துப் பேசி அவற்றின் சம்மதத்தை மகிந்த பெற்றுக் கொண்டார். ஆனால் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தலைமைப் பதவியிலிருந்து நோர்வேயை அகற்ற வேண்டும் என இவ் இரு கட்சிகளும் வலியுறுத்திக் கூறியுள்ளனவாம். அதற்கு மகிந்தவும் சம்மதித்துள்ளாராம்.

ஆகமொத்தத்தில் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய என்பன கூக்குரலிட்ட விடயங்களில் ஒன்றை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இன்னமும் கைவிட வேண்டிய விடயங்களின் பட்டியல் தொடரவே செய்யும்.

அவ்வாறு பட்டியலில் கைவிடவேண்டிய விடயங்கள் தொடரக் கூடாது- தொடரவிடக் கூடாது என்பதே ஐ.தே.க வின் நோக்கமாகத் தற்பொழுது இருக்கின்றது. அதற்காகவே அது ஜே.வி.பி யையும், ஜாதிக ஹெல உறுமயவையும் தூண்டிவிடும் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

இவ் இரு கட்சிகளும் மகிந்தராஜபக்ஷவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் கடைப்பிடிக்கபட வேண்டும் என உண்மையிலேயே விரும்பினால் ஐ.தே.க வின் தூண்டுதல் இன்றியே சனாதிபதி மகிந்தவை விட்டு வெளியேற வேண்டிய நிலை மிக விரைவிலேயே ஏற்படும். ஆனால் மகிந்தவை வைத்துக் கொண்டு சுகபோகம் அனுபவிப்பதே அவர்களது நோக்கமெனில் அந்த ஒப்பந்தம் தேர்தலுக்கானதெனின் ஐ.தே.க.வின் இந்த முயற்சி தோல்வியையே தழுவும். அவ்வாறு ஒரு நிலை ஏற்பட்டால் …றப் போவது ஐ.தே.க மட்டுமல்ல சிங்கள மக்களும் தான்.

வேலவன்

## நேர்நோக்கு

# மகிந்த அடுத்த ஆண்டை பண்டாவுக்குச் சமர்ப்பிப்பாரா?

இரண்டு கடும் போக்கு இனவாத கட்சிகளுடன் சேர்ந்து சிறிலங்காவின் சனாதிபதியாக மகிந்த தெரிவு செய்யப்பட்டதன் பின் இன்று வரை அவர் சமாதான முன்னெடுப்புக்குச் சாதகமாக எந்த சமிக்ஞையும் விடவில்லை, தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் குறுகிய கால அவகாசத்திற்கு பின்பு அரச தரப்பு ஒரு அசமந்த போக்கையே காட்டி வருகிறதே தவிர ஆரோக்கியமான எந்த ஒரு நடவடிக்கையும் இற்றைவரை இல்லை. ஆனால் இதற்கப்பால் தனது படை கட்டுமானங்களைப் பலப்படுத்தி ஒரு யுத்தத்திற்கான தயார்படுத்தல்களையே அரசு மேற் கொண்டு வருகிறது.



வெறுமனே புலிகளுடன் பேசத் தயார் என வார்த்தைகளில் மட்டும் கூறிய மகிந்த ராஜபக்ஷ அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை விடுத்து ஒரு யுத்தம் ஒன்றுக்கான முன் ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். இதன்படியே தனது வரவு-செலவுத்திட்டத்தில் பாதுகாப்புச் செலவீனங்களுக்கு ஒன்பது கோடி ரூபாவுக்கு மேல் ஒதுக்கீடு செய்தமையும், இராணுவக் கட்டமைப்புக்களின் பொறுப்புகளில் பல மாற்றங்களை ஏற்படுத்தியமையும் இராணுவத்திற்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்ய இருக்கின்றமை போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எல்லாம் மகிந்த ராஜபக்ஷ சமாதானப் புள்ளியிலிருந்து மெல்ல மெல்ல விலகிச் செல்வதனையே காட்டுகிறது.

இதைவிட மகிந்தவின் வெற்றிக்கு காரணமான ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய என்பன தாங்கள் மகிந்தவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் முக்கிய சரத்துக்களை இப்போதே மகிந்த மீறி விட்டார் என தங்களது இனவாத கூச்சல்களை அவர்களும் இப்போதே ஆரம்பித்திருக்கிறார்கள். அதாவது ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு, யுத்த நிறுத்தத்தை மறு பரிசீலனை செய்வது, நோர்வேயின் அனுசரணையை மறு பரிசீலனை போன்ற விடயங்களையே மகிந்த மீறிவிட்டதாக இந்தக் கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

ஆனால் மகிந்தவோ ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு என்ற தனது கொள்கையிலிருந்து இன்றுவரை மாறவில்லை. அத்தோடு யுத்தநிறுத்த ஒப்பந்தம் மறு பரிசீலனை குறித்தும் இன்றுவரை எவ்வித தெளிவான நிலைப்பாட்டினையும் வெளியிட வில்லை. ஆனால் நோர்வேயின் அனுசரணை குறித்து மகிந்தவின் நடவடிக்கை தோல்வி அடைந்ததன் பின்னரே அதாவது இந்தியாவை அனுசரணையாளராக பணியாற்ற மகிந்த மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்ததன் பின்பே மீண்டும் மகிந்த நோர்வேயின் அனுசரணைக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எனவே இவ்வாறானதொரு நிலைமைக்கே இந்தக் கட்சிகளின் இனவாதக் கூச்சல்கள் இப்படியென்றால் இனிவரும் காலங்களில் இந்தக் கட்சிகள் எப்படி செயற்படப் போகிறது? அத்தோடு மகிந்தவும் இவர்களின் ஒப்பந்தத்தை எதிர்த்துக் கொண்டு எதனையும் சாதிப்பரா? அப்படியாயின் சமாதான நடவடிக்கைகள்? தலைவரின் குறுகிய கால அவகாசம்? அடுத்தாண்டில் இலங்கைத்தீவு? போன்ற பல்வேறு கேள்விகள் இன்று அனைவரிடமும் காணப்படுகின்றன.

இந்நிலையில் இந்நாட்டு மக்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள மீண்டுமொரு யுத்தம் தொடர்பான அச்சத்தை தீர்க்கும் வகையில் புதிய அரசு செயற்படுவதாக தெரியவில்லை. தற்போதைய அதன் அனைத்து நடவடிக்கையும் ஒரு சமாதானத்தை நோக்கியதாக இல்லை. எனவே கடந்தகால சமாதானம் என்பதே இந்த நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவே. அவ்வாறாயின் இனியொரு சமாதானம் சிங்கள அரசால் ஏற்படுத்தப்பட்டால் கூட அது உண்மையில் தீர்வை நோக்கியதாக இருக்க மாட்டாது. மாறாக தங்களையும் தங்களது படைகளையும் பலப்படுத்திக் கொள்ளத் தேவைப்படும் காலத்திற்காக இருக்கலாம். ஏனெனில் கடந்த கால சிங்கள அரசுகளும் சமாதான காலத்தை சமாதானத்திற்காக பயன்படுத்தாமல் தமிழ் மக்களின் உரிமை போராட்டத்தை நசுக்குவதற்குரிய சதி திட்டங்களை தீட்டும் காலமாகவே பயன்படுத்தியது. அந்த வகையில் மகிந்த அரசும் சிங்கள அரசுதானே அதுவும் இரண்டு இனவாதக் கட்சிகளுடன் சேர்ந்தியங்கும் ஒரு அரசிடம் எப்படி நியாயமான தீர்வை எதிர்பார்ப்பது. எனவேதான் தற்போது அனைவராலும் கூறப்படுவது போல பண்டா ஆரம்பித்ததை மகிந்தவும் தொடரப்போவதற்கான காலமாக அடுத்த ஆண்டை மகிந்த பயன்படுத்த போகிறாரா? என்பதே இப்போதைய கேள்வி.

மு.தமிழ்ச்செல்வன்

இன்றைய கொழும்பு மிகத் தடுமாற்றமான நிலையில் இருக்கிறது. நாற்சந்தியில் நின்று கொண்டு எந்தப்

அகாசியிடம் புலம்பியிருக்கிறார் மகிந்த.

இந்தப் பேச்சுக்களின் பின்னர் பத்திரிகையாளர்

நெருக்குவாரங்களற்ற அமைதியான சூழலில் நடாத்தப்பட வேண்டுமெனவும் புலிகள் கோரியிருந்தனர்.

ஆனால் மகிந்த உள் ளிட்ட அம்மையாரது தரப்போ இலங்கைக்கு வெளியே பேச்சுக்களை நடாத்த முடியாதென உறுதி யாக மறுத்தது. கடைசியில் கண்காணிப்புக்குழு

டார்.

வாக்குறுதியளிப்பதற்கும் அவற்றைச்செயற் படுத்துவதற்குமான இடைவெளியை நிரப் புவதற்கு படாதபாடுபடப் போகிறார் அவர். ஏறக்குறைய 200 ஆயிரம் மில்லியன்கள் துண்டுவிழு கின்ற வரவு- செலவுத்திட் டத்தை சமர்ப்பித்திருப்பதன் விளைவுகளை மகிந்தவின்

மான வழிகளிலெல்லாம் முயற்சிகளை எடுத்தார்கள். ஆனால் அவர்களால் எதிர்பார்த்த இலக்கை எட்டிவிட முடியவில்லை.

அதற்குத் தமிழ்மக்களின் தேர்தல் புறக்கணிப்பை காரணங்காட்டுவதில் அவர்கள் முனைந்து நிற்கிறார்கள். தமிழர்கள் தேர்தலைப் புறக்கணித்ததால் ரணில் தோற்றுப்போனார்.



# சிறிலங்காவின் அவலம்

பெயரால் சிறிலங்கா சுமக்கின்ற போதுதான் விஷேசமே தொடங்க விருக்கிறது. அதீத கனவுகளுடன், தேசியவாத எண் ணங்களுடன் அல்லது கனவுகளுடன் மகிந்தவுக்கு வாக்களித்த தெற்குச் சிங்களவர்கள் தமது தலையில் மிளகாய் அரைக்கப்பட்டு விட்டதை உணரத்தலைப் படும் போதுதான் தென்னிலங்கை சிவில்யுத்த களமாகும் புறநிலை உருவாகும்.

ஆனால் இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு மகிந்தவின் வீம்பு நிறைந்த செயற்றிட்டங்கள் பயனற்றவை. என்வே தென்னிலங்கை சீரழிவதென்பது அண் மைய எதிர்காலத்தில் நடைபெறப் போகின்ற யதார்த்தம். இதனைப் பின்தள்ளுவதோ அல்லது தடுத்து நிறுத்துவதோ இனப்பிரச்சி னைக்குத்தீர்வு

இதன் காரணமாக ரணிலிடம் இருந்த பயன்விளைவான திட்டங்கள் பயனிழந்துபோய்விட்டன. ரணில் வந்திருந்தால் மேற்குலகின் நிதி உதவிகள் வந்து குவிந்திருக்கும். அதன்விளைவாக நாட்டின் பொருளாதாரச் சிக்கல்கள் தீர்ந்து போயிருக்கும் என்கிறார் கலாநிதி ஜெகான் பெரேரா.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ரணிலின் திட்டமென்ன? 2003 ஒஸ்லோ பிரகடனத்தில்/அறிக்கையில் குறிப்பிட்டதை வைத்துக் கொண்டு சமஷ்டி முறைமை யினை ரணில் கொண்டிருப்பதாக கூறுகிறார் ஜெகான்.

ஆனால் ஐ.தே.கட்சிமுன்வைக்கும். முன்வைக்கவுள்ள சமஷ்டி என்பது ஒரு பிரதேச சபைக்குரிய அதி காரங்களையே கொண்டிருக்கும் என்று பீரிஸ் கூறியிருக்கிறாரே எனக் கேட்டால்கலாநிதி



கட்டுநாயக்கா விமானநிலையத்தில்

பாதையால் போவது என்று விழிபிதுங்கி நிற்கிறது அது. தனது மர பார்ந்த விருப்பார் வம், வீம்பு, புறநிலைகளின் யதார்த்தமான அழுத்தம், புவிசார் அரசியலின் இழு விசை, சர்வதேச அரசியலின் அழுத்தங்கள் என்பவற்றிற் கிடையே தனது பிரச்சினைகளுக் கான தீர்வுகள் எவை? அவற்றுக கான பாதை/ பாதைகள் எது/ எவை? எனக் கொழும்பு தலையைப் பியத்துக் கொள்கிறது. அது தினம்தினம் விடுக்கின்ற

பு.சத்தியமூர்த்தி

அறிக்கைகளைக் கூர்ந்து நோக்கும் ஒருவருக்கு இது நன்கு புலப்படும். இதை விட கொழும்பு தம்மிடம் தெரிவித்த, தம்முடன் உரையாடிய விடயங்களை வெளித்தரப்புகள் வெளிச்சம் போடும் போதும் இது பளீரெனப் புலப்படுகிறது.

நோர்வேக்கு அனுசரணைப் பணியிலிருந்து சீட்டுக் கிழிக்கப்படும் என்பதாக வீரவசனங்கள் பேசிக்கொண்டிருந்த மகிந்தவின் கூடாரம் தற்போது அதனை உத்தி யோகபூர்வமாக மீள் அழைத் துள்ளது. இது அவரது தோல்வி என வியாக்கியானப்படுத்தப்படும் நிலையில், தனது மீள் வருகைக்காக நோர்வே நிபந்தனைகளை விதித்[illegible]நப்பதாகவும் அந்த நிபந்த[illegible]னகளை ஒரு போதுமே ஏற்றுக்கொள்ளப் போவதில்லையெனவும் யப்பானின் விசேட சமா தானத்தூதர் யகூசி

மாநாடொன்றை நடாத்திய அகாசி, போர்நிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கம் பற்றிப் பேசுவ தானால் அதனை ஆசிய நாடொன்றில் நடாத்துவதற்கு தான் தயாரென மகிந்த தெரிவித்ததாகக் கூறினார். அந்தப் பேச்சுக்களை

இப் பேச்சுக்களை நடாத் தலாமென பரிந்துரைத்தது வும், பாதுகாப்புக்

**ஆட்சிப்பீடத்தின் நிர்ப்பந்தங்கள் பற்றி இப்போதுதான் மகிந்தவுக்குப் புரியத் தொடங்கியிருக்கிறது. அரசியல் நடாத்துவதற்கும் ஆட்சி நடாத்துவதற்குமுள்ள வேறுபாட்டை மகிந்த வெகுவிரைவிலேயெ கற்றுக் கொள்ளத் தொடங்கிவிட்டார். வாக்குறுதியளிப்பதற்கும் அவற்றைச் செயற்படுத்துவதற்குமான இடைவெளியை நிரப்புவதற்கு படாதபாடுபடப் போகிறார் அவர்.**

இருதரப்பும் ஏற்றுக் கொண்டால் யப்பானில் நடாத்தமுடியுமெனவும் அவர் அங்கு தெரிவித்தார். இது இன்றைய தேக்கத்தை உடைப்பதற்குரிய நல்லதொரு முன் முயற்சியே.

ஆனால் நாம் சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால் மகிந்த இந்த விடயத்திலும் தனது பழைய நிலைப்பாட்டிலிருந்து விலகியிருப்பது புலப்படும். சந்திரிகா அம்மையாரின் இறுதி நாட்களில் போர் நிறுத்த உடன்பாட்டின் செம்மையான அமுலாக்கம் பற்றிய பேச்சுக்கள் நடத்தப்படவேண்டுமெனப் புலிகள் திரும்பத்திரும்ப வலியுறுத்தி வந்திருந்தனர். இந்தப் பேச்சுக்கள் நடுநிலையான நாடொன்றில்

காரணங்களுக்காக புலிகள் அதனை நிராகரித்ததுவும் குறிப்பிடத்தக்கவை.

இப்போது நிலைமை திரும்பியிருக்கிறது. புலிகள் முன்பு கோரிய விடயங்களை இப்போது மகிந்த கூறியிருக்கிறார். ஆனால் தனது முன்னைய நிலைப்பாட்டிலிருந்து தானாகவே மீண்டிருக்கிறார். இதற்கு அவரை நிர்ப்பந்தித் தது எது?

ஆட்சிப்பீடத்தின் நிர்ப்பந்தங்கள் பற்றி இப்போதுதான் மகிந்தவுக்குப் புரியத்தொடங்கி யிருக்கிறது. அரசியல் நடாத்துவதற்கும் ஆட்சி நடாத்துவதற்குமுள்ள வேறுபாட்டை மகிந்த வெகுவிரைவிலேயே கற்றுக் கொள்ளத் தொடங்கிவிட

காண்பதற்கான அர்த்தமுள்ள முயற்சிகளை எடுப்பதிலேயே தங்கியுள்ளது. ஆனால் சிறைப்பட்டு வெளிக்கிடக் கும் சிங்களப் பெருந்தேசியம் அதனை அனுமதிக்கப்போவ தில்லை.

சிங்களம் இவ்வாறு சீரழியப் போகிறது என்பதை உணர்த் திருக்கின்றனர் சிங்களப் புத்திஜீவிகள். அதனாலேயே கடந்த சனாதிபதித் தேர்தலில் ஐ.தே கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை எப்படியேனும் வெற்றிபெற வைக்கஅவர்கள் தலைகீழாக நின்றார்கள். பத்திகள், பேட்டிகள், ஆய்வுகள், கருத்துக் கணிப்புக்கள், கருத்தரங்குகள்... எனப் பலபல வழிகளில் சாத்திய

ஜெகானிடம் பதில் இல்லை.

ஆனால் ரணில் வந்திருந்தால் சமஷ்டித் தீர்வை முன்வைத்திருப்பார், மேற்குலகின் நிதியுதவி மூலம் நாட்டிற்கு முன்னேற்றம் ஏற்பட்டி ருக்கும் என்று மட்டும் அவர் திரும்பத் திரும்ப கூற முனைகிறார்.


அதாவது தமிழ் மக்களுக்கான தீர்வு எது? என்பதுபற்றிய கேள் விக்கான விடை பற்றிய அக்கறை சிங்களத்தின் எத்தரப்பினரிடையேயும் இல்லை என்பதன் வெளிப் பாடே இது. இதனுடைய அவலம் தான் மகிந்தவின் கையில் சிறிலங்கா இன்று சிக்கிக்கொண்டிருப்பதாகும்.

# நாங்கள் எங்கள் சொந்த இடங்களுக்குப் போகவேண்டும்

## மறக்கப்பட்டு வரும் நலன்புரி நிலையங்கள்







உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களிற்கு தகுதிவாய்ந்த அதிகாரிகள் எத்தகைய சந்தர்ப்பம் என்பதைப் பொருட்படுத்தாமலும், பாகுபாடு காட்டாமலும் குறைந்த பட்சம் அத்தியாவசிய உணவும் குடிக்கத்தக்க நீரும், அடிப்படையான உறைவிடமும் குடிமனையும், தகுந்த ஆடை அணிகள், அத்தியாவசிய வைத்திய சேவைகளும் சுகாதார வசதிகளும் எ... படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க ...டும்.

இவ்வாறு யு.என்.எச்.சி.ஆர் (U... .R) நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ...டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான ...லின் 18 விதி சுட்டிநிற்கின்றது.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்களினால் பல நலன்புரி நிலையங்கள் தோற்றம் பெற்றன. நலன்புரி நிலையங்களிலுள்ள 15 வயதிற்குட்பட்ட பிள்ளைகளிற்கு தமது சொந்தவீடு, தாம் கல்விகற்கவிருந்த பாடசாலை, வணக்கஸ்தலங்கள் என எவையுமே தெரியாது. இதற்கு யார் காரணம். இன்னும் எத்தனை வருடங்கள்தான் இந்நிலை தொடர முடியும்.

சுமார் 15 வருடங்களிற்கு மேலாக பல இடப்பெயர்வுகளையும், உயிர், உடமை அழிவுகளையும் சந்தித்து நலன்புரி நிலையங்களையே தமது வாழ்விடமாகக் கொண்ட மக்கள் பலர் உள்ளனர். இவர்களில் வலிகாமம் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் பல்வேறு காட்டுகின்றனர்.

இலங்கை இராணுவத்தாலும் இயற்கை அனர்த்தங்களாலும் பலமுறை இன்னல்களை அனுபவித்த மக்கள் தமது சொந்த இடங்களிற்கு தம்மைப் போகவிடுவதே தமக்குச் செய்யும் பெரும் உதவியென குறிப்பிடுகின்றனர். தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஜே-240 கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட மயிலிட்டியிலிருந்தே இந்நலன்புரி நிலைய மக்கள் இடம்பெயர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நலன்புரி நிலையத் தலைவர் இ.ரஞ்சிதமோகன் பகிர்ந்துகொண்ட கருத்துக்கள்;

இடம்பெயர்ந்தவர்களிற்கான உதவிகள் எல்லோரிற்கும் சமமாக வழங்கப்படவேண்டும். இங்குள்ள பலர் மிகவும் கஷ்டமான நிலையிலேயே உள்ளனர். கோப்பாய் கிருஷ்ணன் கோயில் முகாமில் உள்ளவர்களிற்கு நிரந்தர வீடுகளைக் கொடுத்துள்ளனர். வீட்டுப் பாவனைப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன. இங்குள்ளவர்களும், அங்குள்ளவர்களும் ஒரே இடத்திலிருந்து ஒரே நேரத்தில் இடம்பெயர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை நினைக்க எவ்வளவு வேதனையாக இருக்கின்றது. நிறுவனங்களும்-அரச அதிகாரிகளும் இக் குடும்பங்களை கண்டுகொள்வதாக இல்லை. பிரதேச பிறகு படிக்கிறதெண்டால் ஏலாது. வீட்டிலையும் விளக்கில்தான் படிக்கிறம்.

மழை வெள்ளமும் நுளம்புக்கடியும் எங்களை ஒன்றும் செய்யவிடுவதில்லை. இரவு நேர கற்றல் நிலையத்தை ஆரம்பித்து அதிலாவது ந... கள் கல்வியைத் தொடர வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் எனக் குறிப்பிட்டார் கல்வியின் அவசித்தை உணர்ந்த மாணவி.

இணுவில் கிழக்கு மில் முகாம் தலைவர் தெய்வேந்திரம் சிவனேஸ்வரன் குறிப்பிடுகையில்:-

நாங்கள் அனுபவித்துவரும் அவலங்கள் போதும். இனியும் வேண்டாம் இவ்வாறான துயர் நிறைந்த அரைகுறை வாழ்க்கை. எங்களை எங்கட இடங்களிற்குப் போகவிடவேண்டும். இல்லையேல் எங்களிற்கான காணியை வேறு இடங்களில் ஒதுக்கி எமக்கென வீடுகளை அமைத்துத் தந்தால் நாம் எமது தனித்துவத்துடன் வாழ முடியும். 25000ரூபா கொடுப்பனவு எமக்கு வழங்கப்படவில்லை. 5000 ரூபா கொடுப்பனவு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

ஒரு குழாய்க்கிணறு, ஒரு மலசல கூடம், அரைகுறையான வீடுகள்தான் இருக்கு. உள்வீதிகள் சேறும், வெள்ளமுமாய்தான் இருக்கு. நாங்கள் கூலி வேலைக்குப் போய் அன்றாடம் சீவிக்கிறம். இங்க இந்தக் காணியில மேற்படி நலன்புரி நிலைய மக்கள் தமது சொந்த நிலங்களில் தாம் மீள்குடியேறுவதனையே நோக்காகக் கொண்டுள்ளனர். இந்த நலன்புரி நிலையத்தில் உள்ள மாணவி மாலதி-அழகேந்திரம் கூறியவை;

நான் தரம் 10 இல் மருதனார் மடம் வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் படிக்கிறன். நாங்கள் மூன்று பேர் அக்கா வீட்ட கஷ்டத்தால் பள்ளிக்கூடம் வாறதில்லை. நானும் மற்றக்காவும் படிக்கிறம். எதுவித வசதிகளுமின்றியே கல்வியைத் தொடர்கிறோம். சக மாணவர்கள் கணனியையும் தொலைக்காட்சியையும் பற்றிக் கதைக்கும் போது நாம் குப்பி விளக்கில் இரவைக் கழிப்பதை நினைத்துப் பார்க்கிறம். எங்கட சொந்த இடம் தெரியாது. அகதி என்ற அடைமொழிக்குள்ளேயே வாழ்ந்து வருகிறோம். ஏன் எங்களிற்கு மட்டும் இந்த நிலை என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி நிற்கின்றார் மாணவி மாலதி.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு உதவிகளும் ஒத்துழைப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் மேலதிகமான உதவிக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன. அரச, அரசசார்பற்ற மத சார்பான நிறுவனங்கள் கடந்த கால கொடூர போரினால் பாதிக்கப்பட்டவர்களை மறந்துள்ளார்களோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

அந்தளவிற்கு நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களின் நிலை மோசமாகவுள்ளது.

தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழையினால் நலன் புரி நிலையங்களிற்குள் வெள்ளம் தேங்கியுள்ளது. சில வீடுகளிற்குள்ளும் மழை நீர் புகுந்துள்ளமையால் தொடர்ச்சியான நெருக்கீடுகளுக்கு ஆளாகி வருகின்றனர். மலசல கூட வசதி, குடிநீர் வசதி இவை இரண்டும் மிக அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தாம் சொந்த நிலங்களில் சுதந்திரமாக வாழ வேண்டுமென்பதற்காய் அமைதி வழியான போராட்டங்கள் பலவற்றை தொடர்ந்து நடாத்தினர். இறுதியாக நீதிமன்றிலும் வழக்கு தாக்கல் செய்தனர். ஆனால் முடிவுகள் யாவும் ஒன்றே. அதியுயர் பாதுகாப்பு வலயம்.

இணுவில் காரைக்கால் சிவன்கோயில், நலன்புரி நிலையம், இணுவில் கிழக்கு தியேட்டர் ஒழுங்கை, மில் நலன்புரி நிலையம் ஆகிய இடங்களில் கடந்த பதினைந்து வருடங்களாக பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்ற மயிலிட்டி, கட்டுவன் தெற்கு கிராமங்களின் மக்கள் தொடர்பான அவலங்கள் நெருக்கீடுகளை இக்கட்டுரைவாயிலாக உரிய அதிகாரிகளிற்குச்சமர்ப்பிக்கின்றோம்.

இணுவில்,காரைக்கால் சிவன்கோயில் நலன்புரி நிலையத்தில் 22 குடும்பங்கள் 15 தற்காலிக வீடுகளில் உள்ளனர். நல்லூர்பிரதேச செயலர் பிரிவில் ஜே-117 கிராமசேவையாளர் பகுதிக்குட்பட்ட இந்நலன்புரிநிலையம் கடந்த 12 வருடங்களாக எதுவித அடிப்படை வசதிகளுமின்றி உள்ளது. ஒரு மலசல கூடமும்,ஒரு குழாய்க்கிணறும் இருப்பதுடன் குளிப்பதற்கு தோட்டக்கிணறுகளுக்கே போவதாக மக்கள் குறிப்பிடுகின்றனர். தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையால் இடம் பெயர்ந்துசெல்ல வேண்டிய அவலத்திற்குள்ளானதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அரச,அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் எவையும் தமக்கு வழங்கப்படுவதில்லை எனவும், அன்றாடம் கூலித் தொழிலுக்குச் சென்றே குடும்பத்தைக் கொண்டு நடாத்துவதாகவும், குறிப்பிடும் மக்கள் தாம் கோயில் வளவில் இருப்பதனாலேயே தமக்கான உதவிகள் வழங்கப்படவில்லையென சுட்டிக் காட்டுகின்றனர். பிரதேச செயலர் பிரிவில் (நல்லூர்) ஒரே ஒரு முகாமேயுள்ளது. சொந்த வளவு என்றால் ஏதாவது பயிர்ச்செடிகளை வைக்கலாம். இது கோயில் வளவு விறகிற்குக் கூட ஒரு தடி எடுக்க முடியாது. இதனால் சரியான கஷ்டம். மழைவெள்ளம் காரணமாக நுளம்புகளின் பெருக்கம் அதிகமாகவுள்ளது. தொற்று நோய்கள் பரவும் அபாயமுள்ளதால் நாளாந்தம் சவால் நிறைந்த வாழ்க்கையை அனுபவித்து வருகின்றோம்.

கோயில் நிர்வாகத்தினருடன் எமக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. முன்பு கழிவுகள் கொட்டப்பட்ட இடங்களிலேயே எங்களது வீடுகள் உள்ளன.நாம் இருப்பதினால் கோயில் வளாகத்திற்கு பாதுகாப்பென்றே கூறவேண்டும். கோயில் நிர்வாகத்தையும்-அருகிலுள்ள தோட்டக்காணிகளின் உரிமையாளர்களையும் இணைத்து அவர்களைக்கொண்டு எம்மை இங்கிருந்து எழுப்புவதற்கு கிராம சேவையாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார்.

என்னதான் இருந்தாலும் எவ்வளவு கஷ்டங்கள், இழப்புக்கள்,அ...லங்களைச் சந்தித்தாலும் நாங்கள் எங்கட இடங்களிற்குப் போகவேண்டும். இதற்கான நடவடிக்கைகளைச் செய்தால் போதும். வேறு எதனையும் செய்ய வேண்டாம். இங்குள்ள சிறுவர்களிற்கு தமது சொந்த இடங்கள்தெரியாது. முகாம்வாழ்வே அவர்களது வாழ்வாகவுள்ள தென்றார் தலைவர் ரஞ்சிதமோகன்.

இந்த நலன்புரி நிலையங்களிலுள்ள தரம் 9 இல் கல்வி கற்கும் காமினி-நல்லதம்பி எம்மிடம் கூறியவை;

நான் கோண்டாவில் பரஞ்சோதிவித்தியாலயத்தில் படிக்கிறேன். இங்க கல்வி கற்பதற்கான சூழலோ எதுவித வசதிகளோஇல்லை. நடந்துபோகும் போதே களைத்துப் போவம். ஒன்றும் செய்யவியலாது. எங்கட சொந்த வீட்ட இருக்கேக்க வேலைக்குப்போகாமலே சீவிக்க முடியும். எங்கடஇடங்களிலுள்ள இராணுவம் வெளியேற வேண்டும். பல போராட்டங்களை நடாத்தியும் பயன் இல்லை. வழக்குக் கூட நடக்கிறது. இவை எல்லாம் எப்பதான் சரிவருமோ என தம் இயலாமையை வெளிப்படுத்தினார் தலைவர் சிவனேஸ்வரன்.

இணுவில் கிழக்கு தியேட்டர் ஒழுங்கையில் நலன்புரிநிலைய மக்கள் கடந்த 15 வருடங்களாக அடிப்படை வசதிகளின்றி தற்காலிக வீடுகளிலுள்ளனர். 15 வீடுகளில்

**இரா-வின்**

60 வரையான அங்கத்தவர்கள் இருந்தபோதும் ஒரு மலசல கூடமும் ஒரு குழாய்க்கிணறுமேயுள்ளது. கட்டுவன் தெற்கு ஜே-239 கிராம சேவையாளர் பிரிவில் இருந்து 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த போதும் தம்மைமீள் குடியமர்த்தவோ,நிரந்தரமான வீடமைப்புத்திட்டத்தை அமைத்துத் தரவோ யாரும் முன்வரவில்லையென மக்கள் வேதனையுடன் குறிப்பிடுகின்றனர்.

இங்குள்ளசிறுவர்கள்-மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவர்களிற்கான கல்வித் தூண்டல்கள் பொழுது போக்கு செயற்பாடுகளிற்கான வழிவகைகள் எவையும் ஏற்படுத்தப்படவில்லை. குடியிருப்புக்களிற்கு இடையிலான வீதி மழை காலமாகையால் வெள்ளம் தேங்கியுள்ளது. நுளம்புகளின் தாக்கம் அதிகரித்ததுடன் தொற்று நோய்கள் பரவும் அபாயமுள்ளதனையும் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.


ஜே-190 கிராமசேவையாளர் பகுதியில் உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அவசியமாக தேவைபபடும் ஒன்றாகவுள்ளது. இவற்றை சம்பந்தப் பட்டவர்கள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

இடம் பெயர்ந்த மக்களை மேலும் இன்னல்களிற்கு இட்டுச் செல்லாது அவர்களிற்கு அவசியமான தேவைகளை ஏற்படுத்திக் கொடுக்க தகுதியானவர்கள் முன்வரவேண்டும். மாணவர்கள்- சிறுவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அவர்களது தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். இவை காலம் தாழ்த்தாது மேற்கொள்ளப்படல் வேண்டியது.

பொறுப்பு வாய்ந்த அமைச்சு அதிகாரிகள், மாவட்ட பிரதேச செயலாளர்கள்,அரச சார்பற்ற, மத ரீதியான நிறுவனப் பிரதிநிதிகள் இம் மக்கள் மீதும் தமது பார்வையை திருப்ப வேண்டும். கல்வி, கலை, கலாச்சார, சமூக பொருளாதாரம் என பல்வேறு வழிகளில் பின்தங்கி தமது இருப்புக்களை தொலைத்த அம் மக்களிற்கு மறுவாழ்வளிப்பது யார்.

நலன்புரி நிலைய மக்கள் ஒன்று சேர்ந்து அரச நிறுவனங்கள், திணைக்களங்களின் செயற்பாடுகளை முடக்கி போராட்டங்களை நடாத்துவதை நிறுத்திவிட்டு இராணுவ முகாம்கள் காவலரண்களைச் சூழ்ந்து இராணுவத்தை வெளியேறவிடாது அவர்களது செயற்பாடுகளை முடக்க வேண்டும். முகாம்களிற்குள் படையினரை முடக்கி அடக்கும் வகையில் தொடர் போராட்டங்களை நடாத்துவதன் மூலமே இவர்களிற்கான பாதைகள் திறந்து பயணங்கள் தொடரும். இவர்கள் முன்னுள்ள அவசர, அவசிய வேலை இது மட்டுமே.

இனவாத அரசாங்கத்தாலும், அடாவடித்தனம்புரியும் இராணுவத்தினராலும் இதுவரை யாழ்ப்பாணத்தில் 18 ஆயிரம் விதவைகள் உருவாகியதுடன் 40 ஆயிரம் பெண்கள் தமது வாழ்விடங்களை இழந்துள்ளனர்.



# மண்ணின் மைந்தர்களின் கதை

# விடுதலைப் போரின் புனிதன்

**லெப்.தொண்டமான், பெரியதம்பி சோதரராசன், முகாவில், இயக்கச்சி, வீரச்சாவு 01.08.1997.**



தேசபக்தர்கள் எப்படி உருவாகிறார்கள் என்பது தேசத்தின் மீது கொண்ட காதலுக்குள் புதைந்து கிடக்கிறது. தன் தேசத்திற்காய் ஏதோவொன்றைச் செய்யவேண்டும் என்பதைவிட தங்களின் உயிருக்கு மேலாக கடமைகளைச் செய்து முடித்திருக்கிறார்கள். உயிரைவிட ஏதாவது செய்யமுடியுமா? என்று சிந்தித்து எவருமே செய்திடாத வேலைகளைச் செய்து முடிக்கின்றனர்.

லெப் தொண்டமான் என்ற மாவீரரின் கதையும், அவனது தந்தையாரின் கதையும் தேசத்தின் மீதான கதை.

இயக்கச்சி முகாவிலைச் சேர்ந்த பெரியதம்பி என்ற அந்த விவசாயி தேசப்பற்று நிறைந்தவர். ஆனால் அவரால் தேசத்திற்கு உழைக்க முடியாத அளவு முதுமையடைந்திருந்தார். தனது முதுமையிலும் எப்படியாவது தமிழீழத் தாயக விடுதலைப் போராட்டத்திற்குப் பங்களிப்பு செய்யவேண்டும் என்று ஆரவாரப்பட்டார். ஆரம்ப காலத்தில் இயக்கத்திற்குபெரிய உதவிகளைச் செய்தவர் என்றாலும் இப்போது மேலும் பங்களிப்பு செய்ய விரும்பி ஒரு முடிவுக்கு வந்தார்.

எட்டு ஆண்பிள்ளைகளுக்குத் தகப்பனான, பெரிய தம்பி தங்களது பிள்ளைகளை ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு இணையும்படி கேட்டார். அதற்கமைய ஏற்கனவே இயக்கத்திற்குப் போவதற்காக ஆர்வமாக இருந்த அவரது ஐந்தாவது மகன் சோதரராசனை தாமாகவே போராட்டத்தில் இணைத்துவிட்ட வரலாற்றுச் சம்பவம் 1995 ஆம் ஆண்டு அக்கராயனில் நடந்தது.

12.07.1995ஆம் ஆண்டு புதன்கிழமை ஈழநாதம் செய்தித்தாள் அந்தச் செய்தியை பிரசுரித்திருந்தது. "விடுதலைப் போரைப் புனிதப்படுத்தும் பெற்றோர்கள்'' என்ற தலைப்பில் வெளியிட்டிருந்த செய்தியானது சிங்கள ஆக்கிரமிப்பில் வாழும் பெரும்பாலான மக்களின் மனங்களில் புதியதொரு எண்ணத்தை உருவாக்கியதை மறக்கமுடியாது.

முகாவில் எனும் அழகான கிராமத்தில் வாழ்ந்த அந்த வீரனின் உதடுகள் அடிக்கடி உச்சரிப்பது

"நான் இயக்கத்திற்கு போகப் போறன்"

"நான் இயக்கத்துக்குத்தான் போவன்"

என்று அடிக்கடிச் சொன்ன அந்தமாவீரனின் வாழ்வலும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் அட்டூழியங்கள் சாட்சியாயின.

1991 ஆம் ஆண்டு ஆகாய கடல் வெளிச்சண்டையின் பின்புமுகாவில் கிராமம் சிங்களக் காடையர்களால் மிக மோசமாக எறிகணை வீச்சிற்கும், விமானத்தாக்குதல்களுக்கும் இலக்கானது. ஆனையிறவில் எதிரியிருந்த காலம் முழுவதும் இயக்கச்சி,முகாவில் கிராமங்கள் நோக்கி மிக மோசமான தாக்குதல்களை நடத்தினர்.

இதனைவிட 1995 ஆம் ஆண்டு சூரியக்கதிர் 02 ஆவது நடவடிக்கையின் போதும் எதிரியின் ஆக்கிரமிப்புக் காரணமாக இவனது ஊர் மக்கள் இடம்பெயர்ந்து ஏதிலிகளாயினர். இதன் காரணமாக சிங்களவருக்கு நிகராக தமிழர் படையும் உருவாகவேண்டும் என்று நினைத்த இந்த வீரன் 1995 ஆம் ஆண்டு தாமாக வந்து போராட்டத்தில் இணைகிறான்.

மாவீரன் வீர வேங்கை லெப்.தொண்டமான் (பெரியதம்பி சோதரராசன்-முகாவில் இயக்கச்சி) என்ற மாவீரரின் உணர்வுகள் வித்தியாசமானது. தனது தாயான பெரியதம்பி பிள்ளைநாயகியிடம் இவன் அடிக்கடி கேட்பானாம்,

"ஏன் அம்மா நீங்கள் உங்களின்ர காலத்தில போராடி இருக்கலாம்தானே"

"எனே அம்மா நான் போராட்டத்திற்குப் போனா நீ என்ன செய்வாய்" நான் வீரச்சாவடைந்தால் கல்லறைக்கு வருவாயோ?

என்ற கேள்விகளையே கேட்பான் என்று அவனது தாயார் நினைவு கூர்ந்தார்.

தொண்டமான் என்று சொன்னவுடனேயே கண்ணீர் வடிக்கும் அந்தத் தாயின் குரலில் தெளிவு இருந்தது.

"தம்பி நாங்களெல்லாம் விரும்பித்தான் என்ர மோனை போராட அனுப்பினோம். நாட்டிற்காக அவன் வீரச்சாவடைஞ்சிருக்கிறான்" என்றார்.

ஆரம்பக்கல்வியை முகாவில் மகாவித்தியாலயத்திலும், அதன் பின் பளை மகாவித்தியாலயத்திலும் படித்த லெப்.தொண்டமான் சிறந்த திறமைகளை கணிதப் பாடத்தில் மிகக் கெட்டிக்காரன். போராட்ட காலங்களில் இடர் நிறைந்த களவாழ்வில் கூட அவனோடு ஒரே காவலரணில் உள்ள போராளிகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பான்.

1995 ஆம் ஆண்டு இயக்கத்தில் இணைந்தவன் ஊக்கமுடன் ஆரம்பப் பயிற்சிகளைப் பெற்று வன்னிமாவட்ட 1.9 தாக்குதல் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

தனது திறமையின் வெளிப்பாடாக படைத்துறைசார் அறிவுகளைப் பெற்றுக்கொள்வதில் தானே தேடல்களை ஆரம்பிப்பான். அத்தோடு புதிய ஆயுதங்கள், வெடிமருந்து, போர்விமானங்கள், போர்க்கப்பல்கள் பற்றிய தகவல்களைக் கேட்டுஅறிந்துகொள்வதில் ஆர்வமாக இருப்பான்.

சிங்கள இராணுவத்தினருக்கு எதிரான சண்டைகளில் வீரமுடன் செயற்படுவான். லெப்.தொண்டமானின் முதலாவது தாக்குதலே பெரியதொரு சண்டையாகும். சூரியக்கதிர் 01,சூரியக்கதிர் 02 சண்டைகளில் பங்குபற்றி அதில் தற்துணிச்சல்களைக்காட்டி,தனது அணித்தலைவர்களிடம் திறமான சண்டைக்காரன் எனப் பெயர் பெற்றான்.

சூரியக்கதிரில் தான் பெற்ற சண்டை அனுபவத்தின் ஊடாக, இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் இடம்பெயர்விற்கும், ஏதிலி வாழ்விற்கும் காரணமாயிருந்த சிங்கள அராஜக இராணுவத்தினரின்அழிவைத்தானே முன்னின்று செய்யவேண்டும் என்று சபதம் எடுத்தான்.

அதனைத் தொடர்ந்து, முல்லைத் தீவுத்தாக்குதலுக்கான பயிற்சித் திட்டம் ஆரம்பமானது அந்தப் பயிற்சியில் வேகமுடனும் ஓர்மமுடனும் செயற்பட்டான்.

அவன் ஆர்ப்பரித்தது போலவே முல்லைத்தீவுச் சண்டையில் தனது அணியுடன் சேர்ந்து நல்லதொரு தாக்குதலை சிங்கள எதிரி மீது செய்துமுடித்தான்.

எங்களின்ர மண்ணில வந்து எங்களுக்கே சவாலா? என்று சொல்லிச் சொல்லியே எதிரியை சுட்டு வீழ்த்தினான்.

தனது படையணியான சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று சொல்லிச் சொல்லியே சண்டை செய்வது இவனது இயல்பு. தனது நண்பர்களுடன் சேர்ந்து புதிய புதிய வியூகத்தை உருவாக்கி சண்டை செய்வான்.

லெப்.தொண்டமானுக்கு தாயகத்தில் எந்தளவுக்குப் பற்று இருந்ததோ, அதேயளவு தனது படையணியிலும் பற்று இருந்தது. ஆனால் இவற்றைவிட ஒரு பங்கு மேலாக தனது அணியில் பற்றும்,அக்கறையும் இருந்தது. தனது அணிக்காக சண்டை செய்வதும், அதற்காக முழுமூச்சாக உழைப்பதும் இவனது சிறப்பியலாகும்.

"மச்சான் எங்கட ரீமோட உங்களால போட்டி போட முடியுமோ?"

என்று அடிக்கடி சவால் விடுவான். அந்தச் சவாலை தனது சக்தியாக எடுத்தவன் தொடர்ந்து நடந்த சமர்களான பரந்தன், ஆனையிறவுச் சமர், சத்ஜய, ஜெயசிக்குறு எதிர்ச்சமர், தாண்டிக்குளம் முகாம் தகர்ப்பு என்று எல்லாச் சண்டைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டான். செக்சன் அணியொன்றின் தலைவனாக இருந்தவன் தனது அணியை சிறந்த கட்டளை ஊடாக நன்கு வழிநடத்தி பல சாதனைகளைச் செய்தான். இவனது வீரத்திற்கு சவால்விட்டு 01.08.1997 இல் நடந்த ஓமந்தை ஊடறுப்பு வலிந்த தாக்குதலில், தடையணியுடன் சென்று நன்கு சண்டைசெய்து வீரச்சாவடைந்தான். வீரச்சாவு அடைவதற்கு முன் விடுமுறையில் வீடு சென்றவன் தனக்கு உடுப்பு எடுத்து வைக்கச் சொன்னானாம் எடுத்துவைத்த உடையைப் போடுவதற்கு முன் அவனது வித்துடலே வீட்டிற்கு வந்தது. தேசப்பற்றுள்ளஅந்த வீரனின் உணர்வுகள் என்றும் இம்மண்ணில் வாழும்.



**விடுதலைப் போரை புனிதப்படுத்தும் பெற்றோர்கள்**

அக்கராயன்குளத்தைச் சேர்ந்த பெரியதம்பி என்பவர் தனது மகனான பெ. சோதரராசன்[வயது 19] என்பவரை கடந்த சனியன்று தாமாக முன்வந்து விடுதலைப் போருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் கிளி/மீகாட்டச் செயலகத்தில் ஒப்படைத்துள்ளார்.

— க.மிரேசு —



# காரசாரம்

## சுய பொருளாதாரம் ஒரு கனவல்ல..!

குப்பைகளை அகற்றவும் அவற்றை கொளுத்தவும் தான் வேண்டுமா. மாரிகாலத்தில் வரக்கூடிய சகல நோய்களும் சேற்றிலும் நீரிலும் தான் உருவாகின்றன. என்றாலும் எம்மக் களுக்கு சேறும் நீரும்தான் வாழ்க்கை என்றாகிறது. நான்கு வருடங்களுக்கு மேலாக ஓரளவு பொருளாதாரத்தடை நீங்கி எம்மக்கள் வாழ்வது போல் தோற்றமளித்தாலும், மூடாகூளை யாகப் பற்றிப் பிடித்துவரும் அந்தப் பெருநெருப்பு அணையப் போவதில்லை.

ஆம் எமது சுய பொருளாதார அபிவிருத்தி என்பதும் இங்கிருந்து வெளியே செல்லும் எமது வருமானமும் தான். எத்தனை தடவை இது பற்றிப் பேசினாலும் இதற்கான தீர்வை மாசேதுங்கைப் போலவோ, காந்தியைப் போலவோ, கியூபாவைப் போலவோ, வளர்ந்துவிட்ட யப்பானைப் போலவோ நாம் முன்னெப் போதும் முயலவில்லை என்று கூறமுடியாவிட்டாலும் இப்போது முயலவில்லை. ஒரு பேச்சுக்குச் சொல்வதானால் பத்திரிகை படிப்பது அநேகருடைய பழக்கம். இல்லை அதுவே வாழ்க்கை என இருக்கும் முதியோரும் உள்ளனர். தினசரி, வாராந்தம் எனப் பத்திரிகைகளை வாங்கினாலும் அவற்றை வீடுகளில் சேர்த்துவைக்க முடியாது. தொகுப்புகளை பொது நூலகங் களிலே பெறக்கூடியவாய்ப்பு இருக்கிறது.

ஆகவே வீடுகளில் சேரும் பழைய புத்தகங்கள், பத்திரிகைகள் என்பன பொட்டலம் கட்டுவதற்காக மளிகைக் கடைகளுக்கோ, உணவு விடுதிகளுக்கோ விற்பனை செய்து ஒரு சிறு தொகையைப் பெறமுடியும். இது விற்பனையாளருக்கு பெரிய வருமானமுமில்லை. இழப்பீடும் இல்லை. ஏதோ. வீட்டில் தேங்கும் குப்பைகளாகக் கருதும் இக்கடதாசிகள் மீள் பாவனைக் குப் போகிறது அவ்வளவுதான். ஒரு காலத்தில் கடதாசிகளை மீண்டும் கடதாசியாக்குவதற்காகவும் கொள்வனவு செய்தார்கள். அதே போன்று போத்தல்களும், வெற்றுப் போத்தல்கள், பேப்பர் கள் இவற்றை வீடுவீடாகத் திரிந்து வாங்கி கடைத்தெருவில் ஒரு சிறுலாபம் வைத்து விற்கும் ஏராளமான பள்ளிச் சிறுவர் களுள் நானும் ஒருத்தியாய் இருந்துள்ளேன்.

எங்கள் வீட்டிலும் அயலிலுள்ள சில வீடுகளிலும் பெறப்பட்ட இந்தவகைப் பேப்பர் புத்தகங்களை மீண்டும் கிளறிப்



படித்துவிட்டு விற்கும் பணம் எனது பென்சில், கொப்பி, வீட்டுக் குத் தேவையான மண்ணெய், கோறாத்தேயிலை, பருவகாலத் தில் போளை, பட்டங்கட்டும் நூல் என உருமாறியிருக்கிறது. இந்தப் பத்திரிகை பேப்பர் வாங்கும் தொழிலைச் செய்பவர் களுடைய குரல் இன்றும் என் காதில் ஒலிப்பது போன்ற பிரமை.

"ஓ...ட்ட உடைசல் பேப்பர் புத்தகம் போ...த்தேல் (போத்தல்)"

இந்தக் குரல் இப்போது கேட்பதில்லை, நகரங்களில் கடதாசி பொறுக்கும் சிறுவர்களும் இல்லை. ஏன் பழைய கடதாசியின் பாவனை குறைந்துவிட்டதா இல்லையே. ஆனால் உள்ளூரில் படித்த பேப்பர்களை வாங்கி பொட்டலம் கட்டுவது கௌரவக் குறைச்சல் படித்த பேப்பர் கசங்கிப் போயிருக்கும். அலுங்காமல் குலுங்காமல் அச்சடித்தபடி பிரித்துப் படிக்காமலே கிடக்கும் ஆங்கில சிங்களப் பத்திரிகைகள்.

அலுங்காமல் குலுங்காமல் வாகனத்திலேறி இங்கே வருகிறது. வாகனச் செலவு பழைய பேப்பர் செலவு எனப் பணம் தெற்கு நோக்கிச்செல்கிறது. உள்ளூர் மக்கள் படிக்கப் பயன்படுத்திய பேப்பர்கள் சீண்டுவாரற்றுக் குப்பைகளுக்குப் போகின்றன. பத்திரிகைத் துண்டுகளை மீண்டும் கடதாசியாக மாற்ற இங்கு எதுவிதவசதியும் இல்லை.

இதைவிடப் பெருமளவில் செலவாகும் சீமெந்து அடைத்துவரும் வெற்றுப்பை நாங்கள் மாட்டுத்தாள் என்று தான் இதைச்சொல்வோம். இந்தப் பைகளில் இரண்டு அளவுகளில் சிறு சிறு பைகளை ஒட்டிவிற்பது குடிசைக் கைத் தொழிலாக நடந்து வந்தது. அதன் விலையைப் பொறுத்து பெயரிருக்கும். அஞ்சியேத்துப்பை பத்திச்சேத்துப்பை இன்றும் ஒரு வயோதிபப் பெண் மீன்சந்தையில் இந்தப் பைகளை

விற்றுவருகிறார். பொருட்களைப் பாதுகாப்பாக வீடு கொண்டு செல்வதற்கு உத்தரவாதமுள்ளது இவ்வகைப்பைகள். இன்று வரும் நெகிழங்களை விரிப்பதற்கு ஊதினாலே வெடித்துவிடும்.

அதில் அரிசியைக் கட்டி அரைவழியில் கொட்டி அவதிப்படுவோர் அதிகம். நல்ல நல்ல விடயங்களையெல்லாம் தவற விட்டிருக்கிறோம். சுயபொருளாதாரத்தன்மையையே அறவே மறந்து போய்விட்டோம். தென்னந்தும்பும் வைக்கோலும் கொண்டு சாம்பல் பூசிவிளக்கிய பாத்திரங்களுக்கு இப்போது சைனாவிலிருந்து வரும் ஜிகினாத் தும்பும், ஷாம்பும் தேவைப்படு கிறது. கனக்க ஏன் மல்லிகைச் செடி வளர்த்து மணக்க மணக்க மொட்டுக்களைப் பறித்து மாலைகட்டித் தலையில் வைத்த பெண்களுக்கு பிளாஸ்டிக் மல்லிகைச்சரம் கனகாம் பரச்சரம் எல்லாமே கப்பலேறிவருகிறது.

மல்லிகை மணக்கவேண்டிய முற்றங்களில் குரோட் டன் செடிகள் குலுங்கிச் சிரிக்கின்றன.இப்படியாகத்தானே எங்கள் வாழ்க்கையை அந்நிய நாகரிக மோகம் கொள்ளை கொண்டு போக என்ன காரணம். முதலில் உள்ளூர் உற்பத்திகளையும், விளைபொருட்களையும், சந்தைப்படுத்தமுடியவில்லை. கால்நடை வளர்ப்போர் படும் அவலம் அதிகம். திட்டமான சந்தைக்கூறல் தீனுக்கும் மட்டும் என்றிருக்கிறது.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்த்தால் பத்திரிகை களை மீண்டும் பத்திரிகைகளாக்கும் சாத்தியப்பாடு இல்லை. இல்லவேயில்லை எனலாம். மாதமொன்றுக்கு செய்திகளுடன் உள்ளே வரும் பத்திரிகைகள் எத்தனை தொன் பழையனவாக உள்ளே வருபவை அவற்றை கழித்து வருகிறதா இல்லை நிற்க,பண்டிகைகள், விழாக்கள், சமயச்சடங்குகள், வீட்டுக் கிரியைகள் என்பவற்றிலும் பொது நிகழ்வுகளிலும் பொட்டலமாக உணவு விநியோகிப்பது ஒரு புது முறையல்ல. இந்தப் 'பார்சல்' கள் அநேகமாக வீடுகளில் பாவிக்கப்பட்ட அதாவது படித்து முடித்த பழைய பேப்பர்களிலேயே கட்டப்படுகிறது.

சில நாட்களில் சாவு அறிவித்தல்கள், சாவடைந்தவர் களுக்கான நினைவு நாட்குறிப்புக்கள் பத்திரிகைகளில் வருவதுண்டு. மிக அழகாக அச்சிடப்பட்ட மாவீரர்களின் படங்கள் பக்கங்களை நிறைத்து வருவதுண்டு. பாதுகாக்கப்பட வேண்டியவை இவை. ஆனால் சில இடங்களில் உணவுப் பொட்டலங்களில் இவர்கள் சுருட்டப்பட்டுவரும் போது மனம் வேதனையடைகின்றது. இப்படங்கள் தாங்கிவரும் பத்திரிகைகள் கிழிந்து அரைகுறையாக இருப்பதையே தாங்க முடியவில்லை.

ஏராளமான சினிமாப்படங்களுககும் நடிகைகளுக் கும் மத்தியிலும் இந்தப் படங்களை வைத்துப் பார்க்கமுடியாத போது பழைய பேப்பர்களில் சிதை வடையும் படங்களைத்தவிர்க்கலாமே. இதைவிடப் பழைய பத்திரிகைகளின் மீது எங்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பும் அதனால் ஏற்படும் செலவும், சிறிதாகத் தோன்றினாலும், அதன் விளைவுகள் பெரியதுதான். மனித உள்ளங்களில் ஏற்படும் அவநம்பிக்கை, அலட்சியம், எதையும் துச்சமாகத் தள்ளிவிடும் போக்கு ஆபத்தானது. இதைவிட எங் கள் நாடு ஒரு குப்பைத்தொட்டியாக மாற் றப்பட்டுக்கொண்டிருக்கிறது. அச்சிட்டு படித்துப்பார்க்கவும், பொட்டலங்கள் கட்டவும், புதுத்துணிகள் சுற்றவும், எழுதவும், படிக்கவும்,எல்லாம் எல்லாமே வெளியிலிருந்து வந்தால், இந்த மூலப்பொருட்களும் முடிவுப்பொருட்களும் தேங்கிப்போய் விடுகின்றன. நாம் பேணி களை விட்டு பிளாஸ்டிக் பைகளுக்கும் அலுமினியப் பைகளுக் கும் மாறியதாலும் கூடபுதிதாகப் பெரும் குப்பைச் சரக்குகளைச் சேர்த்துள்ளோம். எது எப்படியோ எம்மிடம் மீந்திருக்கும் பழைய பேப்பர்களை நாம் என்ன செய்வது, உள்ளூர் வருவாய்த் துறையினரின் பணிதானே இது. உள்ளூர் வருமானங்களைக் கணக்கிட்டு அவற்றைப் பாவனைக்குவிட்டு மேலதிக தேவை களுக்கு மட்டுமே இறக்குமதி செய்ய வேண்டும். கணக்கற்ற செலவுகள் வீட்டுக்கும்சரி,நாட்டுக்கும்சரி நட்டத்தையே ஏற்படுத்தும்.

பேப்பர்களின் இடத்தை வேறு உதவாத பொருட் களால் இட்டுநிரப்புவதால் என்ன பயனும் இல்லை. மேலும் மேலும் நசிந்து கிடக்கும் பொருளாதாரத்தை இறக்குமதிகளால் நிரப்புவது நாட்டை முன்னேற்றும் வழியல்ல. கழிவுப்பத்திரிகை களிலிருந்து முகமூடிகள், பொம்மைகள் என்பவற்றையும், இதே பொருட்களைத் தும்பிலிருந்து செய்து வர்ணம் தீட்டிப் பெருமளவு அந்நியச் செலாவணியையும், அதனோடு கூடிய உல்லாசப் பயணிகளையும் கவர்ந்து பெற்றுள்ளது இலங்கை யில் ஒரு மாவட்டம். பழைய பேப்பர் ஏராளமான வளங்களைக் கொண்டுள்ள மூலப்பொருளும் கூட. பெருமளவு முதல் தேவைப்படாத ஒரு அரிய பொருள். எப்போது நாம் எம்மை வளர்க்க வேண்டும் என்று சிந்திக்கிறோம். கல்லிலே நாருரிக்கும் அளவுக்கு முயற்சி செய்யும் அல்ஜீரிய மக்களும் கூட மனிதர்கள்தானே. போராடியவர்கள் தானே. நாங்கள் ஏன் மாறுகிறோமில்லை. சுயபொருளாதாரம் கனவல்ல. அது நம் மனங்களில்தான் தங்கியுள்ளது.

-மாயா-



# விசுக்விசுக் விசாலாட்சி

இப்ப ஆர் லெச்சனில என்ன வாக்குறுதி குடுத்தவை எண்டதச் சனம் மறந்து போச்சுதோ... இல்லாட்டி அரசியல் வாதியள் தான் மறந்து போச்சினமோ. தெரியாதுடாப்பா,

"ஆறுகடக்கு மட்டுந்தான் அண்ணனும் தம்பியும்." எண்டொரு கதை சொல்லுறவை இதென்னண்டாடாப்பா. ஆறுகடந்த பிறகும் அண்ணனுந் தம்பியும் சேர்ந்தே ஊசிமாறி விளையாடுகினம். கதை என்ன தெரியுமோ... முதல் நோர்வே வெளியாலபோ நாங்கள் இந்தியாவை வச்சுத்தான் உடுக்கடிக்கப் போறம். எண்டிச்சினம். இந்தியா என்னண்டா வேப்பிலையைப் பிடிச்சுக் கொண்டு ஜிங்கா ஜிங்கா எண்டு ஆடி...." ஏய்... ஏ...ய் ஆடாத பேய்களெல்லாம் ஆட்டி வைக்கும் வீரசத்தீ... கூடாத பேய்களெல்லா.

கூட்டிவைக்கும் சூரசத்தீ....

எண்டுதான் கிளம்புமெண்டு விரவன்சர் நினைச்சு மூண்டுநாளா இந்தியாவுக்க பெரிய பெரிய தலையளயெல்லாம் மடக்கி அப்பிடியிப்பிடி யெண்டு பாத்தா... ச்சா சரிவரயில்ல "நீ போ மச்சான் நோர்வேயார் செய்வார், நானும் அங்கின இடைசுகம் எட்டிப் பாக்கிறன் எண்டிட்டார். அவையும் இப்ப புயல்லும் மழையிலும் நனைஞ்சு தோஞ்சு தானெ நிக்கினம். சுனாமியோட போனதே.

அது கிடக்க ஒரு சட்டப் பழமொழி இருக்கய்யா. "கறை படிந்த கையால் நீதிவழங்க முடியாது" எண்டு பின்ன பிச்சைக்கு திரியிறவன் இன்னொரு பிச்சைக்காறனுக்கு உதவுறதும், ஆசுப்பத்திரிக் கட்டில்ல கிடக்கிறவன், பக்கத்துக் கட்டில்ல கிடக்கிறவனுக்கு உதவி செய்யிறதும் எந்தளவில இருக்கும் இன்னும் போபால் விசவாயுவில செத்தவைக்கும் குஜராத்தில பூகம்பத்திலயும் இவயட படுகொலையள்ளயும் செத்தவைக்கு இவயட்ட சொல்ல ஒரு வதிலுமில்லை. காணாத துக்கு நக்சலைட்டுகள் ஹிந்துப் பரிகலங்கள் எண்டு குண்டு குண்டா வெடிக்குது பம்பாயில அதை என்னண்டு பாக்க முடியா மைக்கு அல்லாடுகினம். என்னவோ ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தியேழில செய்து தொண்ணூறில அவயட இராணுவத் தாலயே கொல்லப்பட்டு கோமாவில கிடக்கிற ஒப்பந்தம் ஒண்டு கிடக்கெல்லே.

அதுக்கிப்ப ஒக்கிசன் குடுக்க வெளிக்கிட்டவர் மங்களத்தார். பேய்ப்பொடியன் ஒச்சிசன் வயரை ஏற்கனவே புலித்தடையெண்ட கத்தியால அவைதுண்டுதுண்டா வெட்டிப் போட்டின மெல்லெ. என்னண்டு உயிர்வரும்.


பிறகு மங்களத்தார். சொல்லுறார் எண்டு வந்து கதைக்கவெளிக்கிட்டா மனமோகன சிங்கர், பொடாவில போக வேண்டியது தான் அதோட போகுமே இவை சிறீ பெரம்புதூர் வழக்கில தண்டனை வழங்கி கவுரவிச்ச எங்கட தலைவருக்கு இஞ்சாலுப் பகுதியார் இருநூறு வரியம் தீர்த்தவரெல்லே. இவயளப் போல ஒரு கஞ்சல் மனிசர் ஆரும் இருக்கினமோ இல்லக்கேக்கிறன்.

சூழ்நிலையள வைச்சக் கொண்டு குற்றவாளியத் தேடுறது தான் நீதி. அதை விட்டிட்டு இவன்தான் ஆளெண்டு வச்சுக் கொண்டு அத ஒப்பிக்க சாட்சிதேடின ஆக்கள் தானே. நாடுதான் ஏற்குமோ நகரந்தான் ஏற்குமோ. உலகந்தான் ஏற்குமோ உதை. உப்பிடிப்பட்டவை இப்ப, என்னதான் பேச வந்தாலும் ஏற்கிறளவில தமிழர் இல்லை. அட மனஞ் சுத்தமாயில் லாட்டியும் கழுத்த நெரிக்கிற பிரச்சினையள்ள விழுந்தெல்லோ இப்ப கையப்பிசையிறாராம் மகிந்தர்.

அதை வைச்சுக் கொண்டு தானாம் ராவோடராவ சகோதரயாக் கட்சியளக் கூப்பிட்டு ரகசியக் கூட்டம் வச்சாராம்.

தம்பீ.... ஊருக்குச் சொல்லுமாம் பல்லி களனிப் பானையில விழுமாள் துள்ளியெண்டு, வீர புரனப்புவாக்களும் கெப்பிற்றிப்பொலமாரும்- கெமுனு ராச்சியம் செய்யப் போகினமெண்ட புளுகில, ஜெயவேவா போட்டினம், இப்ப அதுகும் போச்சுடா அரஹரா, இதுகும் போச்சுடா சிவசிவாண்டு, சண்டை போடமாட்டாம சவடால் மட்டும் போட்டிருக்கினம். அதுக்குள்ள உலகமே சிரிக்கிறமாதிரி ஒரு பட்ஜெட், இப்ப தங்கட ஏலாமைய வெளியால விடேலாம விழுந்தெழும்பின பள்ளிக்கூடப்பெடியளப்போல பக்கத்தில பாக்கிறவையள்ள யெல்லாம் ஒருபாச்சல் என்ன டோக்கியோ காசை புலியளோட கதையாமத்தர மாட்டமெண்டா அக்காசியும் பொடியளோட கதைக்கேலாது எண்டிச்சினம். சரி நோர்வேயப் பேசவா எண்டுபோட்டு எப்பிடியாவது போய்ச்சேர்.

நாங்ககொண்டே விடமாட்டம் எண்டு பாயினம் சரிசரி இப்ப புலியள எந்தக் கட்டுநாயக்காவ அழிச்சினமோ அங்க கூப்பிட்டு பேசப்பண்ணுறதெண்டு அவை பிளான் போட அக்காசி தன்ர வீட்டிலயும் கதைக்கலாம் எண்டது எவளவு பிழைம்...ம்... மாமியாற்ற சீலை விலத்தினா கையாலுங்காட்டேலா வாயா லுஞ் சொல்லேலா எண்ட மாரி மகிந்தமாமா ஜே.வி.பீ உறவு மாறிற்றுது. மாமியார் மெச்சிய மருமகளோ. மருமகள் மெச்சிய மாமியோ.




# "இழந்த ....வசந்தங்கள்"



"அந்த மூண்டாம் கட்டைப் பாலத்தை அண்டின அந்த முல்லைத்தீவு மாங்குளம் றோட்டுப்பக்கத்த அங்கால வற்றாப்பளை அம்மன் கோயில் பக்கம் நந்திக் கடல் வெளிய நான் பாக்கிறன். அந்த வெளியில இப்ப நல்ல தண்ணி நிக்குது. அந்த வெளியோட அப்பிடியே கொஞ்சத்தூரம் நடந்து போனால் இருபக்கமும் வயல் வெளிகள். அந்த வயல் வெளியில நான் படிக்கிற காலத்தில பள்ளிக்கூடத்தால களைபிடுங்க நாங்கள் எல்லாரும் போவம். அந்த வயல் வெளியில நிக்கிறதும் களைபிடுங்கி பிறகு எங்கட ரீச்சர் மிஸ் விஜயரத்தினம் சீனிச்சம்பலும் பாணும் தருவா... அதை இப்ப நினைச்சாலும் மனம் முழுக்க இனிக்குது.

அப்பிடியே... முல்லைத்தீவு பக்கம் பாத்தால் அங்க கண்ணாப் பத்தையள் எல்லாம் பெரிய மரங்களாய் வளர்ந்து நிக்குது. அந்தக் காலத்தில நான் படிக்கிற காலத்தில... அப்ப எங்கட மகாவித்தியாலயத்தில நாங்கள் விளையாட நல்ல மைதானம் இல்லை. நாங்கள் என்னோட படிக்கிற மரி, மாட்டின், வின்சன், கொப்பி, கிறிசி எல்லாரும் வந்து இஞ்சதான் புட்போல் விளையாடுவம். அப்ப எங்களுக்கு புட்போல் பழக்கினது.

சாண்டோ மாஸ்ரரும், தியாகுமாஸ்ரரும் இவை இரண்டு பேருந்தான். எங்களுக்கு புட்போல் கோச்சப் பண்ணுவினம். இப்ப அந்த இடத்தில கண்ணாப் பத்தையள் காற்றில சதிராடி நிக்குதுகள். திரும்பி பாத்தும் எண்டால் அந்த ஆமிகாம் பின்ர எச்சங்கள் தெரியும் . எங்கட மண்ணில நடந்த ஓயாத அலை சண்டையில அவையள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போட்டினம்.

இப்ப அதில பாக்கிறன் சுகாதாரத் திணைக்களம் பெரிய கட்டடமாய்.... நிமிர்ந்து நிக்குது. கொஞ்சத் தூரம் அந்தப் பனை வடலிக்கால நிமிர்ந்தால் வீரகத்திப் பிள்ளையார் கோயில் பாதை வரும். அங்க வருடா வருடம் நல்ல திருவிழா நடக்கும். அப்ப நானும் என்னோட படிச்ச அன்ரனியும்..... விடிய... விடிய திருவிழாபாத்துப் போட்டு, கணக்குச் செய்யாமல் முத்தையா மாஸ்ரர் மேசைக் கீழ குனிய விட்டிட்டு நல்லா அடி தருவார். அந்த அடியை நினைச்சு பார்த்தா அவர்ர ஞாபகம் வருகுது. மூக்குக் கண்ணாடியை கழட்டி மேசையில வைச்சிட்டு அடிக்க துவங்கினா பிரம்பு முறியுமட்டும் அடிப்பார். நாங்கள் படிக்கிற காலத்தில பெரிய கீரோ எண்ட நினைப்பில... திருவிழா பாக்கிற சாட்டில மெல்லமா... பெண்கள் பக்கம் திரும்பி சயிட் அடிக்கிறது, கச்சான் வாங்கி எறியிறது.. அந்த நேரத்தில அருணா இசைக்குழுதான் நல்ல இசைக்குழு, சினிமாப்பாட்டு பாடினா எங்களுக்கு பிடிச்ச பாட்டை எழுதிக் குடுக்கிறது அதுமட்டுமல்ல.... அப்ப அந்த நேரத்தில எஸ்.பீ. பாலசுப்பிரமணியம், சுசிலா பாடின இயற்கையென்றும் இளைய கன்னி... எண்ட பாட்டு... எனக்கு நல்லாப் பிடிக்கும்.

அந்தப் பாட்டில சில சமயம் நான் கனவு கண்ட காலம் உண்டு. அப்ப வீரகத்திப் பிள்ளையார் கோயில்ல, சொத்தியர் செய்யிற திருவிழாதான் மிகச்சிறப்பாய் இருக்கும். எரி வாணம், சக்கர வாணம் எண்டு வானவேடிக்கை நடக்கும். அப்ப எங்களுக்கு பெரிய கொண்டாட்டம் சந்தோஷமான நாட்கள் தான்.

அப்பிடியே... கடற்கரை றோட்டுப் பக்கம் போனால் வலது பக்கத்தில... திரும்பிப் பார்த்தால் "நிஜாம்" எண்ட ஒரு சினிமாத்தியேட்டர். அந்த சினிமாத் தியேட்டரில எத்தனை சினிமாப் படத்தைப் பார்த்திருப்பம். அப்ப கலரிக்கு ஐம்பது சதம் தான்.

நாங்கள் படிக்கிற காலத்தில புதுக்கடைதிறந்தா யானைப் போத்தல் வெறும் சோடாப் போத்தல் ஐம்பது சதத்துக்கு புதுக் கடை திறந்தால் எடுப்பினம். பத்துப் போத்தல் விடுவழிய எடுத்து வந்து குடுத்திட்டு படமும் பாத்திட்டு ஒரு பிளேன்ரீயும் வடையும் சாப்பிடுவம். அப்பிடியான நாட்கள் மீண்டும் வருமா? தியேட்டரைப் பாக்கிறன் இருந்த இடத்த காணேல்ல.

எங்கட முல்லைத்தீவில பேர் சொல்லக் கூடிய சம்மாட்டிமார் இருந்தவ எம்.எஸ். பீ. சம்மாட்டியார், அருளப்பர் சம்மாட்டியார், அருளப்பு சம்மாட்டியார் இவையள் அதிகம் படிக்காதவர்களாக இருந்தாலும் அந்த கடல் தாய நம்பி உழைப்பில நம்பிக்கை வச்சு பெரிய மனிதராய் வந்தவ. ஆனால் நல்ல மனிதாபிமானமுள்ளவை. அதில எங்கட முல்லைத்தீவு நகரசபைத் தேர்தல் நடக்கும்.

அதில வெற்றி எடுக்குறது எங்கட எம்.எஸ்.பீ. சம்மாட்டியார்தான். அப்ப வோட் போட எங்கட அம்மாவும், அய்யாவும், அப்புந்தான் போவினம்.

அப்ப எங்களுக்கு வயது காணாது. அவர் எம்.எஸ்.பீ.சம்மாட்டியார் வெண்டால் எங்கடபாடு கொண்டாட்டம் தான்.

மணற்குடியிருப்பில கடைமுதலாளி கந்தசாமியர் நடத்தின சிவசோதி தியேட்டர் பின்ன அந்த தியேட்டரில அநேகமா எம்.ஜி ஆரின்ர படந்தான் கூடுதலா ஓடுவினம். நாங்கள் எல்லாம் எம்.எஸ். பீ. சம்பாட்டியாற்ர செலவில படம் பாப்பம். இப்பிடி எங்கட காலம் ஒரு சந்தோஷமான காலந்தான்.

அதவிட சம்பேதுருவார் பெருநாள், தேவமாதா பெருநாள், நத்தார் இரவு பூசை எண்டெல்லாம் எம் கால்கள் படாத இடமே இல்லை. எங்கட முல்லைத்தீவு மாவட்டத்தில எல்லா மக்களாலயும் பயபக்தியுடனும் கொண்டாடுற தினம் எண்டால் வற்றாப்பளைப் பொங்கலைத்தான் சொல்லலாம்.

வற்றாப்பளை பொங்கல் துவங்கினால் எங்கட அந்தக் கடற்கரை திருவிழாக் கோலந்தான். வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, தாளையடி, ஆழியவளை இப்பிடி எல்லா இடங்களில் இருந்தும் தோணியில பாய்கட்டி பல தோணிகள் எங்கட தீர்த்தக்கரையில வந்து சனம் இறங்குவினம். அவை நேர்த்திக்காக வாற போது சும்மா வரமாட்டினம். வியாபாரம் செய்யிறதுக்கும், சொந்தக்காரர் நண்பர்கள் வீட்டுக்குமா, பினாட்டு, எள்ளுப்பிண்ணாக்கு, புழுக்கொடியல், பனங்கட்டி எண்டு எல்லாம் கொண்டு வருவினம் அவையள் வாறதை பாக்கிறதுக்கு நாங்கள் தீர்த்தக் கரைக்கு போவம். அது திருவிழாக் கோலம் தான்.

எங்க சம்பேதுருவானவர் கோயிலுக்கு பக்கத்தில ஒரு சுரங்க கட்டடம் இருந்தது. கடல் தீர்வை எடுக்கிறதுக்கு சுங்க இலாகா அதிகாரி அவரை இஞ்சுப் டெக்டர் எண்டுதான் நாங்கள் கூப்பிடுவம். அந்த அதிகாரியை எனக்கு இப்பவும் ஞாபகம் இருக்குது. கட்டைக் காச்சட்டை போட்டுக் கொண்டு அந்த காக்கி யூனிபோமோட அந்த கடற் கரைப்பக்கமா வருவார். அவர்ர பேர் கூட சிவபாத சுந்தரம் எண்டு நினைவு இருக்குது.

வற்றாப்பளைப் பொங்கல் எண்டால் எங்கட மாவட்டம் ஆசாரசீலமாய் இருப்பினம். வீடு வாசல் எல்லாம் துப்புரவாக்கி, வேலி வீராய் எல்லாம் அடைச்சு பாக்கு தண்டல், நடந்து பொங்கல் நடந்து முடியுமட்டும் மச்சம் மாமிசம் கிட்டக் கூட அண்டமாட்டினம். அப்பிடி ஒரு பக்தி காட்டுவிநாயகர் கோயில்ல தீர்த்த கரையில கடல் தண்ணி எடுத்து வளர்ந்து குத்து விளக்கும் கொழுத்துவினம். இப்படியான சமயப்பண்பாடு, எங்கிட்ட வளர்ந்திட்டுது. அது மட்டுமில்ல நாங்கள் பிரிந்த உறவுகளையும் புதுக்கலியாணப் பேச்சுக்களையும், ஆரம்பித்து உறவுகள் வலுப்படும் ஒரு காலம் இந்த வற்றாப்பளைப் பொங்கல் காலம். அந்த விசாக நிலவு என்ர கண்ணுக்க நிக்குது.

கன்னியர்... கோயில் அது தான். அந்த வட்டுவாகல் கன்னியர் கோயில் பூசாரி குழந்தை வேலு அப்பா மடப்பண்டம் எடுக்கேக்க கலைவந்து ஆடுவார். ஒரு ஆட்டம். அப்பு... அதை எப்படி சொல்லுறது. இப்படியான வைரவர் கோயில் திருவிழாவும் சித்திரையில நடக்கும். அதில நாகர் கோயில் விஜயன் ரீ.எம் "சௌந்தரராசன்ர முத்தைத்திருபத்தித்திரு" எண்ட பாட்டை பாடினா நாள் முழுக்க கேட்டுக் கொண்டிருக்கலாம்.

அந்த... என்ர மண்ணில... அந்தப் பிட்டியில முந்தி ஒரு வெளிச்சவீடு, பொலிஸ் சார்சன்விடுதி, ஒரு பெரிய ஆலமரம் அந்த ஆலமரம், என்ர நண்பன் சிங்காவின்ர கையை முறிச்சது அவன் விழுதில ஆடேக்க நான் தள்ளிவிட்டன் அவன்ர கை முறிஞ்சு பிறகு அப்புக்குட்டி அப்பாவிட்ட புக்க கட்டி மாறினது. பாவம் அவன்.

இப்ப... நான்... என்ர வாழ்ந்த பிறந்த மண்ணை... நினைச்சுப்பாக்கிறன் என் நினைவில நான் படிப்பிச்ச அந்த நெய்தல் ரீயூட்டரியைப் பாக்கிறன் என்னை அறியாமல் என் கண்ணில்... கண்ணீர் சிரித்த மாணவ மாணவிகளின் முகங்கள் என் மனதில் சிறிது நேரம்... வந்து மறைஞ்சு போகினம்.

அழகான என்ர ஊர் இப்ப எலும்புக் கூட்டு வடிவில தன்ர அழகு, நிம்மதி, அமைதி எல்லாத்தையும் இழந்திட்டுது. என்னை வளர்த்த அந்த முல்லை மண்ணை, படித்த பள்ளிக்கூடத்தை எல்லாத்தையும் என்ர மனதில நிறுத்திப்பாக்கிறன். சுனாமியின்ர.... அந்த எச்சங்கள் எங்கட மண்ணில இருந்து இன்றும் மறையேல்ல.

**ரமணன்**

அகதி முகாம்கள் ஊடே என்பார்வை... நிலைக்கிறது. அதன் எதிரில் சுனாமியில் இறந்தவர்களின் கல்லறைகள் உறவுகளின் பிரிவையும், அதன் இழப்பையும் எப்பிடித்தான் ஈடு செய்ய முடியும்.

என் கால்கள்... என்னை அறியாமல் ஒரு கல்லறையின் முன்.... நகர்ந்து சென்று நிற்கிறது. அந்தக் கல்லறை புதிய நினைவுக்காய் மீண்டும் வெள்ளையடிக்கப்படுது.

அந்த இறந்த என் மண்ணின் உறவுக்களுக்காய் என் மனம் மீண்டும் ஒரு முறை பிரார்த்திக்கிறது. இழந்த வசந்தங்கள் எம் மண்ணில் புதிய விதைகளாய் மலரட்டும்.

# இரத்த ஓவியங்கள்...

ஆயிரம் வலிகளைத் தாங்கி அக்கினிக் குழம்பில் அண்ட சராசரங்களிற்கு அர்த்தம் கூறிய அந்த வானத்துத் தாரகைகளின் "இரத்த ஓவியங்கள்" 21.11.2005-30.11.2005 வரை அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆனையிறவு வெளி தனிலே....
ஏதோர் எதிர்பார்ப்பு.... பல கற்பனைகள்.... ஈழப்போராட்ட களங்கள் எமது வெற்றிகள்... வாழ்க்கையின் கோடுகள்... சிந்தனையைத் தொட்டு நிற்கின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து தொடர்கின்றது பயணம் முகமாலை நோக்கி...
வரிசையில் காத்திருப்பு"பாஸ்" அனுமதிக்காக கையை நீட்டி படிவத்தை கொடுக்க, வார்த்தைகளேதுமின்றி எழும்பிச் செல்கின்றார் பதிவாளர்.
மறுவரிசையில் காத்திருப்பு. படிவமும் அடையாள அட்டையும் நீட்டப்படுகின்றது.
நிமிர்ந்து பார்க்கின்றார்.
"நீங்கள் கலியாணம் செய்தனீங்களா?...
"வீண்ணப்பத்தில் எழுதியிருக்கு..."
"கலியாணம் முடிக்கேலை எண்டால் முடிக்காத மாதிரி போக வேணும்..."
"ஏன் என்னத்தைக் கண்டனீங்க?..."
வாக்குவாதம் வளர்கின்றது. விண்ணப்பப் படிவத்தைப் பெறுகின்றேன்.
மனசுக்குள் சிரிப்பும் வேறு. வளாகத்தைச் சுற்றி விபரங்கள் அதிகம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் கலியாணம் செய்யாதவர்கள் எப்படி இருக்க வேணும், கலியாணம் செய்தவர்கள் எப்படி இருக்க வேணும் என்ற அறிவிப்பை தேடினேன். அந்தவிபரம் எங்கும் தொங்கவிடப்படவில்லை.

இல 3 கூண்டுக்குள் நுழைகின்றேன். மனிதவள அலுவலகம் எமது வருகையினை மீள் செல்கைக்கு உறுதிப்படுத்த வேண்டும். புதிய சீட்டையொன்று விசேடமாக இணைக்கப்படுகின்றது.
நேரமோ கடுகதியில்...
ஆனையிறவு நோக்கித் தொடர்கிறது பயணம்.
மஞ்சள் சிவப்புக் கொடிகளால் விண், கோலம் கொண்டு பொழிந்தது.
அக்கினிச் சுவாலைகள் சுடர்விட்டன.
அலங்கார வளைவுகள் வீரமூச்செறிந்தன.
புரட்சியும் எழுச்சியும் கொண்டு வானலையில் அதிர்கின்றது தாயகப்பாடல்கள். வெண்முகிற் கூட்டங்களைத் தொட்டு, சுட்டெரிக்கும் வெயிலிலும், எம் பாதங்களுக்கு குளிர்ச்சி தந்தன காவல் தெய்வங்கள்.

ஆயுதம் ஏந்திய கரம் ஆலயக் கோபுரமாக வேகங்கொண்ட புலிச்சின்னங்கள் கோபுரத் தூண்களில் புதுமை பேசின. மாலைகளால் அர்ச்சிக்கப்பட்ட உணர்ச்சிகள் உரிமை கொண்ட ஓவியங்களாக வீற்றிருந்தன கருவறையில்...
மூலஸ்தானத்தில் செங்கொடி அசைந்தது.
இதயம் அனலாய் கனக்கின்றது...
கையெடுத்துக் கும்பிட!...
கானல் நீர் கண்களை நனைக்கின்றது.
அங்கு எத்தனை மூர்த்திகளும், பரிவாரங்களும் கண்களும் மனமும் மேலும் மேலும் கனந்து களைக்கின்றது... உதிரம் துடிக்க கடலும் கரையும் விண்ணும் மண்ணும் அடிமுடி தேடிய புதுமைகள்...
நரம்புகள் நாராய் இழுத்தன. அங்கு அதிர்ச்சியும் கூடவே காத்திருந்தது.
நம்ப முடியவில்லை...
"1995 இல் யாழ். குடாநாட்டின் இடம்பெயர்வுடன் 10 வருடங்களாக நான் தேடிய என் கல்லூரி உறவுகள் சில இங்கு "இரத்த ஓவியங்களாக" என் கண்முன்னே. "மாணவர் அமைப்புக்குப் பின்னால திரியாம படிப்பையும் கவனி..." என்றவர்கள் இன்று எனக்குப் படிப்பிப்பவர்களாக இங்கு. கல்லூரியின் ஞாபகம் கண்ணைக் கரைத்தது.
நெஞ்சிறுக கண்ணீர்த்துளிகள் மட்டும் விரைவாக ... வாய்திறந்தோர் வார்த்தை பேச என் நெஞ்சில் துணிவுமில்லை, தைரியமும் இருக்க வில்லை.
வெட்கப்பட்டேன். நான் ஓர் பார்வையாளன் என்று.
ஈர விழிகளுடன் இந்தத் தேசத்திற்காக விதைக்கப்பட்ட "இரத்த ஓவியங்களின்" வீரமூச்சுக்களின் அலையில் அகப்பட்டு...மீள முடியாதவளாய்... தவிப்புடன் வலிகளைத் தாங்கி... பயணிக்கின்றது மனம். தமிழீழத்தின் தலைநகரை நோக்கி.
"தமிழீழ வரலாறுகளைப் படைத்துவிட்டு வரலாற்றுக் கல்விக்காக... இங்கு...
புத்தகங்களும் தேசப்படங்களும்... ஆலயத்தில் அமைதியாக யாசிக்கின்றன".

யாழவள்



# மலர்களிடம் ஒரு வினா?

முட்களுக்கு
முகவுரை தந்து
காதலுக்கு
மணமூட்டிய
மலரே!

சூரியன் முத்தமிட்டு
நீ மலர்ந்த போது
உன் இதழ்களில்
எத்தனை கனவுகள்!

ஒவ்வொரு நிறத்துக்கும்
ஒவ்வொரு அர்த்தம் சொல்லும்
உன் மேனியில்
மேய்ந்து போகும்
வண்டுகளுக்கு வரதட்சணை
என்ன கொடுத்தாய்!

தாவரங்களின்
கண்களாக இருக்கும்
நீ இந்த பசுமை
பந்தின் புன்னகையல்லவா!

உன் வாசத்தை
சுவாசித்து பலபேர்
உயிர் வாழும் போது
நீ மட்டும் ஏன்? சின்ன
ஆயுளுக்குள் வாழ்க்கை நடத்த
எப்படி கற்றுக் கொண்டாய்.

ஆ.சுதர்சிகா.

# இறுதிவரை...!

எனது
கனவுகளின் உயிர்த்துவம் கலையாமல்
காப்பாற்றும் இந்த
கரடுமுரடான பாதைகளில் நடந்து
காயப்பட்டுப் போன நிஜமே!
உனது புரிதல்களின் அடர்த்தியை - என்
உயிரினைக் கரைத்து
ஊற்றினாலும்.... எட்டிவிடமுடியாது இறுதிவரை!

உருக்குலைந்து போகும் இந்த
உடலையும் தாண்டி வியாபித்திருக்கும்
உன் நேசிப்பின் பிரவாகம்
உயிரின் எல்லைவரை
வெளிச்சம் பாய்ச்சுகிறது வேகமாய்!

கலங்க எத்தணிக்கும் என்
கண்களினை
மிக... கௌரவம் குறைந்த வார்த்தைகளால்
திட்டுகிறேன்... உன்
உறக்கம் கலைந்து விடுமென!

மிக... மிக... ஆழமாய்
கரைகள் தொடமுடியாத தூரமாய்
தரை முட்டி முளைத்து
இறுமாப்போடு நிமிரும் உனது துளிர்ப்பு
என் எதிர்வரும் நாட்களில்
இலையுதிர் காலங்களே
இல்லையென...
முரசறைந்தெழுகிறது காற்றில்!

அழகான அன்பின் கொடூரமாய்
மிக நெருங்கியிருக்கும்
உன் கருணை நிறைந்த இராட்சத பற்களால்
என்னைக் கொத்தி குதறிவிடு....
நான் வாழ வேண்டும் வளமாய்!

காலம் கூட என்முன்னால்
கைகட்டி காத்திருக்கிறது
பார்த்தாயா...!
நீ வரும் நேரம் வரை!

த. நிரஞ்சலன்
ஸ்கந்தபுரம்.

## சொற்சிலம்பு-117

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ர | று | ங் | சீ | வா | அ | யா |
| மா | கு | லி | பா | ந் | மி | ம் |
| க | கி | தி | ரே | னி | ன | ப |
| நெ | னா | ம் | லி | ளை | கீ | இ |
| ரு | டா | தா | ஷ | ர் | யா | பி |
| ஷ் | ர் | ய | க் | ஸ் | கி | ல |
| செ | ட் | கோ | ஞ | சி | த் | கை |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

### சொற்சிலம்பம் -115 இன் விடைகள்

01. வாகை.

02. ஆபிரிக்கா.

### சொற்சிலம்பம் - 115 இன் பரிசுக்குரியவர்

தி.நகுல்ராஜ் -தரம் -8B,
யா/ஆழியவளை
சி.சி.த.க.வி,
உடுத்துறை.

### சொற்சிலம்பம் - 115 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ம.சானு, தரம்-5C, மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.சா, புதுக்குடியிருப்பு.
02. ம.கிரிசன், 1ஆம் வட்டாரம், அல்லப்பிட்டி.
03. க.பிரியந்தி, தரம்-6B, மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.சா, புதுக்குடியிருப்பு.
04. சு.சுகிர்தன், காந்தருபன் அறிவுச்சோலை, கைவேலி.
05. பா.லினோசிகா, தரம்-5 கற்சிலைமடு அ.த.க.பா, ஒட்டுசுட்டான்.
06. சி.பகீர்தன்,தரம்-07 கிளி/வட்டக்கச்சி ம.வி, வட்டக்கச்சி.
07. செ.சயானிகா, கொக்குவில், யாழ்ப்பாணம்.
08. சு.மாதவி, தரம்-5A, றோ.க.பாடசாலை, புதுக்குடியிருப்பு.

01. உலகம் வெப்பம் அடைதல் தொடர்பான மாநாடு அண்மையில் எங்கு நடைபெற்றது?

01) ..............................

02. இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு காரணமான ஜேர்மன் தலைவர்?

01) ..............................


பெயர் :- ..............................

முகவரி :- ..............................

..............................

..............................

சொற்சிலம்பம்-117
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.




# ஆட்கொல்லி சுறாக்கள்

சுறா மீன்களில் நானூறு வகைகள் உள்ளன. அவற்றுள் ஒரு சில இனங்களே மனிதர்களைத்தாக்குகின்றன ; ஆட்கொல்லிகள் என்று குறிப்பிடுவது இவற்றைத்தான். இத்தகைய சுறாக்களில் ஒன்று வெள்ளைச் சுறா. இந்து மாகடல், பசிபிக் மாகடல் பகுதிகளில் காணப்படுவது. சுறாக்களிலே மிக ஆபத்தான கொடிய சுறா என்று கருதப்படுவது இதைத்தான்.

இது ஆறு முதல் எட்டு மீற்றர் நீளம் வரை வளரக் கூடியது. இதன் முக்கிய உணவு சீல், கடல் சிங்கம் மற்ற மீன் வகைகள் முதலியன. இதன் எடை 3.5டன். தனிமையாக இரை வேட்டையாடும் இது ஒரு குட்டி போடும் இனம்.

புலிச்சுறா பெயருக்கேற்றபடி புலியைப் போல வரிக் கோடுகளுடன் காணப்படும். இது சுமார் ஐந்து மீற்றர் நீளம் வரை வளரும். உண்மையில் வெள்ளைச் சுறாவைவிட கொடூர சுறா இதுதான். வெப்ப மண்டலக்கடல்களில் வாழும் இது சில சமயங்களில் நதி முகத்துவாரங்களில் புகுந்து விடும். இதன் இரு தாடைகளிலும் கூரான வெட்டுப்பற்கள் வரிசையாக அமைந்திருக்கும். மற்ற சுறாக்கள் உட்பட கடல் வாழ் உயிரினங்கள் அனைத்தையுமே உண்ணக்கூடியது. மனிதர்களையும் தாக்கக்கூடியது இந்தப் புலிச்சுறா. இதுவும் குட்டி போடும் இனம்தான். இதன் குட்டி பிறக்கும்போது பழுப்பு நிறத்தி லிருக்கும்.

நீலச் சுறாவைத் தோட்டிச் சுறா என்றும் கூறலாம். எதிர்ப்பட்டதையெல்லாம் தாக்கும்; விழுங்கும். சுமார் ஆறு மீற்றர் நீளம் வரை வளரக்கூடியது. கண்ணில் எதிர்ப்படுவதெல்லாம் இதன் வயிற்றுக்குள் போய்ச் சேர்ந்துவிடும்.



ஒரு சமயம் தரை ஒதுங்கி இறந்துபோன இத்தகைய சுறா ஒன்றை அறுத்துப் பார்த்த போது அதன் வயிறு ஒரு சரக்குக்கிடங்கு போலிருந்ததாம். அதிலே ஒரு மாட்டின்தலை, இரண்டு ஆட்டுத் தலைகள், ஒரு பன்றி, சங்கிலியோடு கூடிய நாய், செருப்புகள், அரை டசின் போத்த ல்கள், ஒரு டப்பா முதலியன கண்டுபிடிக்கப்பட்டன. இது மணிக்கு 50கிலோ மீற்றர் வேகத்தில் நீந்தக் கூடியது.


'கொம்பன் சுறா' என்ற இனமும் மூர்க்கமானது தான். இதன் தலையின் முன் பாகம் இரு புறமும் நீண்டு தட்டையாகச் சுத்தி போலிருக்கும். இதனுடல் சுத்தியின் கைபிடி போல் அமைந்திருக்கும். ஆறு மீற்றா நீளம் வரை வளரும். சுத்தி போன்ற பகுதியில் இரு முனைகளிலும் பக்கத்திற்கொன்றாகக் கண்ணும் நாசித் துவாரமும் அமைந்துள்ளன. இதன் தலை அமைப்பே பார்த்தவர்களைப் பயமுறுத்தும். மற்ற சுறாமீன்களைவிட லாவகமாக நீந்துவதற்கு இதன் விசித்திரமான தலை அமைப்பு சுக்கான் போல் உதவுகிறது என்று கருதப்படுகிறது. உலகமெங்கும் மிதவெப்ப மண்டலக் கடல் பகுதிகளின் மேற்பரப்பில் வாழ்பவை. இதன் எடை 500கிலோ முதல் 700கிலோ வரை இருக்கும். இதன் உணவு மற்ற மீன் வகைகள் . மனிதர்களையும் தாக்கக் கூடியது.

அட்லாண்டிக் எருதுச் சுறா என்ற வகையில் கடல் வாழ்சுறா, ஏரி வாழ் சுறா என்று இரு இனங்கள் உள்ளன. இந்த இரு இனங்களில் நிகராகுவா ஏரியில் வாழும் சுறா கடல் வாழ் எருதுச் சுறாவைவிட மிக மூர்க்கமானது. இதைப் பெருந்தீனிச் சுறா என்று கூறுவார்கள். மனிதர்களைத் தாக்கி உண்ணக் கூடியது இது.

## நகைச்சுவை




## படப்பிடிப்பு



# வீடு

எல்லோரிடமும் எல்லாவேலைகளிலும் இருக்காத ஒன்று சிலரிடம் எல்லா வேலைகளிலும் இருக்கும். அது தான் பொறுமை. நாளாந்தம் ஒவ்வொரு மணித்துளியும் நகரும் போது அந்த மணித்துளியை இழக்கவேண்டி ஏற்படும்போது பொறுமையை இழக்க வேண்டியும்வரும். அதனைத்தக்க வைக்க வேண்டியும் வரும் அது எல்லோராலும் முடியாதது. சில சந்தர்ப்பங்களில் சிலரது பேச்சுக்கள் கூட பொறுமையைச் சோதித்து விடும். ஓரிடத்தில் ஓர் பணி சார்ந்து நாம் வேறு வேறு நபர்களுடன் இணைக்கப்படும் போது ஒவ்வொருவரது எண்ண ஓட்டங்கள் சேர்ந்து இணைந்து கொள்ளும் தன்மை வேறுபடுகின்றது. இருவரில் ஒருவர் விட்டுக் கொடுக்க வேண்டும். அப்போது தான் கடமைகள் என்பது சரிவர நடைபெறும். ஒரு வேலையின் அவசியம் அந்த வேலையின் நேரம், தன்மை என்பன அந்த வேலையின் பெறுபேற்றில்

**குழப்பம் ஏற்பட்ட உடன் பொறுமையை இழந்து விட்டால் அந்த நேரத்தில் முடிவெடுக்கும் முடிவுகள் அதிகமாகத் தவறாகவே இருக்கும்.**

தான் வெளிப்படுகின்றது. இத்தனைக்கும் அந்தப் பணிக்குள் இணைந்தவர்களின் பொறுமை தான் அடித்தளமிடுகின்றது.

குழப்பங்கள், சிக்கல்கள் ஏற்படும் போது தான் பொறுமையை இழக்க நேரிடுகின்றது. குழப்பங்களைத் தெளிவாகவும் சிக்கல்களை தாமதமின்றியும் உடனுக்குடன் தீர்த்து வைக்கக் கூடிய மன உணர்வு அவசியம். குழப்பம் ஏற்பட்ட உடன் பொறுமையை இழந்து விட்டால் அந்த நேரத்தில் முடிவெடுக்கும் முடிவுகள் அதிகமாகத் தவறாகவே இருக்கும். அதே நேரம் சற்றுப் பொறுமையுடன் முடிவெடுப்பது நன்மையாகவும் இருக்கும். ஆனால் நெருக்கடியான ஒரு சூழலில் அதற்கான அவகாசம் என்பது சிறிதேனும் கிடையாது. எனினும் அந்த வேளைகளில் அவகாசத்தை ஏற்படுத்தி முடிவெடுப் பது நாம் தான்.

பொறுமைக்கும் எல்லை உண்டு என்பார்கள். பொறுத்துப் பொறுத்திருந்தால் தான் என்ற குணம் இயல்பாக ஏற்படும். எனினும் பொறுத்திருப்பதைப் பலவீனமாகப் பார்ப்பதால் தான் சோதிக்கப்படுகின்றோம். அது ஒரு பலமாக எண்ணினோமேயானால் எம்மிடம் தோற்றவர்கள் தான் அதிகமாக இருப்பார்கள். ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் ஒருவரது பொறுமையைச் சோதிப்பவன் பலவீனத்தைக் காட்டிக் கொள்கின்றான். சோதிக்கப்படுபவன் தன் மனப்பலத்தால் பொறுமையைக் கட்டிக்காப்பான். பொறுமை என்றும் தோற்காது. எந்தச் சந்தர்ப்பத்திலும் பொறுமை அவசியம்.

ஈழவிழி

## பொறுமை ஒருபோதும் தோற்காது...




# மனைவி..!

எம்முடைய குடும்ப வாழ்க்கையில் மனைவி என்ற மகத்தான உறவு முறையில் இருக்கும் நாம் அதன் மகத்துவத்தையே சில நொடிப்பொழுதுகளிலே சிதறடித்து விடுகின்றோம். இந்த நிலையானது நாம் சிந்தித்துச் செயற்படும் திறன் எம்மிடம் இல்லாமல் இருப்பதே

**மலையளவு பிரச்சினை என்றாலும் எம்முடைய உயரிய சிந்தனையுடன் செயற்பட்டு அந்த மலையளவானதை உள்ளங்கையளவு ஆக்கும் மனோதிடம் மனைவிமாரான எமக்கு வேண்டும்.**

காரணமாகும்.

மனைவியாக இருக்கும் பெண்கள் தம்முடைய கணவன் மாருக்கு பல வழிகளிலும் புத்திசொல்லிக் கொடுக்கும் ஒரு சாதுரியமான சிறந்த



மனைவியாகவே இருக்கவேண்டும். கணவன் ஒரு பிழையான வழிக்குப் போகின்றார் என்றால் அவரை அப்படியே சில மனைவிமார் விட்டுவிடுகின்றனர். ஏன் நீங்கள் இப்படி கண்மூடித்தனமாக கணவனின் பிழையை தட்டிக்கேட்காமல் இருக்கிறீர்கள் என்று கேட்டால் ஐயோ பிள்ளை அவர் என்னை தொலைச்சுப் போடுவார் என்று வாயை பிளக்கின்றனர். எந்த விடயமானாலும் நாம் அதனை சொல்லுகிற முறையில் தான் இருக்கிறது.

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும். வாசல் தோறும் வேதனை இருக்கும் வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை.

உனக்கும் கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு.

உதாரணமாக ஒரு குடிகாரக் கணவனைப் பார்ப்போம். அவர் தினமும் குடிப்பார். ஆனால் இன்று ஒரு கொஞ்சமும் குடிக்காமல் வீட்டை வருகிறார். படலையைத் திறக்க முன்னமே மனைவி கேட்பாள் இண்டைக்கு எத்தினயப்பா அடிச்சிட்டு வாறியள் இதைக் கேட்ட கணவன் எப்படி திருந்துவான். நாளை வரும் போது என்னும் ஒன்று கூட அடிச்சிட்டு வரவேண்டும் என்று தான் நினைப்பான்.

இப்படி நாம் திருத்த முற்பட்டால் எப்படி முடியும். கணவனின் பிழைகளை அவர் தனிமையில் நிதானமாக இருக்கையில், பக்குவமாக எடுத்துச்சொல்ல வேண்டும். இதை விட்டுட்டு நாம் போர்களத்தில் நின்று போராடும் வீராங்கனைகள் போல் வெட்டொண்டு துண்டு இரண்டு என்று நின்றால் குடும்பம் எப்படி பூத்துக் குலுங்கும்.குடும்பத்தையே போர்களமாக்கும் மனைவிமார் கொஞ்சமாவது தாங்கள் செயற்படும் விதம் சரிதானா என சிந்திக்கவேண்டும். அதற்காக கணவன் செய்வதை நியாயப்படுத்துவதல்ல. ஒரு குடும்பத்தின் மகிழ்ச்சிக்காக இப்படியொரு அணுகுமுறையைக் கையாளலாமே என்பதே. எந்த நிலையிலும் எமக்குள் அமைதியை நிலை நாட்ட நாம் தவறக் கூடாது. அமைதியாக இருந்தே நாம் நிறையச் சவால்களை எதிர்கொள்ளவேண்டும்.

எமக்குள் அமைதியில்லாத போது வாழ்வே பெரும் சுனாமிதான்.

சுனாமியின் தாக்கம் எப்படிப்பட்டது என்று நாம் புரிந்து கொண்டவர்கள் தானே. இப்படியான நிலைக்கு எம் குடும்பம் தள்ளப்படலாமா?

மலையளவு பிரச்சினை எண்டாலும் எம்முடைய உயரிய சிந்தனையுடன் செயற்பட்டு அந்த மலையளவானதை உள்ளங்கையளவு ஆக்கும் மனோதிடம் மனைவிமாரான எமக்கு வேண்டும். சும்மா சின்னச் சின்ன பிரச்சினைகளையும் பிய்த்துப் பிரித்து பெரிதாக்குவதால் எமக்கு என்ன நன்மை நடக்கப் போகிறது.

தவறு செய்யாதவன் மனிதனாக இருக்க முடியாது. ஆனால் அதை தவறு என்று தெரிந்தும் செய்பவன் முழு முட்டாள். எம்முடைய மனதுக்கு தவறு என்று உணரப்படும் பொழுதில் அதனை நாம் உதறிவிட வேண்டும்.

எல்லோருக்கும் எல்லாம் வாழ்வில் சரியாக அமைவதில்லை. அமைந்த நல்லவற்றைக் கொண்டு சீர் இல்லாதவற்றை ஓரளவு எண்டாலும் சீராக்கி சிறப்போடு வாழலாம் அல்லவா.உண்மையில் நாம் எம் குடும்பத்தில் கணவன்மாருக்கு நாம் சொல்லும் விதமாகச் சொன்னால் எந்தக் கெட்ட கணவனும் திருந்தி நடக்க வாய்ப்புண்டு. எம்முடைய வெட்டிப் பேச்சுக்கள் குடும்பத்தையே குதறிவிடுவதை நாம் கொஞ்சமும் சிந்திக்காமல் சில வேளைகளில் செயற்பட்டுக் கொண்டிருப்போம். இப்படியான பிழைகள் தொடருமானால் எம் பிள்ளைகளின் எதிர்காலத்தின் உயர்வுகள் யாவும் கொஞ்சம் கொஞ்சமாய் எம்மால் நசுக்கப்படும் இந்த அவல நிலைக்கு நாமே காரணமாக இருக்க லாமா?

இன்றைய எங்களின் அசட்டைத் தனம் யாவும் நாளைய எம் மழலைகளின் வாழ்விற்கே உலை வைக்கும் நிலையை ஏற்படுத்தும். எம்முடைய மழலைகளே மலரப்போகும் தமிழீழத்தில் தலை நிமிர்ந்து நிக்கும் கதாநாயகர்கள். அவர்களை எங்களின் இழிவான குணங்களால் நாசமாக்கலாமா? மனைவியரான எம்மால் எம் குடும்பத்திற்கு எவ்வளவு நன்மைகள் செய்ய முடியுமோ அவை யாவையும் துணிந்து செய்வோம்.

சு.சிவாஜினி

---

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

---

குமரகுரு பரிசுத் திட்டத்தின் 71தொடக்கம் 75 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.

**பரிசுத்திட்டம் –71**
திருமதி.ச.சுகுணா,
இல:16/2விசுவமடு,
முல்லைத்தீவு.

**பரிசுத்திட்டம் –74**
மீனலோஜினி ரகுநாதன்,
119/3 திருவையாறு,
கிளிநொச்சி.

**பரிசுத்திட்டம் –72**
சத்தியதாசன் சுதர்ஷா
இல:3, கட்டுடை,
மானிப்பாய்,
யாழ்ப்பாணம்.

**பரிசுத்திட்டம் –75**
சு.ராகினி,
முதலியார்கமம்,
இலுப்பைக்கடவை,
மன்னார்.

**பரிசுத்திட்டம் –73**
திருமதி.கோகிலம்
யோகேஸ்வரன்,
ஆரோக்கியபுரம்,
8 ஆம்கட்டை,
அக்கராயன்குளம்.

பரிசு பெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம் மூலம் தெரியப் படுத்துவோம்.

---




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்– 78**

பெயர்:......................................................

முகவரி:....................................................

..........................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.




# ஏ9-ஏரம்பு

வணக்கம் எல்லாருக்கும்! போனமுறை கனக்க கதைக்க இருக்கிதெண்டு சொன்னனான் தானே! (நீங்கள் நினைச்சிருப்பியள், மறந்திட்டன் எண்டு) வயசு போனாலும் நான் ஞாபக மறதி வாற அளவுக்கு மோசமில்லை. இல்லைப் பாருங்கோ ! குந்தடி தவிர பக்கத்தில இருக்கிற தேத்தண்ணிக்கடைப் பக்கமும் நான் போறனான் எண்டது உங்களுக்கு ஏற்கெனவே சொல்லியிருப்பன்தானே. அப்பிடிப் போகேக்கிளை வெள்ளிக்கிழமை எண்டால் வடையோட சூடாய் ஒரு தேத்தண்ணி அடிச்சபடி நான் எழுதினதை வாசிக்கிறதுக்கு தவறிறேல்லை.

நானே எழுதீட்டு, அதை தொடர்ந்து எழுதினால் உங்களுக்கும் அலுத்திடும் எண்டு நினைச்சிட்டுத் தான் இளஞ்சந்ததிக்கு வழிவிட்டு ஒதுங்குவம் எண்டுதான் அப்பிடி 60ஆவதோட நிற்பாட்டிறதுக்கு முடிவெடுத்திட்டன்.

ஆனாலும் ஒரு பாத்திரத்தை உருவாக்கீட்டு, (பத்திரிகையில் நீங்கள் ஆர்வமாய் தேடுவதே அதற்கான 'உயிர்கொடுத்தல்') இடையில கள்ளிப்பால் கொடுக்கிற மாதிரி கருக்கலைக்கிறதுக்கு கடைசி நேரத்தில எனக்கும் மனம் வரேல்லை. அதேநேரம் அண்டைக்கு கண்ட இடத்தில 2 தம்பியவை 'ஏன் அப்பு! கருத்தியல் ரீதியான குரல்தான் எனக்கு முழு அளவிலான மகிழ்ச்சியைத் தரும். நான் என்ன சொல்ல வாறன் எண்டால், ஒத்த கருத்தைக் கொண்டிருக்கிற ஆக்களிட்டை கிடைக்கிற அங்கீகாரத்தைவிட, சமூக அளவில கருத்து மாற்றத்தைக் கொண்டுவாறதில எவ்வளவுக்கு இந்த அப்புவால முடியிது எண்டதிலதானே உண்மையான வெற்றி தங்கியிருக்கமுடியும். தள்ளாடிற வயசில என்னால ஏலாட்டியும், நீங்கள் எல்லாரும் சேர்ந்து அதுக்காக இயங்குவீங்கள் எண்ட நம்பிக்கையிலதான் இந்தக் கட்டை இன்னும் மூச்சைப்பிடிச்சுக்கொண்டு ஏதோ இருக்கிது பாருங்கோ!

அப்பிடிப்பாருங்கோ ஆயிரமாயிரம் விசயங்கள். மற்றது உங்களுக்குத் தெரியும்தானே பாராட்டைவிட ஆரோக்கியமான விமர்சனம்

கண்ணை மூடிமூடித் திறக்க வேறவேற ஆள்மாதிரி அதில வருகினமாம். அப்பிடித்தான் நானும் மூடிமூடிப் பார்த்தன். ஆனாலும் அதே என்ர வழமையான மூஞ்சை, அதே பேச்சுத்தான் வருகிது. அப்பிடி என்ரை கவலையள் பாருங்கோ !

இன்னுமொரு தம்பி சொன்னார்,, 'வசை பாடுதல்' தன்மையொண்டு இருக்கிறதாவும், அதைத் தவிர்க்கச்சொல்லியும் சொன்னார். அது உண்மைதான் பிள்ளையள். அடிக்கடி நொட்டைநொடியள் சொல்லிக்கொண்டிருக்கிறது எனக்கும் சத்தியமாய் பிடிக்கிறேல்லை, இருந்தும் தவிர்க்க முடியாமல்தான் அப்பிடிப் பொரிஞ்சு தள்ளவேண்டி வாறது. சும்மா 'கல்தோன்றி மண் தோன்றாக்காலத்தே...' அது இதெண்டு அடைமொழியளால வெற்றுப்பெருமை பேசிப்பேசிய அழிஞ்சதுதான் எங்கட கடந்தகாலம். 10 ஆம் நூற்றாண்டுக்கு முன்னைய வரலாறு பற்றின தகவல்களைக் கொண்டிருக்கிற சிகிரியா-குகையோவியங்களோட கிடைச்சிருக்கிற 100 இற்கும் குறையாத செய்யுள்களில சில தமிழ்மொழியிலயும் அமைஞ்சிருக்கு.

சிங்களச்செய்யுள்களை பேராசிரியர் பரணவிதான படியெடுத்து படிச்சும் காட்டிட்டார். தமிழ்ச்செய்யுள்கள் அப்பிடியேதான் இருக்கிது. அதுக்காக அவரை பேரினவாதி எண்டு குறைசொல்லிக் கொண்டிருக்கிறதில அர்த்தம் இல்லை. அவர் தன்னோட இனத்தின்ர மாகத்தான் என்ர புத்தி இப்பிடி அமைஞ்சிருக்கு. இது சரியோ பிழையோ எண்டிறதுக்கப்பால ஆராவது என்ர மக்கு மூளைக்குப் புரியிற மாதிரி மாற்றுக்கருத்துகளையும் ஆலோசனைகளையும் தந்தால் நிச்சயமாக இந்தப் போக்கை மாத்துவன்.

இல்லை! என்ர பேரப்பிள்ளையளிட்டை நான் மனம் விட்டுப் பேசாமல் வேற ஆரோட பேச! ஆ. . உங்கள் எல்லாரிலையும் அன்பு வைக்கிறதைப் போலவே திட்டிறதுக்கும் எனக்கு உரிமை இருக்குத்தானே! யோசிச்சுப் பாருங்கோ, நாங்கள் இப்ப செப்புக் காலம், இரும்புக்காலம் எல்லாம் கடந்து தகவல்யுகத்தில வாழ்ந்து கொண்டிருக்கிறம். அறிவியல் தாகத்தின்ர உச்சக்கட்டப்பயனாக கொம்பியூட்டரை மனிதன் உருவாக்கியிருக்கிறான். அதே அறிவியல் சிந்தனையின்ர பெறுபேறான கணனியை வைச்சு நாங்கள் சாத்திரம் பார்க்கிறோம்.

மீளவே வழியில்லை, காரணம் கண்டம் எண்டும், செவ்வாய் தோசம் எண்டும் கனக்கக் கண்டு பிடிக்கிறோம் (?). அதிலயும் கொம்பியூட்டர்-சாத்திரத்துக்கு வேற மதிப்பும் அதிகம். பாரம்பரியப் பிற்போக்குகளை விமர்சிக்காமல் ஏககாலத்தில நாகரிக வளர்ச்சியின்ர சாதகங்களையும், எந்தவித நெருடலுக்கும் உள்ளாகாமல் அனுபவிச்சுப் பின்பற்றிற வழக்கு எங்களிட்டை இருக்கிதெண்டு, ஈழத்தமிழினத்தின் முதுபெரும் அறிஞரான பேராசிரியர் சிவத்தம்பி

# கனவுகள் காண்போம் அவை நனவாக உழைப்போம்

நான் ஏன் வாசிக்கோணும் எண்டு நீங்கள் கேட்கலாம். இல்லை பாருங்கோ, அச்சுப்பிழை ஏதாவது வந்திருக்கோ, எல்லாம் மொத்தத்தில எப்பிடி அமைஞ்சிருக்கு எண்டொருக்கால் பார்த்தால்தான் எனக்கு திருப்தி. இல்லாட்டி கொழும்புப்பத்திரிகை ஒண்டில 'சிறிலங்காவுக்கு பியர்களை ஏற்றுமதி செய்யும் சிங்கப்பூரைச் சேர்ந்த கொம்பனி' எண்டொரு செய்தி கிட்டடியில வந்திருந்தது. அவையள் குடிக்கிற (இல்லாட்டி அடிக்கிற எண்டும் சொல்லலாம்) பியருக்கு Beer எண்டு போடிறதுக்குப் பதிலாக Bear எண்டு தலைப்பை தவறுதலாய் போட்டிட்டினம். அப்பிடியெண்டால் 'கரடி ஏற்றுமதி செய்யிற கொம்பனி' எண்டெல்லே அர்த்தம் வந்திடும்.

அதுதான் நான் எழுதினதும் ஏதாவது பிசகிட்டாலும் எண்டு பார்க்கிறனான். ஆனால் கடையில நிக்கிற மற்ற பழசுகளெல்லாம் படுமோசம் பாருங்கோ! 'இவர் எழுதிறதை வாசிக்கிறதுக்கு ஒரு வாசகர் எப்பையும் இருப்பார். அது இவர் மட்டும் தான்!' எண்டு நக்கலடிப்பினம். இல்லாட்டி என்ர கண்ணுக்கு முன்னாலயே அவையில ஈரம் படாமல் இருக்கிறதுக்காக வாங்குக்கு மேல நான் எழுதிற பக்கத்தை விரிச்சிட்டு இருப்பினம், காலைப் போடுவினம். அப்பிடி ஊரிப்பட்டை அநியாயங்கள் செய்வினம் பாருங்கோ ! சரிசரி கனகாலம் சும்மா குந்துரஞ்சிற நேரத்துக்கு நாலு கிழட்டுஞாயங்களை எழுதிக் கொண்டிருந்தால் என்ன குறைஞ்சே போயிடுவியள்!', எண்டு தங்கட விருப்பத்தை வெளிப்படுத்திச்சினம்.

எனக்கும் தேர்தல் முடிஞ்ச நேரத்தில வாய்க்கிளையும், வயித்துக்கிளையும் சொல்லிறதுக்கெண்டு கனக்க கிடந்து புகையத்தொடங்கீட்டிது. இன்னுமொரு இடத்துக்கு போன இடத்திலயும் ஆக்களோட கதைச்ச பிறகு ஒரு விசயம் எனக்கு விளங்கீட்டிது: இலக்கியச்செம்மை, தராதரம் இருக்கோ. இல்லையோ எண்டிறதுக்கு அப்பால எழுதிற வரைக்கும் தான் அந்த எழுத்து எழுதுபவனுக்குரியது. எழுதிய பின் அது படிப்பவர்களுக்கு சொந்தமாகி விடுகிறது, படைப்புடன் கூடவே பாத்திரங்களும்! அதால ஏரம்பரைக் கழுத்தறுக்கிற உரிமையை நான் இழந்திட்டன், ஆகவே ஏ9 குந்தைப் போலவே அவரும் கிட்டத்தட்ட தேசியச்சொத்து ! 'எழுதுங்கோ!' எண்டு உரிமையோட சொல்லிற வாசிக்கிற ஆக்கள் இருக்கிறவரைக்கும் மனசில படிற கிழட்டுஞாயங்களை சொல்லிறதால பிரயோசனம் இருக்கிமெண்டால், அதைச் செய்யாமல் இருக்கமாட்டன்.

நீங்கள் காட்டிற ஆர்வம் எனக்கு சந்தோசத்தைத் தந்தாலும், என்ரை குந்துக்கு வெற்றி கிடைக்கிறதுக்காக நீங்கள் கொடுக்கிற எனக்குப் பிடிக்குமெண்டு. அண்டைக்கொரு தம்பி சொன்னார் 'நீங்கள் ஒருக்கால் உதுகளை நல்ல தமிழில எழுதித்தாறீங்களே! எனக்குந்த பேச்சுத்தமிழ் வாசிக்கப் பிடிக்காது'. இதென்னடா கரைச்சலாய் கிடக்கிது, என்னால முடிஞ்சிருந்தால் எழுதியிருப்பன்தானே! ஏதோ 'குசேலரின்ர அவல்' மாதிரி என்னால முடிஞ்சது இதுதான். இன்னுமொரு தங்கைச்சி சொன்னா 'அப்பு ! நான் தொடர்ந்து வாசிக்கிறனான். ஆனாலும் நீங்கள் சரியான படுகிழவனாய் இருக்கிறீங்கள். கொஞ்சம் ஸ்ரைலாய் எழுதுங்கோ !' எண்டு. இதென்ன சிக்கல் பாருங்கோ, நான் என்ன வைச்சுக் கொண்டே வஞ்சகம் செய்யிறன்! 'அடி வெங்காயக்கழுதை! சட்டியில இருக்கிறதெல்லே அகப்பையில வரும். என்ரை வயசுக்கு இப்பிடித் தான் வருகிது.

'அதை விட்டிட்டு நான் எங்கை போக ஸ்ரைலான கிழவனாகிறதுக்கு!' பத்தாக்குறைக்கு எனக்கு வேற ஒரு கவலையும்கூட! எனக்கு முதல்ல உலா-60 ஓட நிற்பாட்டிட்டு சின்னப்பிள்ளையளுக்கெண்டு ஏதாவது எழுதுவோமெண்டு ஒரு பெரிய திட்டம் இருந்தது. அந்தமாதிரி பேர், விசயங்கள், சம்பவங்கள் எல்லாம் யோசிச்சு வைச்சிருந்தனான். ஏதோவொரு படம் கிட்டடியில வந்ததாம் 'அந்நியன்' எண்டு, பத்திரிகையளில வாசிச்சனான்.

துக்காக உழைச்சிருக்கிறார். எங்களைப் பற்றின தகவல்களை எடுக்கிறதுக்கு எங்கட அறிவியல் சமூகம் தானே முன்வரோணும்.

சிங்களவரிட்டை தீபவம்சத்தில இருந்து தங்கட வரலாற்றைப் பதிஞ்சு வைக்கிற நடைமுறை இருநதிருக்கு. ஆனால், நாங்கள் அனல்வாதம்-புனல்வாதம் எண்டு (நெருப்பிலயும், ஓடிற ஆற்றிலயும் போட்டும் அழியாமல் நிலைச்சு நிற்கிறதுதான் உயர்ந்ததெண்டு கணிப்பிடிற ஒரு பழையவழக்கு பாருங்கோ) பெறுமதியான கனதையும் கோட்டை விட்டிட்டோம். ஆனாலும், இன்னும் எங்களிட்டை ஒருதொகை இருக்கிது எண்டிறதும் உண்மைதான்! ஆக என்ர குறையளை நீங்களும், உங்கடய நானும் எண்டு எங்கட குறையளை எங்களுக்கிள்ளையே ஒருத்தருக்கொருத்தர் ஆரோக்கியமான முறையில சுட்டிக்காட்டி நாங்கள் மேம்படப் பார்க்கோணும்.

எங்களைப் பார்த்து மற்றவங்கள் வியக்கிற அளவுக்கு ஈழத்தமிழினம் முழு உலகத்துக்கும் முன்னுதாரணமாய் இருக்கோணும் எண்டு எதிர்பார்க்கிறன். இது இந்த குந்தின்ர விருப்பம் மட்டுமில்லை, வெ... எண்டு சொல்லலாம். ஒவ்... தியும் எங்கட இனத்தை வளர்ச்... தையில நகர்த்திக் கொண்டு போகோணும் எண்டிற அவசியமான நியாயப்பாடு காரண ஓரிடத்தில சொல்லியிருக்கிறார். சரி நான் உந்தளவு சொல்லியும் நீங்கள் பிறிம்புகாட்டி நியாயமிருந்தும் நான் விமர்சிக்கிறதை வெறுத்தீங்கள் எண்டால் வெளிப்படையாய் சொல்லுங்கோ! நான் கப்சிப் எண்டு காவியுடுத்துக்கொண்டு கதிர்காமத்துக்கோ, காசிக்கோ காவியுடுத்துக்கொண்டு போயிடிறன்.

ஏதோ பெரிசாய் லெவல் அடிச்சு கே.ஜே.ஜேசுதாசின்ர பாட்டுப்பாடிக்கொண்டு போனவர், இப்ப ஏனாம் வந்தவர் எண்டு கேட்பியள்.

அதே பாட்டின்ர தொடர்ச்சியாய் இன்னும் 2 அடிகள் வருகிது; 'உன் கண்களில் ஈரம், என் நெஞ்சிலே பாரம்!...' 40 லட்சம் ஆக்களும் சந்தோசித்திருக்கோணும் என்பது ஆசை! அதேநிலையை 6 000 000 000 பேரிடமும் எதிர்பார்த்திருப்பது எண்டிறது விட்டுக்கொடுக்க விரும்பாத பேராசை! 'கனவுகளின் சுவாரசியமே, அவை சாத்தியமானவை என்பதில் தான் உள்ளன'- என்ன எங்கையோ வாசிச்ச ஞாபகம் வருகிதா ? சுனாமி நேரத்தில... வந்த ஏதோ ஒரு கட்டுரையில இருந்திருக்கும். நாமும் எமது நாட்டிற்குச் சாத்தியமான கனவுகளைக் காண்போம் ! நனவாக்க உழைப்போம்! 'அந்த வானம் உள்ள வரை, பூமி உள்ளவரை . . .' எண்டெல்லாம் புளுகமாட்டன். ஆனாலும். என்னுடைய குந்தில் ஜீவன் உள்ள வரை சந்திப்பம் !

# இலக்கியப்பகிர்வு

# பெண்விடுதலையும் சமத்துவமும்



ச.முருகானந்தன் என அறியப்பட்ட டொக்டர் முருகானந்தன் அவர்களை எங்களுக்குத் தெரியும். கடந்த பல வருடங்களாக சிறுகதை,கவிதை, நாவல், இலக்கிய மருத்துவக்கட்டுரைகள் என பல்துறை சார்ந்த எழுத்துகளைத் தந்து ஈழத்து இலக்கியத் துறையில் தனித்துவமாக இருப்பவர். மருத்துவத்துறையில் இருந்து கொண்டு எமது இலக்கியத்துறையில் பணிபுரிந்து வரும் குறிப்பிட்ட சில படைப்பாளிகளில் அவரும் ஒருவர்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் அண்மைக்காலமாக சந்திரகாந்தா முருகானந்தன் என்ற பெயர் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் பவனி வரத் தொடங்கிய பின்னர் டொக்டர் தான் இவ்வாறு எழுதுகின்றாரோ என்ற ஒரு எண்ணம் ஏற்பட்டது.எனினும் இந்த எண்ணத்தை முகத்தில் அடித்தால் போல சிதற அடித்தது சந்திரகாந்தா முருகானந்தன் என்று எழுதுவது டொக்டர் அவர்களின் மனைவிதான் என்றசெய்தி.

அதன்காரணமாக திருமதி சந்திரகாந்தா முருகானந்தன் அவர்கள் எழுதிய பெண் விடுதலையும் சமத்துவமும் என்ற நூல் தொடர்பாக இலக்கியப் பகிர்வில் பகிர்ந்து கொள்ளலாம் எனக் கருதுகிறேன்.

"பெண் விடுதலையும் சமத்துவமும்" நூலில் முப்பது சிறுகட்டுரைகள் உள்ளன. நூற்றி ஐம்பத்தி நான்கு பக்கங்களில் இந்த முப்பது கட்டுரைகளும் உள்ளடக்கப்படுவதால் ஒவ்வொரு கட்டுரையும் அது வெளிப்படுத்தும் விடயம் தொடர்பான அறிமுகக் குறிப்புக்களைமாத்திரம் தருகின்றது எனலாம்.

புலம்பெயர்ந்த நாடுகளிலும், எமது மண்ணிலும் வாழும் படைப்பாளிகளின் படைப்புக்களை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வரும் மணிமேகலைப் பிரசுரம் தொழிற்சாலையில் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வது போல புத்தங்களை வெளியீடு செய்து வருகின்றது. எமது படைப்பாளிகளின் வெளியீடுகளை வெளிக்கொண்டு வருகின்றது என்பதைத்தவிர வேறு எந்த விடயத்தையும் நாம் சிறப்பாகச் சொல்ல முடியாது. ஏனெனில் மணிமேகலைப் பிரசுரத்தின் இலக்கும் நோக்கும் வேறு.

இங்கு நாம் சுட்டிக்காட்டவருவது இந்த நூலின் மோசமான வடிவமைப்பு-தமிழகத்தில் இப்போது புத்தகவெளியீட்டுத்துறை சிறப்புப் பெற்றுவிட்டது. பல நல்ல வெளியீட்டு நிறுவனங்கள் சிரத்தை எடுத்து நல்ல நூல்களை சிறப்பாக வடிவமைத்து வெளியிடுகின்றன.

இந்த நூலில் ஒவ்வொரு கட்டுரைக்கும் சேர்க்கப்பட்டுள்ள படங்களை எந்தரீதியில் எந்தக் கருதுகோளில் சேர்த்துள்ளார்கள் என்பதை யாரிடம் கேட்பது என்று தெரியவில்லை.




எமதுபடைப்பாளிகள் இவ்வாறான தவறுகள் ஏற்படாவண்ணம் எதிர்காலத்தில் பார்த்துக் கொள்ள வேண்டும். இதனைக் கவனிக்காமல் விடுவது வெளியீட்டு நிறுவனத்திற்கு நட்டமல்ல.

18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய பெண் உரிமை கருத்து நிலை இன்று எமது மண்வரை வியாபித்துள்ளது. என்றாலும் நாட்டுக்கு நாடு இதன் கருத்து நிலையும் விவாதப் பொருளும் மாறுபட்டுத் தான் உள்ளது.

இலங்கையிலும் பெண்விடுதலை-பெண்ணியக் கருத்துக்கள் தொடர்பில் முன்னேற்றமான கருத்துக்கள் இருப்பினும் அவை முழுமையானவை என ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

எமது பகுதியில் பெண்விடுதலை தொடர்பான தீர்க்கமான கருத்துக்கள் உண்டு. விடுதலைக்காகப் போராடும் எங்கள் தாயகப் பகுதியில் களத்தில் நின்று போராடும் போராளிகளும் அவர்களின் செயற்றிறனும், தனியே ஆராயப்படவேண்டியவை.

பெண்களின் கல்விச் செயற்பாடுகள் காரணமாக அவர்கள் ஆண்களோடு போட்டி போட்டுக்கொண்டு முன்னேறி வருகின்றார்கள் என்றாலும் அவர்களுக்கு உரிய இடம் சரியாக அமையவில்லை என்பதே பெண்நிலைவாதிகளின் கருத்தாகும்.

ஆணுக்கும் பெண்ணுக்குமான சமத்துவம் எமது மண்ணில் பொதுவாக இல்லை என்றே கூறுகின்றார்கள். பொருண்மிய ரீதியாக ஆண் பெண் சமத்துவம் பேணப்படுவதில்லை. அதாவது இன்றும் கூட கிராமப் புறங்களில் இது முக்கியமாக உள்ளது.

இப்போது பெண்களுக்கு சில இடங்களில் வழங்கப்படும் சமத்துவம் என்பது சூழலின் நிர்ப்பந்தம் காரணமாகவே வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. எமது விடுதலை அமைப்புச்சார்ந்த செயற்பாடுகள் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் இன்னோரன்ன பிற இடங்களிலும் இந்த நிலையினை உணர்ந்து கொள்ள முடியும்.

இதுதவிர பெண்களுக்குஎதிரான வன்முறை என்பதும் பாலியல் ரீதியான வன்முறைகள் உட்பட பல்வகை வன்முறைகள் மறைமுகமாகவேனும் (எமது பகுதிகளில் தான் ஒப்பீட்டு அளவில் அது வெளிப்படையாக மிக மிகக் குறைவாக உள்ளது) குறைந்தபாடில்லை.

எனினும் பெண் அடக்குமுறையை இல்லாது ஒழிப்பதும் பெண்ணுக்கான சமத்துவ நிலையைப் பேணுவதும் தனியே. சட்டத்தினால் அல்லது நெருக்குவாரங்களால் மாத்திரம் கொண்டுவரமுடியாது. அது இயல்பான செயற்பாட்டின் கீழ் வரவேண்டும். வருமா? என்பது கேள்விக்குறியாக உள்ள ஒரு காலத்தில் வாழ்ந்து கொண்டு இதுபற்றி கதைக்க வேண்டியுள்ளது.

இத்தகைய பின்னணியிலேயே சந்திரகாந்தா முருகானந்தன் அவர்களின் பெண் விடுதலையும் சமத்துவமும் என்னும் நூல் தொடர்பில் பார்க்க வேண்டியுள்ளது.

இவை பற்றி எல்லாம் ஆராயும் சந்திரகாந்தா இன்றைய உலகில் பெண்களை அடிமை கொள்வதில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் இருக்கின்றார்கள் என்பதை உணர்தல் அவசியமாகும். "ஒரு தாயாக, மூத்த சகோதரியாக, பாட்டியாக, மாமியாராக, மைத்துனியாக, அயலவராக என பல நிலைகளில் நேரில் பெண்கள் ஆணாதிக்கத்தை நிலை நிறுததுகின்ற அவலநிலை மேலோங்கி நிற்கிறது" எனக் குறிப்பிடுகின்றார்.

"எதிலும் ஒதுங்கிப்போவதைத் தவிர்த்துக்கொண்டு பெண் தன் வலிமையை உணர்ந்து செயற்பட்டால் தான் அவளது ஆற்றல்களும் அபிலாசைகளும் உரிமைகளும் சமத்துவமும், சுதந்திரமும் அங்கீகரிக்கப்படும் நிலை உருவாகும்" எனவும் குறிப்பிடுகின்றார்.

"தமிழர் தாயக விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக பரிணாமம் பெற்று பெண் போராளிகளும் களம் கண்டு சாதனை புரிய ஆரம்பித்த பின்னர் பெண்ணின் மன அவலங்களும் தயக்கமின்றித் துணிச்சலாக வெளிவர ஆரம்பித்தன. இதனால் பெண் விடுதலை பற்றிய புதிய பார்வைத்தெளிவும்,சளைக்காது பெண்ணியத்தை முன்னெடுக்கும் முனைப்பான செயலூக்கமும் இலக்கிய வளர்ப்புக்களிலும் தரிசனமாக ஆரம்பித்தன"

**இணுவையூர்**
**சிதம்பரதிருச்செந்திநாதன்**

என சந்திரகாந்தா அவர்கள் கூறுவது கவனத்துக்குரியது.

இதனைவிட முக்கியமானது இவர் கூறும் இக்கருத்து பெண்ணியம் பேசும் பலர் பல விடயங்களை எடுத்தோம் கவிழ்த்தோம் என்ற ரீதியில் சொல்லிவரும் போது இவர் கூறும் இக்கருத்து முக்கியம் பெறுகின்றது.

"பெண்விடுதலை பற்றிச் சிந்திக்கும் போதும் எழுதும் போதும் செயற்படும் போதும் பெண்ணும் ஆணும் என்றும் இல்லறத்தில் இணைந்து வாழ வேண்டியவர்கள் என்பதை நாம் மறந்துவிடலாகாது.ஆண்கள் எதிரிகள் அல்லர். அதேவேளை எமது எஜமானர்களும் அல்லர். சமமாகக் கைகோர்த்து வாழ்வில் இணைந்து உயர்வடைய வேண்டியவர்கள் இணைவோம் இருபாலாரும் சமமாக!"

## டிசம்பர்-26

# ஒரு வருட நினைவுக்கு முன்பாக சில வரிகள்

சுனாமியோடு சூடு
பிடித்து கொஞ்சக் காலம்
ஓய்ந்திருந்தது, பின்னர்
'கட்றீனா', 'வில்மா' உடன்
மீண்டும் அதிகம்
புலம்பப்படுகிறது. எவ்வளவுதான்
முயன்றாலும் இயற்கையை
மனிதன் வெற்றிகொள்ள
முடியாதென, கையாலாகாத
தமது தனிப்பட்ட கருத்தை
விதைக்க முயலும் புராணம்
பாடிகள் புற்றீசல்கள்போல்
ஆங்காங்கு முகங்காட்டத்
தொடங்கிவிட்டனர். இயற்கை
அனர்த்தங்கள் விளைவிக்கும்
அனர்த்தங்களால்
அல்லற்பட்டிருக்கும் மக்களுக்கு
ஆக்கபூர்வமாக எதனையும்
செய்வதை அல்லது ஒரேயடி
யாக ஒதுங்கியிருப்பதை
விடுத்து, பாதிக்கப்பட்ட
மக்களின் கண்ணீர்களுக்குத்
தங்கள் குருட்டு ஞானங்களால்
விளக்கம் அளிக்கத்தலைப்படு
பவர்கள் குறித்து நாம்
விழிப்புடன் இருக்கவேண்டும்.
இங்கு இயற்கையா, மனிதனா
பலசாலி என்பதல்ல முக்கியம்.
அனர்த்தங்கள் ஏற்படும்போது
இழப்புகளை முடிந்தவரையில்
மட்டுப்படுத்துவதும்,
இவ்வாறான இயற்கைச்
சீற்றங்கள் உண்டாகுவதற்கான
காரணங்களை ஆராய்ந்து
அடுத்தமுறைக்கு நம்மைத்
தயார்ப்படுத்திக் கொள்வதும்
தான் மனிதர்கள்
ஒவ்வொருவருடைய கடமையும்!

தன் கையைச் சுட்ட தீயைக்
கண்ட ஆதிகால மனிதன் பயந்
தோடினான்; ஒளித்தான்;
பாடித்தொழுதான்;
பரம்பரைக்கும் வணங்கினால்
வாழலாமென நம்பினான்.
இன்றும் தீ தொட்டால் சுடத்
தான் செய்கிறது. அளவால்
குறைந்துவிடாத ஆற்றலுடன்
கூடிய தீ சகல மதத்தினருக்கும்
வணக்கத்திற்குரியதான
ஐம்பூதங்களில் ஒன்றாக
இன்றும் இருந்துவருகிறது.
ஆனாலும், இன்று எங்களது
தேவை கருதி அதை ஆக்கவும்
அணைக்கவும் நாம் தெரிந்து
வைத்திருக்கின்றோம்.
எதிர்பாராமல் ஏற்படும்போது
தடுக்கக்கூடிய
வழிமுறைகளையும் கைவசம்
கொண்டுள்ளோம். இவ்வாறாக
நாம் நன்றியுடன் கடந்துவந்த
மானிட நாகரிக வளர்ச்சியின்
வெவ்வேறு கட்டங்களை
மறந்துவிட்டு, வெறுமனே
அபத்தங்களைப் பிதற்றிக்
கொண்டு அனர்த்தங்களின்
விளைவுகளை நியாயப்படுத்தத்
தலைப்படுபவர்களின்
அர்த்தமற்ற முட்டாள்-
மூட்டைகளை அனைவரும்
உணர்ந்துகொள்ள வேண்டும்
என்பதற்காக இந்தப் பேனா
தாள் நனைக்கின்றது.
எல்லாமாய் வியாபித்திருக்கும்
இயற்கையின் சூட்சுமங்களை
முற்றாக அறிந்துவிட
முடியாதிருப்பினும்,
அவ்வறிவினைப்
பெற்றுக்கொள்ளும்
முயற்சியுடன் மனித குலத்தின்
ஆக்கபூர்வமான வளர்ச்சிக்காக
இயற்கையை எவ்வாறு
கையாளலாம் எனக் கருமம்
ஆற்றுவதே
இயற்கையன்னையின்
பிள்ளைகளாகிய நாம்
அவளுக்கு ஆற்றக்கூடிய
பங்களிப்பாக இருக்கமுடியும்.
புன்னகைகளோடு ஒரு
புதுவாழ்வு . . .

குழி நிறையும் உறவுகளால்
கூடவே விழிகளும் . . .
இருள் குவிந்து எம்மை
இல்லாமல் செய்திடவே
புவி நடுங்கியதோ ?
தலை நிமிர்ந்த தமிழன்
தரணியிலே இனியும்
வேண்டவே வேண்டாமென
அலையும் கூடவே
அணி திரண்டதுவோ ?
சுமைதாங்கி அடிமைத்
தமிழனுக்கு
சுதந்திரம் கிட்டிவிடுமோ என
விடுதலை நுகர்ந்திட முன்னரே
விடு இவனை ஒருகை
பார்க்கவென
வெகுண்டெழுந்தனவோ ?

நசிக்க நினைப்பவர்களே
நசியுங்கள் !
மிதிக்க முனைபவர்களே
மிதியுங்கள் !
அழிக்க வருபவர்களே
அழியுங்கள் !
மாண்ட எம் உறவுகளை
மனதிருத்தி சபதம்
செய்கிறோம்
ஒற்றை அணுத்தானும் மிஞ்சி
எங்கும் பரந்து
மீண்டும் மீண்டும்
விண்வரை வளர்வோம்;
இயற்கையோ, செயற்கையோ
எதுவாகினும்
எதிர்கொள்ளும் வகையில்
நாம் எழுவோம்;
கனவுகளை நோக்கிய
கற்கைகளில் ஈடுபடுவோம்;
வரலாறு காணாத அழிவு நம்
வாழ்வழித்த அனர்த்தத்தின்
ஆழங்கள் அறிவோம்;
மாண்ட எம்
ஒவ்வொரு உறவையும்
மனதிருத்தி இதற்காய்
உறுதி பூணுவோம்;
எங்களுக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட
கண்ணீர்களுக்குப் பலியாகி
விடாமல்
புன்னகைகளோடு ஒரு
புதுவாழ்வு செய்வோம் !

ஒவ்வொருவரும் மற்றவரை
உறவாக எண்ணி
இறுமாந்து கிடந்த
எம்மினத்தின் மீது
விழுந்த கவிழ்ந்த இடியே,
ஒன்றறிவாய் !
ஓலமும், ஒப்பாரியும்
கூடவே கண்ணீரும்
தானாக வருவது
ஆனாலும்
இழப்புக்களால்
இதயம் காணும் வலிகளே
ஓர்மமாகி உறுதி கொள்கிறது;
விரியும் எங்கள் விழிகள்,
வேதனையின் வேர்களறிந்தினி
வினை செய்யும் !
இனியொரு
புதுவிதி செய்குவோம் ! !

**சு. ஞாலவன்**




# எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

இலகுவில் சமிபாடடையக் கூடியதும் 24% புரதத்தைக் கொண்டதுமான இப்பிலிப்பில் கால் நடைகளுக்கும் கோழிகளுக்கும் சிறப்பான உணவாகக் கருதப்படுகின்றது.

1977ஆம் ஆண்டில் இலங்கையில் கால்நடை உணவாக அறிமுகப்படுத்தப்பட்டு இதன் பாவனையை மேம்படுத்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

உலர்வலயம், ஈரவலயம், இடைவெப்ப வலயம் போன்ற சகல பகுதிகளிலும் வளரக் கூடிய இது ஏனைய தாவர இனங்கள் வளரமுடியாத வளம் குறைந்த மண்ணிலும் வரட்சிக் காலங்களிலும் வளரக் கூடியதால் எமது பிரதேசத்திற்கு மிகப் பொருத்தமான விலங்குணவாக கருதப்படுகின்றது.

சாதாரணமாக ஒரு மீற்றர் உயரத்திற்கு இந்த இப்பிலிப்பில் மரம் வளர்ந்தவுடனேயே அறுவடை செய்து உணவாக கால் நடைகளுக்கு வழங்கக் கூடிய சிறப்பு மிக்கது. இது மாத்திரம் அல்லாது மரங்களின் வளர்ச்சி நிலையைப் பொறுத்து ஒன்று தொடக்கம் மூன்று மாதத்திற்குள் திரும்பவும் மரங்களை வெட்டி இலைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.



இதன்படி ஒரு ஹெக்டெய்ர் நிலப்பரப்பில் இருந்து சுமார் பத்தாயிரம் கிலோகிராம் தொடக்கம் பதினையாயிரம் கிலோகிராம் வரையிலான கால்நடை உணவை இப்பிலிப்பிலில் இருந்து பெறலாம் என்று சொல்லப்படுகிறது.

கால்நடைகள் தவிர கோழிகளுக்கும் இப்பிலிப்பில் இலையை உணவாக்கலாம். இதனை உணவாக உண்ணும் கோழிகளில் இருந்து பெற்றுக் கொள்ளும் முட்டைகளின் மஞ்சள் கருவின் நிறம் அதிகரிப்பதால் பாவனையாளர்கள் இவ்வகை முட்டைகளை விருப்பத்துடன் வாங்குகிறார்களாம்.

. மேலும் கல்சியம் அதிகமாக இருப்பதன் காரணத்தால் கோழி முட்டைகளின் கடினத்தன்மை அதிகரிக்கின்ற காரணத்தால் கோழி முட்டைகள் இலகுவில் உடையாது பாதுகாக்கப்படும்.

முயல்களின் உணவில் கூட இப்பிலிப்பில் உணவை சேர்க்கலாம். எனினும் கால்நடைகளுக்கோ, கோழிகளுக்கோ, முயல்களுக்கோ உணவூட்டும் போது என்ன அளவில் இது சேர்க்கப்பட வேண்டும் என்பதை துறை சார்ந்த நிபுணர்களின் உதவியுடன் தீர்மானித்த பின்னரே சேர்ப்பது அவசியமானதாகும்.

மேலும் இப்பிலிப்பில் இலையை உணவாக கால்நடைகளுக்கு சேர்ப்பதாலும், பயிரிடுவதாலும் சில தீமையான விடயங்களும் உள்ளன.

இவற்றினைத் தவிர்ப்பதற்கு விவசாய நிபுணர்களில் அல்லது விவசாய போதனாசிரியர்களின் உதவியை கேட்டு பெறுவதன் ஊடாக தீமைகளை தவிர்த்து நன்மைகளைப் அனுபவிக்கலாம்.

# மிளகாய்ப் பயிரில் பனிப்பூச்சியின் தாக்கம்

ஆசிய நாடுகளில் பொதுவாக உணவுக்குச் சுவையூட்டுவதற்காக மிளகாய், பெருமளவில் செய்கை பண்ணப்படுகின்றது. ஆனால் கடந்த பல வருடங்களாக மேற்படி பனிப்பூச்சியின் (THRIPS) தாக்கம் காரணமாக எமது நாட்டில் மிளகாய்ப் பயிர்செய்கை பாரிய வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

பொதுவாக செத்தல் மிளகாய்க்காக பயிரிடும் போது பயிரானது 4-5 மாதங்கள் வளர்க்கப்படல் வேண்டும். இக்காலங்களில் பணிப்பூச்சியின் தாக்கம் அதிகரிக்கும்.



இதனால் விவசாயிகள் அநேகம் பேர் பச்சை மிளகாயாகவே பிடுங்கி விற்பனை செய்கின்றனர். எமக்குத் தேவைப்படும் செத்தல் மிளகாய் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டியுள்ளது.

எனவே பின்வரும் வழிமுறைகளைக் கையாண்டு எமக்கு தேவையான மிளகாயில் நாம் தன்னிறைவை அடைய முடியும்.

**காலநிலை:-**

பொதுவாக வெப்பநிலை அதிகமாகவும், சாரீரப்பதன் குறைவாகவும் உள்ள காலங்களில் இப்பூச்சியின் தாக்கம் அதிகம் ஏற்படுகின்றது. எனவே பருவகாலப் பயிர்ச் செய்கை அவசியம். பெரும் போகத்தில் கார்த்திகை மாதம் தொடக்கம் தைமாதம் வரையும் நடுகையை மேற்கொள்ளல் வேண்டும். சிறு போகத்தில்- பங்குனி, சித்திரை மாதங்களில் நடப்படல் வேண்டும்.

**நாற்று மேடைப்பராமரிப்பு:-** மண் நன்கு தூர்வையாக்கப்பட்டு வைக்கோல் அல்லது உமி போட்டு எரித்து 4-5 நாட்களின் பின்னர் மண் நன்கு கிளறப்பட்டு 3 அடிX 6 அடி விஸ்தீரணமுள்ள மேடையொன்றுக்கு 20 கிராம் கப்ரான்(CAPTAN)தூள் இட்டு அத்துடன் 25 கிராம் காபோபியூறான் (CARBOFURAN 3%G) குறுணல் இட்டு 2 நாட்களின் பின்னர் விதைகள் போடப்படல் வேண்டும்.

**நல்லின விதைகள்:-**

1. எம்.ஐ.2 (MI-2) (மகா இலுப்பளவர்க்கம்)
2. கே.ஏ.2 (KA-2) (கரடியனாறு வர்க்கம்)
3. எம்.ஐ-HOT (M.I.HOT) மகா இலுப்பள வர்க்கம்)

போன்ற விதைகளில் ஏதாவது ஒன்றை நடுகைக்குப் பயன்படுத்தலாம்.

**நாற்றுநடல்:-** நாற்றுக்கள் முளைப்பதற்கு 8 நாட்கள் செல்லும். முளைத்து 21-30 நாட்களில் நாற்று நடலாம். நடுகை இடைவெளி-பொதுவாக மேற்படி வர்க்கங்களுக்குச் சிபார்சு செய்யப் பட்டுள்ள இடைவெளி=60ச.மீ X 45 ச.மீ

=2அடி X1 1/2 அடி

**வளமாக்கிகள்:-** மிளகாய்ப் பயிருக்கு சேதனப் பசளை அவசியம். பச்சைஇலைகள், மாட்டெரு, கூட்டெரு, கோழிஎரு போன்றவற்றின் வசதிக் கேற்ப ஏதாவதொன்றைப் பாவிக்கலாம்.

பொதுவாக சேதனப் பசளைகள் மண்ணிற்கு இடப்படும் போது மண்ணின் வெப்பநிலை குறைகின்றது. நீரைத் தக்க வைக்கும் தன்மை அதிகரிக்கிறது. போசனை மூலகங்கள் அதிகரிக்கின்றன.

மண்ணின் கட்டமைப்பு, இழையமைப்பு சீராக்கப்படுகின்றது. எனவே சேதனப் பசளை அவசியம் இடப்படல் வேண்டும். அசேதனப் பசளையைப் பொறுத்தவரை- மிளகாய்க் கலவை (CHILLI MIXTURE) நைதரசன், பொஸ்பரசு, பொட்டாசியம் கலவைகள் குறிப்பிட்ட விகிதத்தில் கலக்கப்பட்டு விற்பனையாகின்றது. அவற்றைச் சிபார்சு செய்யப்பட்ட அளவில் இடவும்.

**பனிப்பூச்சியின் தாக்கம்:-(THRIPS DAMAGE)**

பயிரின் எல்லாப் பருவத்திலும் தாக்கம் ஏற்படும். பொதுவாக இளம் குருத்துக்களிலும், பூக்களிலும் தாக்கம் அதிகம். இப்பூச்சிகள் இலையின் கீழ்ப்புற மேற்பரப்பிலிருந்து சாற்றைக் குத்தி உறிஞ்சுவதனால் இலைகள் மேற்பக்கமாகச் சுருண்டு தோணிவடிவமாகக் காட்சியளிக்கும். குருத்துக்கள் இளமஞ்சளாகி படிப்படியாக கபில நிறமாக மாறி இறுதியில் அரும்புகள் முற்றாக இறந்து வளர்ச்சி தடைப் படும்.

விவசாயிகளின் தன்னிஷ்டப்படியான, எழுந்தமானமான பூச்சி நாசினிப் பிரயோகத்தின் காரணத்தினாலேயே தற்போது பூச்சித்தாக்கம் பொருளாதார தாக்க எல்லையை மீறி உச்ச நிலையை அடைந்துள்ளது. இப்பூச்சிக்கென சிபார்சு செய்யப்பட்டுள்ள பூச்சி நாசினிகளை மட்டுமே பயன்படுத்தல் வேண்டும்.

**பூச்சி நாசினிப் பிரயோகம்:-**

பொதுவான இயற்கையாகக் கிடைக்கும் நாசினிகள் (விலக்கிகள்-REPELLANT)

1. நாயுண்ணி (LANTANA) இலைச்சாறு
2. வேப்பிலைச்சாறு
3. உள்ளிச்சாறு
4. வேப்பம் விதைப் பிரித்தெடுப்பு

*இவை பூச்சிகளைக் கொல்வதில்லை அவற்றைத் தூர விலக்குகின்றன. அத்துடன் சூழலையும் உயிரினங்களையும் பாதிப்பதில்லை.*

போன்றவற்றில் ஏதாவது ஒன்றைப் பாவிக்கமுடியும். பொதுவாக இச்சாறுகள் எடுக்கப்பட்டு 3நாட்கள் நொதிக்க வைத்து சிறிதளவு சவர்க்கார நீர்கலந்து பாவித்தல் அவசியம்.

**இரசாயனப் பூச்சி நாசினிகள்:-**

முன்னர் பாவனையிலிருந்த நச்சுத்தன்மைகூடிய, சூழலை மாசுப்படுத்தும் நாசினிகள் யாவும் தற்போது தடைசெய்யப்பட்டுள்ளன.

நச்சுத்தன்மைகுறைந்த, சூழலை மாசுபடுத்தாத, ஏனைய. நன்மை பயக்கும் உயிரினங்களிற்கு தீங்கு விளைவிக்காத விவசாய இரசாயனங்கள் தற்போது சிபார்சு செய்யப்பட்டு பாவனையிலுள்ளன. அவற்றுள் இப்பூச்சிக்கு எதிரான வினைத்திறனான நாசினிகளில் சில வருமாறு,

1.இமிடோகுளோபிறிட்:- IMIDOCLOPRID (ADMIRE)

2.F விப்றோனல்:-FIBRONIL-(RESANT)

3. அசெற்றாமிபிறிட்- A CETAMIPRID (MOSPILLAN)

போன்ற இரசாயனங்களில் ஏதாவது ஒன்றைச் சரியான நேரத்தில் சிபார்சு செய்யப்பட்டளவில் காலையில் ஏழுமணிக்கு முன்னர் அல்லது மாலையில் 5.00மணிக்குப் பின்னர் விசிறல் வேண்டும்.

**இப்பூச்சியின் தாக்கத்தைக் குறைப்பதற்குப் பொதுவான பராமரிப்பு முறைகள்:-**

**ஊடுபயிர்ச் செய்கை:-**

1. பயிர்ச்செய்கைப் பிரதேசத்தில் புல், பூண்டுகள் அகற்றப்பட்டுச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

2. மிளகாய்ப் பயிர் செய்கைத் துண்டைச் சுற்றி 2 அல்லது 3 வரிசைகளில் சோளம் அல்லது இறுங்கு அல்லது குரக்கன் பயிர்களை வளர்த்தல்.

பாத்தியின் அளவும், பயிர்களின் எண்ணிக்கையும் காணியின் அளவைப் பொறுத்து வேறுபடலாம்.

3. வசதியுள்ளவர்கள் மிளகாய்த் தோட்டத்தைச் சுற்றி கிடுகுவேலி அல்லது பனை ஓலை வேலி அல்லது நிழல் மரங்கள் நடலாம்.

4. எக்காரணங்கொண்டும் பூச்சி நாசினி விற்பனை செய்யப்படும் கடைகளில் உள்ளவர்களிடம் விவசாயிகள் ஆலோசனை கேட்பதைத் தவிர்க்கவும்.

உங்கள் வீடுகளுக்கு அண்மையிலுள்ள விவசாய விரிவாக்க நிலையத்திலோ அல்லது விவசாயப் போதனாசிரிய இடமோ, அல்லது விவசாய ஆராய்ச்சி நிலையத்திலோ அல்லது பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திடமோ ஆலோசனையைப் பெறவும்.




சோளம் அல்லது குரக்கன்

**கவனிக்கவும்:-**

மிளகாய்க் கன்றுகள் மதாளிப்பாக, சடைச்சு வளர வேண்டும் என்பதற்காக யூரியாப் பசளையை அதிகளவில் இடவேண்டாம். தழைச்சத்து என அழைக்கப்படும் யூரியா, அமோனியம் சல்பேற்று போன்ற வளமாக்கியின் அதிகரித்த பாவனையாலேயே இப்பூச்சியின் தாக்கம் அதிகரித்தது. எனவே சிபார்சு செய்யப்பட்ட அளவில் சரியான நேரத்தில் மிளகாய்க் கலவை பசளையை இடவும். தேவையான அளவு நீரைக் கட்டவும்.

**முக்கியம்:-**

மிளகாய்ப் பயிர் துண்டம் குளிர்மையாகவும், ஈரளிப்பாகவும் இருத்தல் அவசியம்.

இரகு கைலை நாதன்,
பு.ச்சியியல் ஆராய்ச்சியாளர்.

# ஓரங்கட்டப்படுகிறார்..!

நீண்ட இழுபறி நிலைக்கு மத்தியில் சிறிலங்கா அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் அணியில் இடம்பிடித்த முன்னாள் அணித் தலைவர் கங்குலிக்கு மீண்டும் அவல நிலை தோற்றியுள்ள அதேவேளை, அவரின் கிரிக்கெட் வாழ்வின் எதிர்காலம் குறித்த கேள்வியும் தற்போது எழுந்துள்ளது.

இதற்கு இந்திய கிரிக்கெட் சபை அவர் மீது திட்ட மிட்ட ரீதியில் பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதே காரணம் என கிரிக்கெட் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறிலங்கா அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இருந்து கங்குலி நீக்கப்பட்டுள்ளதாகவும், அவருக்குப் பதிலாக வசிம் ஜப்பார் அணியில் இணைக் கப்பட்டுள்ளதாகவும் இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

சிம்பாப்வேயில் பயிற்சியாளருடன் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக அணித்தலைவர் பதவி பறிக்கப்பட்டு, ஒரு நாள் போட்டிகளிலிருந்து நீக்கப்பட்ட கங்குலிக்கு டெஸ்ட் அணியில் இடம் கிடைக்குமா என்ற கேள்வி பல தரப்பட்டவர்களிட மிருந்தும் எழுந்திருந்தது.

கொல்கொத்தா ரசிகர்கள், இந்தி படவுலக நட்சத் திரங்கள் கங்குலியை அணியில் இணைத்துக் கொள்ளும் வகையிலான தொடர் போராட்டங்களை நடந்தி வந்த னர்.உள்ளூர் போட்டி களில் ஆடிவந்த கங்குலி அப்போட்டித் தொடர்களில் அவரின் ஆட்டத் திறன் வெளிப்பட்டதாக இருந்ததில்லை. ஆனால், துலீப்கிண்ணப் போட்டித்தொடர் ஒன்றில் சதம் ஒன் றைப் பெற்றி ருந்தார்.

இந்நிலையில் சிறிலங்காவுக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட முதலாவது டெஸ்ட் போட்டி யில் கங்குலியின் பெயர் அறிவிக்கப்பட்டதுடன் மீத முள்ள இரண்டு போட்டிக்கும் முதலாவது போட்டிக் குப் பின்னரே வீரர்களின் பெயர் அறிவிக்கப்படும் என கிரிக்கெட் சபையின் தெரிவுக்குழுத் தலைவர் கிரேன் மோரே தெரிவித்திருந்தார்.

இது கங்குலி ரசிகர்களுக்கு திருப்திப்படுத்தும் வகையில அமைந்ததுடன் கங்குலிக்கு இப்போட்டித் தொடரில் தன்னுடைய ஆட்டத் திறனை வெளிப்படுத்த வேண்டிய அவசியமும், அவரின் கிரிக்கெட் எதிர்காலம் குறித்த கேள்விக்கு விடையளிக்க வேண்டியவராகவும் இருந்தார். இந்நிலையில் முலாவது டெஸ்ட் போட்டி மழை காரணமாக மூன்று நாள் ஆட்டம் கைவிடப்பட்ட நிலை யில் நான்காம் நாள் பிற்பகலே ஆட்டம் தொடங் கப்பட்டு சமநிலையில் முடிவுற்றது.

இரண்டாவதாக நடைபெற்ற டில்லி டெஸ்ட் போட்டியில் கங்குலி தனது மீள் வருகையை உறுதிப்படுத்தும் வகையில் ஆடியிருந்தார். அதாவது, பெரும் மன அழுத்தத்திற்கு மத்தியில் இரண்டு இனிங்சிலும் முறையே 40, 39 ஓட்டங்களைப் பெற்றி ருந்தார்.

இந்த நிலையில் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இருந்து அவரை இந்திய கிரிக்கெட் சபை ஏன் நீக்குதல் வேண்டும்? மேற்படி இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவரின் ஆட்டத் திறன்தான் வெளிப்படவில்லையா? போன்ற கேள்விகள் கிரிக்கெட் ஆய்வாளர்களை குழப்பமடைய வைக்கும் ஒன்றாகவுள்ள அதேவேளை, இந்திய கிரிக்கெட்சபை மீது அதிருப்தியும் கொண்டுள்ளனர்.

எனவே, கங்குலியை ஓரம் கட்டுதல் வேண்டும் என்ற எண்ணம் இந்திய கிரிக்கெட் சபைக்கு அதிகம் இருந்திருப்பதுடன் அவர் தானாகவே கிரிக்கெட்டில் இருந்து விலகிக் கொள்ள நிர்ப்பந்திக்கும் வகையிலான செயற்பாட்டையுமே இந்திய கிரிக்கெட் சபையின் இது போன்ற சம்பவங்கள் வெளிக்காட்டி நிற்கின்றது.

இந்நிலையில், கங்குலியை அணியில் இருந்து நீக்கியமை சரியானதே என் ஒரு எண்ணப்பாடு இருந்த நிலையில் அவருக்கு மீண்டும் அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டு அதில அவரும் தன்னுடைய ஆட்டத் திறனை சற்று வெளிப்படுத்திய வேளையில் இந்திய கிரிக்கெட் சபையின் இவ்வாறான முடிவு திட்டமிட்டதொன்றாகவும் பழிவாங்கும் நோக்கம் கொண்டதாகவுமே கொள்ள முடியும்.

—சுபானந்






இலங்கைக்கு எதிரான 2 ஆவது டெஸ்டில் கங்குலி சிறப்பாக விளையா டிய போதிலும் 3 ஆவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் இருந்து அவர் நீக்கப்பட்டதையடுத்து இந் தியா முழுவதும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களிடையே மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கங்குலியின் ரசிகர் இந்தியாவில் போராட்டம்

இரண்டாவது டெஸ்ட்போட்டி முடிவடைந்ததும் கங்குலி நேற்று முன்தினமிரவு கொல்கத்தா திரும்பினார்.இதை அறிந்த அவரது ரசிகர்கள் விமான நிலையம் முன்பு திரண்டனர். பின்னர் அவர்கள் கங்குலி ஜிந்தாபாத் என கோஷமிட்டனர்.கங்குலியின் வரவை எதிர்பார்த்து ஏராளமான பத்திரிகை யாளர்களும் காத்திருந்தனர். ஆனால் கங்குலி பாதுகாப்பாக மாற்று வழியால்அழைத்து செல்லப்பட்டார்.




டில்லியில் டெஸ்ட் போட்டி முடிவடைந்ததும் மைதானத்தின் வெளியே ரசிகர்கள் கிரேன் மோரோவின் உருவ பொம்மையைத் தீ வைத்து எரித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

கங்குலி நீக்கப்பட்டதும் அவரது சொந்த இடமான கொல்கத்தாவில் ரசிகர்கள் ஆங்காங்கே போராட்டத்தில் குதித்தனர். அதில் ஒரு பகுதியினர் கொல்கத்தாவில் உள்ள அகர்பாரா என்னும் இடத்தில் ரயில்வே நிலையத்திற்குச் சென்று தகராறு செய்தனர். பின்னர் அவர்கள் தண்டவாளத்தில் மறியல் செய்தனர்.இதனால் அங்கு பெரும்பதற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில் டெஸ்ட் போட்டியில் இருந்து கங்குலியை நீக்கியதற்குதலைவர் ராவிட் அதிருப்தி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், கங்குலியின் ஆட்டம் இந்த டெஸ்டில் சிறப்பாக இருந்தது.அவர் நீக்கப்பட்டது துரதிஷ்டவசமானது.

இது அவருக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கும் எனத் தெரிவித்துள்ளார். கங்குலி நீக்கத்திற்கு முன்னாள் வீரர்கள் உட்பட பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# கும்ப்ளேயின் சாதனை



டில்லி, பெரோஸ்ஷா கோட்லா மைதானம் அணில் கும்ளேக்கு மிகவும் ராசியானது 1998/99 இல் இங்கு நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் இவர் ஒரே இன்னிங்சில் 10 விக்கெட் வீழ்த்தி முறியடிக்க முடியாத உலக சாதனை நிகழ்த்தியுள்ளார். இவரது பந்து வீச்சு இம்முறையும் தொடர்ந்தது. முதல் இனிங்சில் ஆறு விக்கெட் வீழ்த்திய இவர் இரண்டாவது இனிங்சில் நேற்று நான்கு விக்கெட்டைக் கைப்பற்றி அசத்தினார். இதன் மூலம் இந்த மைதானத்தில் இரண்டுமுறை பத்து விக்கெட்டுக்கு மேல் வீழ்த்தும் முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்ற கும்ளேக்கு ஆட்டநாயகன்விருது வழங்கப்பட்டது. இந்த மைதானத்தில் இதுவரை ஐந்து டெஸ்டில் விளையாடியுள்ள இவர் 48 விக்கெட்டை வீழ்த்தியுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் 10 விக்கெட்டுக் களை கும்ளே எட்டுமுறை வீழ்த்தியுள்ளார். அவரைவிட முரளிதரன்,வோர்ன் மற்று ஹாட்லி மட்டுமே அதிகமுறை 10 விக்கெட்டுக்களை வீழ் த்தியுள் ளனர். இது வரை பத்து விக்கெட் டுக்கள் அதிகமுறை வீழ்த்தியுள்ள வீரர் கள்.

முரளிதரன் (இலங்கை)14, ஷேர்ன்வோர்ன் (அவுஸ்திரேலியா)10, ஹாட்லி (நியூசிலாந்து) 09, கும்ளே (இந்தியா)08.

# இந்திய அணியின் முன்னேற்றத்தை சிறிலங்கா அணி தடுத்து நிறுத்துமா?

இந்திய அணிக்கும் சிறிலங்கா அணிக்குமிடையில் நடைபெறும் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் இந்திய அணியின் கரம் சற்று ஓங்கியிருக்கிறது.மழை காரண மாக சென்னை டெஸ்ட் சமநிலையில் முடிவடைந்ததுடன் டில்லி டெஸ்டில்



இந்தியா வென்றுள்ளது. நடைபெற்று முடிந்த போட்டிகளினடிப்படையில் நோக்கும் போது இந்தியா தொடரைக் கைப்பறுமா என்பது சற்று கேள்விக்குறியாகவே காணப்படுகி றது.

காரணம்சென்னை டெஸ்டில் சிறிலங்காவின் பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சில் வெறும் 163 ஓட்டங்களில் முதல் இனிங்சில் இந்தியா சுருண்டது.

அத்துடன் 164 ஓட்டங்களைப் பெறும்வரை நான்கு விக்கெட்டுக் களை மட்டுமே இந்திய பந்துவீச்சாளர்களால் வீழ்த்த முடிந்தது.

அதைவிட இரண்டாவது டெஸ்டில் 188 ஓட்டங்களில் இந்தியா வெற்றிபெற்றபோதும் சிறிலங்கா ஐந்து நாட்கள்வரை போட்டியை இழுத்து சென்றமையும் அதன் வலிமை குறைவடைந்துவிடவில்லை என்பதை எடுத்தக்காட்டியுள்ளது.

மேலும் இவ்விரு போட்டிகளிலும் சுழல்பந்துவீச்சாளர்களின் பந்து வீச்சே மேலாங்கிக் காணப்பட்டது. வேகப்பந்து வீச்சாளர்கள் மிகவும் சிரமப்பட்டே ஓரிரு விக்கெட்டை வீழ்த்தினர்.மேலும் அவிஸ்க குணவர்த்தன ஜெகன் முபாரக் போன்றோர் மூன்றாவது போட்டி அணியிலிருந்து நீக்கப்பட்டுப் பதிலாக வேறு துடுப்பாட்டவீரர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். இதன்காரணமாக மூன்றாவதும் இறுதியுமான போட்டியில் இந்தியா வெற்றிபெறக் கடும் போராட்டம் நடத்த வேண்டியதாகவே இருக்கும். ஒரு நாள் தொடரில் ஆறுக்கு ஒன்று என்றரீதியில் தோல்வியைச் சந்தித்ததால் சிறிலங்கா அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து கடும்விமர்சனங் களுக்குள்ளானார்.

அது மட்டுமன்றி சிறந்த சகலதுறை வீரரும் சாதனையாளருமான சனத் ஜெயசூரிய இத்தொடரில் பங்கேற்றிருப்பின் இந்தியாவின் முன்னேற்றம் தடுத்துநிறுத்தப்பட்டிருக்கும். ஜெயசூரிய அனுபவமும் முதிர்ச்சியும் கொண்டவீரர் என்பதைஇங்கு கூறத் தேவையில்லை. அவரை டெஸ்ட் அணியில் இணைக்காமல் வந்ததை அத்தப்பத்துவே ஒப்புக்கொண்டுள்ளார்.அது போன்று ரசல் ஆனால்ட்டும் சிறந்த துடுப்பாட்டவீரர் என்பதை மறுக்கமுடியாது. அவர்களின் பங்களிப்பின்மை இந்தியாவின் முன் னேற்றத்துக்கு காரணமாயிருக்க லாம்.

எனவே விடப்பட்ட தவறுகளை திருத்தி மூன்றாவது போட் டிக்குச் சிறிலங்கா அணி களமிறங்கினால் இந்தியாவின் தொடர் வெற்றிக் கனவு சிதைந்து விடலாம்.

எனினும் பொதுவாகவே அணிகள் ஒவ்வொன்றும் தனது மண்ணில் வெற்றிக்களைக் குவிப்பதே நிகழும் சம்பவங்கள் என்பதால் இந்தியாவின் ஆதிக்கமும் தனது மண்ணிலேயே தொடரும். அது மட்டுமன்றி இரண்டாவது போட்டியில் தொண்டைநோ காய்ச்சல் காரணமாக பங்கேற்காத அதிரடி வீரர் வீரேந்தர் சேவாக் களமிறங்குவதாலும் மத்தியவரிசையில் சிறப்பாக ஆடவில்லை எனக் காரணம் கூறி அணியிலிருந்து நீக்கப்பட்ட கங்குலிக்குப் பதிலாக வசிம் ஜப்பார் என்ற உள்நாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்கும் துடுப்பாட்ட வீரர் இணைத்துக் கொள்ளப்படுவதாலும் சிறிலங்கா மூன்றாவது போட்டியை வென்று தொடரை சமன் செய்ய முடியுமா என்ற வினாவும் தோன்றுகிறது.

கடுமையாக முயன்று சிறிலங்கா அணி கடைசிப் போட்டியில் வென்று தொடரை சமன் செய்யுமாயின் சிறிலங்காவை தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளில் வென்று ஆதிக்கம் செலுத்தும் இந்தியாவின் முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டு விட்டதாக அமையலாம்.

—வடிவேல்

# நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை

வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் - II (நீகோட்-II)

மன்னார் மாவட்டம்.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

ஆஅவ கடன் இல:- 2168- SRI (SF)

ஆஅவ கொடை இல:- 0007- SRI (SF)

### கேள்வி அறிவித்தல் - 02

### குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு, கிழக்கு சனசமூக புனருத்தாரண, அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நீக்கோட் ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவு களுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் நீக்கோட் கருத்திட்டத்தின் கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக மன்னார் மாவட்டக் கேள்விச் சபையின் தலைவர் பின்வரும் ஒப்பந்த வேலைக்கு தகுதிவாய்ந்த கூறுவிலையிடுவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கூறுவிலைகளைத் தற்போது கோருகின்றார்.

| இல | ஒப்பந்த இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கூறுவிலை பிணைப் பணம். (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | மன்/நீகோட் – II/ஈடி/05 | இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலையில் ஆசிரியர்களுக்கான விடுதித் தொகுதிஅமைத்தல | M7 கட்டட நிர்மாணம் | 49,500/= |
| 02 | மன்/நீகோட் – II/ஈடி/06 | ஆண்டாங்குளத்தில் 170"X25" மடு வலயக்கல்வி அலுவலகம் புனரமைத்தல். | M5 கட்டட நிர்மாணம் | 113,500/= |
| 03 | மன்/நீகோட் – II/ஈடி/07 | சின்னவலயன்கட்டு அ.த.க.பாடசாலையில ஆசிரியர்களுக்கான விடுதித் தொகுதி அமைத்தல். | M7கட்டட நிர்மாணம் | 24,500/= |
| 04 | மன்/நீகோட் – II/ஈடி/08 | சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில 110"X25" மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம் புனரமைத்தல். | M6கட்டட நிர்மாணம் | 90,000/= |
| 05 | மன்/நீகோட் – II/ஈடி/09 | புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில 110"X25" மூன்று மாடி வகுப்பறைக் கடட்டம் புனரமைத்தல். | M6கட்டட நிர்மாணம் | 89,000/= |
| 06 | மன்/நீகோட் – II/ஈடி/10 | தோட்டவெளி அ.த.க.ப்பாடசாலையில் 110"X25" இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் புனரமைத்தல். | M6கட்டட நிர்மாணம் | 65,000/= |
| 07 | மன்/நீகோட் – II/ஈடி/11 | பெரியகுஞ்சுக்குளம் றோ.க.த.க. பாடசாலையில் 100"X25" வகுப்பறைக் கட்டடம் புனரமைத்தல். | M7கட்டட நிர்மாணம் | 26,000/= |
| 08 | மன்/நீகோட் – II/ஈடி/12 | பாப்பாமோட்டை றோ.க.த.க. பாடசாலையில் 100"X25" வகுப்பறைக் கட்டடம் புனரமைத்தல். | M7கட்டட நிர்மாணம் | 26,000/= |
| 09 | மன்/நீகோட் – II/எச்எஸ்/03 | அடம்பனில் சுகாதார அலுவலர் அலுவலகத்து டன் தங்குமிடமும் அமைத்தல். | M6 கட்டட நிர்மாணம் | 100,000/= |
| 10 | மன்/நீகோட் – II/ஆர்டி/03 | கல்பதித்து தார் ஊற்றுதல் யூபிலி வீதி (2.80 கி.மீ) (Priming & DBST) | M5வீதி. | 126,500/= |
| 11 | மன்/நீகோட் – II/ஜடி/02 | மன்னார் அரசாங்க அதிபருக்கான வதிவிடம் அமைத்தல். | M5கட்டட நிர்மாணம் | 135,000/= |
| 12 | மன்/நீகோட் – II/ஜடி/04 | மன்னார் மாவட்டத்தின் சிலாவத்துறை மீன்பிடி கிராமத்தில் மீன்பிடி பரிசோதகர்களுக்கான விடுதியுடனான அலுவலக அறை புனரமைத்தல். | M7கட்டட நிர்மாணம் | 22,000/= |
| 13 | மன்/நீகோட் – II/ஜடி/05 | வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினைச் சேர்ந்த இரண்டு அலுவலர்களுடைய குடும்பங்களுக்கான விடுதியினை அமைத்தல், மன்னார். | M6கட்டட நிர்மாணம் | 51,000/= |
| 14 | மன்/நீகோட் – II/சீடி/02 | மன்னார் பொதுச் சந்தை அமைத்தல் கட்டம II | M6கட்டட நிர்மாணம் | 84,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும்.இது வாடிக்கையாளர்களிட மிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுபத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

(மிகுதி 21 ஆம் பக்கம் பார்க்க)

## 55 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 07 - 07 - 1937



இறப்பு 22 - 10 - 2005


### திருமதி துரைராசா தையல்நாயகி (பூபதி)

எம் அன்புத்தெய்வத்தின் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு அகலாது. என்றும் ஒளிவிளக்காய் ஒளிர்ந்துகொண்டிருக்கும். வேலணையைப் பிறப்பிடமாகவும் சரவணையை வசிப்பிடமாகவும் இல 360 கரியாலை நாகபடுவானை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராசா தையல்நாயகி (பூபதி) அவர்கள் 22.10.2005 அன்று காலமானார். அவரின் 55 ஆம்நாள் அந்தியேட்டி கிரியைகள் 16.12.2005 வெள்ளிக்கிழமை அன்னாரின் ஆத்ம சாந்தியடைய வேண்டி பிரார்த்தனை நிகழ்வும் மதிய போசனமும் பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்: கணவர்–வ. துரைராசா
கரியாலை நாகபடுவான்,இல–360,
பல்லவராயன்கட்டு. (7090)

## 6 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்...

பிறப்பு 15 - 08 - 1975



வீரச்சாவு 16 - 12 - 1999

### கப்டன் புகழரசன்

முருகுப்பிள்ளை-நகுலேஸ்வரன்(பிள்ளையார்)

அச்சுவேலி தெற்கு

தாயகம் மீட்கவென்று தரணியில் வந்துதித்த-சூரியன்
தானைத்தலைவன் பிரபாகரனின் வழிநடத்தலில்
தமிழர் எம் விடுதலைக்காக செங்களமாடி
ஓயாத அலை 3 இல் செங்குருதி சிந்தி
விதையாக வீழ்ந்திட்ட எங்கள் புகழரசா!
ஆறு ஆண்டுகள் கடந்தாலும் உன்னை இழந்த
எம் இதயங்கள் ஆறவில்லை.
என்றும் உன் நினைவுடன் வாடிநிற்கும்

முகவரி:-
தபாற்கந்தோர் அருகாமை,
விசுவமடு.

குடும்பத்தினர்.

(7083)

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதை மனித உரிமையைப் பற்றிப் பேசுவோர் தங்கள் விமர்சனங்களில் குறிப்பிடத் தவறிவிடுகிறார்கள். இலங்கை அரசு அதன் 60 வருடகால சரித்திரத்தில் மிகப் பாரிய மனித உரிமை மீறிய ஓர் அரசாகக் கருதப்படுகின்றது. விடுதலைப்புலிகள் இந்த அரச பயங்கரவாதத்தின் எதிர்ப்பாகவே உருப்பெற்றார்கள். அரசபயங்கர வாதத்தை தமது மூச்சில் சொல்லி வருபவர்கள் இந்த உண்மையை தெரிந்துகொண்டும் மறைப்பவர்களாகவே இருக்கின்றார்கள். அதிகாரம் கூடியவரின் பயங்கரவாதமும் அநீதியும் கட்டுக்கடங்காமல் ஆட்சி செய்யும் இடத்தில் ...ளஎதிர்ப்பாக உருப்பெறும் ...ங்கள் தற்பாதுகாப்பு ...களே.

...வி:-வடகிழக்கு மனித ...ரிமைச் செயலகத்துடன் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்ட மக்கள் தொடர்புகொள்ள **வேண்டுமாயின் எப்படித் தொடர்புகொள்ள முடியும்?எப்படி முறைப்பாடுகளைச் செய்யலாம்? என்பது பற்றி விபரிப்பீர்களா?**

**பதில்:-** மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் வடகிழக்கு மனித உரிமைச் செயலகத்துடன் அதாவது வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம், கரடிப்போக்கு சந்தி,கிளிநொச்சி என்ற முகவரியுடன் நேரடியாகவோ,தபால் மூலமோ, ஏற்றுக்கொள்ள கூடிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து முறைப்பாடு ஒன்றைச் செய்வதன் மூலம் நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும். எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ள அல்லது தகவல் தர விரும்புவோர் தொ.பே:009421-228-5986க்கும்,மின் அஞ்சல்: nesohr @ hotmail.com என்ற முகவரிக்கும் தொடர்புகொள்ளலாம்.

வடகிழக்கு மனித உரிமைச் செயலகம், மக்கள் மத்தியில் மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு தீர்வுகாண்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. யூலை 2005 வரை எமது மட்டத்தில் கொண்டுவரப்பட்ட 318 முறைப்பாடுகளில் 205 முறைப்பாடுகள் முற்றுமுழுதாக அதாவது நியாயமான வழிகளில் பக்கச்சார்பின்றி தீர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய முறைப்பாடுகளுக்கு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

---

# மாதாந்த "தேடல்" அறிவோர் ஒன்று கூடல் ஆய்வரங்கு

| | | |
|---|---|---|
| **தலைப்பு** | :- | **"கலைஞனின் சமூகப் பொறுப்பு"** |
| **நிகழ்த்துபவர்** | :- | **திரு. நிலாந்தன் அவர்கள்** |
| **காலம்** | :- | **18.12.2005, ஞாயிறு:-மாலை 3.00 மணி** |
| **இடம்** | :- | **கிளி. நுண்கலைக் கல்லூரி,கேட்போர் கூடம்** |

**அறிவோர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(சி.13432) *தமிழீழ நுண்கலைப்பிரிவினர்*

---

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

V. ஒப்பந்தக்காரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவல்களை வடக்கு கிழக்கு சமூக புனருத்தாரண, அபிவிருத்தி திட்டம் (நீக்கோட்) மன்னார் அலுவலகத்தில் வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி சம்பந்தமான ஆவணங்களையும் பரிசீலனை செய்யலாம். தொலைபேசி:-023-223103, தொலைநகல்:-023-2233103, ஈமெயில்: distmnr@sltnet.lk.

06. கேள்வி ஆவணங்களை 16.12.2005 இலிருந்து 30.12.2005 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து ரூபா 1000/= மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07. முன்கூட்டிய கேள்விக் கூட்டமொன்று 30.12.2005 மாலை 3.00 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

08. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 7 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

09. பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, நீக்கோட், மாவட்ட திட்ட அலுவலகம், கச்சேரி மன்னார். என்றவிலாசத்துக்கு 11.01.2006 மாலை 2.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**வே.விசுவலிங்கம்,**
**தலைவர்,**
**மாவட்ட கேள்விச்சபை/ அரசாங்க அதிபர்,**
**நீக்கோட் திட்டம்,**
**மன்னார்.**

(சி.13557)

---

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

**பிறப்பு** 16 - 03 - 1939



**இறப்பு** 16 - 11 - 2005

அமரர்
## டேவிட் விமலாதேவி
(ஆஸ்பத்திரியடி தருமபுரம்)

*ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு*
*மீளாத் துயில்கொண்ட எங்கள்*
*அன்புத் தெய்வமே அம்மாவே*
*நீங்கள்மறைந்துஒரு மாதம் என்ன*
*ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்*
*உங்கள் அழகு முகம் என்றும்*
*எம் மனதைவிட்டு அகலாது அம்மா.*

உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

*அன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

என்றும் நினைவுடன்
கணவர்,மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்

(7096)

---

# தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் வன்னி

## பொதுக் கூட்ட அழைப்பிதழ்

**இடம்:-** கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம்
**காலம்:-** 25-12-2005 (ஞாயிற்றுக்கிழமை)
**நேரம்:-** காலை 10.00 மணி

## நிகழ்ச்சி நிரல்

- அகவணக்கம்
- தலைவர் உரை
- செயலாளர் அறிக்கை
- பொருளாளர் அறிக்கை
- சபையின் கருத்துரை
- கடந்தகால கூட்டத்தின் தீர்மானம் ஆராய்தல்
- பிற விடயங்கள்
- நன்றியுரை

*தங்களைத் தவறாது வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*த.ஜெகதீஸ்வரன்*
*தலைவர்.*

(சி-13558)

*அ.விஜயபாலகிருஸ்ணன்*
*செயலாளர்.*




## அத்தியாயம்- 20

பகுதி -77

"அதுதான் என்ர திட்டம்" என்றான் டிப்ஸ். "ஆனா என்ர தங்கச்சிக்கு என்னசெய்யிற தெண்டுதான் முடிவுசெய்ய முடியாம இருக்கு. அப்பாவுக்கெண்டு கடதாசி பறக்காம வைக்கிற எடை ஒன்றை செய்துகொண்டிருக்கிறன்"

"உங்கட குடும்பத்தில இருக்கிற ஒவ்வொருவருக்கும் எண்டு ஏதாவதொண்ட செய்ய வேணும் எண்டு நீங்கள் விரும்புறீங்கள் அல்லவா?" என்று கேட்டேன்.

"ஓம் ஒருத்தரயும் தவறவிட நான் விரும்பயில்ல" என்றான் டிப்ஸ். எனக்கு விருப்பமான அந்தப் பழைய மரத்தின்ர கிளையின்ர நுனித்துண்ட வைச்சு அம்மம்மாவுக்கு ஒரு பரிசை செய்து கொண்டிருக்கிறன்"

"அம்மம்மா அதக் கண்டா சந்தோசப்படுவா"

"ஓம் சந்தோசப்படுவா. என்ர பெறுமதியான பொருட்களில ஒண்டா அத வைச்சிருக்கிறன்"

அவன் திரும்ப மணல் பெட்டிக்கருகில் சென்றான். "அம்மா!" கத்திக்கூப்பிட்டன். "கீழ தனிய என்ன செய்யுறீங்கள்? நீங்கள் மலையச் செய்யத் தேவையில்ல. இஞ்ச வாங்க உங்களுக்குநான் உதவுறன். அம்மாப் பொம்மையைத் தன் கரங்களில் மென்மையாக ஏந்திக் கொண்டான். எனக்குக் கிட்டவாக நடந்துவந்தான். "சில நேரங்களில அவ அழுகிறவ" என்று மிகவும் தாழ்ந்த குரலில் சொன்னான்.

"அவவுடைய கண்களில கண்ணீர் நிறைஞ்சிருக்கும். அந்தக் கண்ணீர் அவவட முகத்தில வழிஞ்சு ஓடும். அவ அழுதுகொண்டிருப்பா. அவ துக்கமா இருக்கிறாவாக்கும் எண்டு நான் நினைச்சுக்கொள்ளுறனான்"

"அவ துக்கமாத்தான் இருந்திருக்கவேணும்" நான் சொன்னேன்.

"நான் அவவ வீட்டுக்குள்ள குடும்பத்தோட விடப்போறன்" அறிவிப்பதுபோல் சொன்னான். "நான் அவயள் எல்லாரையும் சாப்பாட்டு மேசையச் சுத்தி இருத்திவிடப்போறன். அப்பதான் அவயள் ஒண்டா இருப்பினம்"

பொம்மை வீட்டில இருந்த பொம்மை மேசையைச் சுற்றி பொம்மைக்குடும்பத்தின் பொம்மைகளை அவன் மிக அவதானமாக இருத்திவிடுவதை நான் அவதானித்துக்கொண்டிருந்தேன். அவன் பொம்மைவீட்டின் அருகே முழந்தாளிட்டு அமர்ந்து அவர்களுக்காக மென்மையாகப் பாடத்தொடங்கினான்.

ஆண்டவன்அருள்வேண்டி
ஒன்றாய் கூடிநின்றோம்...

பாடிக்கொண்டே போனவன் திடுதிடுப்பென்று நிறுத்திக்கொண்டான்.

"இல்லை. இந்தப்பாட்ட இப்ப பாடமுடியாது" என்றான். "இத அம்மம்மாவுக்கு மட்டும்தான் பாடலாம். இவங்கள் கோயிலுக்குப் போறக்கள் இல்ல"

வரையும் பீடத்துக்குச் சென்ற அவன் அதிலிருந்த தாளில் பிரகாசமான வர்ணங்களைத் திட்டுத்திட்டாகத் தீட்டிவிட்டான்.

"இது மகிழ்ச்சியைக்காட்டுது" என்றான். அவனுடைய தூரிகை அந்த வர்ணங்களைப் பரவி விட்டது.

"வர்ணங்கள் எல்லாம் சந்தோசமா இருக்குதுகள். அவை எல்லாம் ஒண்டா இருக்குதுகள் அழகாகவும் நட்போடையும் இருக்குதுகள். இதுக்குப்பிறகு இரண்டு வியாழக் கிழமைகள் தான் வரும்" என்று அவன் சொன்னான்.

"ஓம். இரண்டு வியாழனுகள் இருக்குது. அதுக்குப் பிறகு கோடை விடுமுறை வந்து விடும். அதுக்குப்பிறகு நீங்கள் விரும்பினா நீங்கள் இங்க திரும்பிவரலாம்" என்று நான் சொன்னேன்.

உங்கள காணாம எனக்கு ஏக்கமா இருக்கும். இங்க வராம இருக்கிறதே ஏக்கமா இருக்கும். நான் வராம இருக்கிறது உங்களுக்கு ஏக்கமா இருக்குமா?

"ஓம் ஏக்கமாத்தான் இருக்கும் டிப்ஸ்"

ஆதரவாக என்கையைத் தட்டிக்கொடுத்துக் கொண்டே அவன் மென்மையாகச் சிரித்தான். கோடை விடுமுறைக்கு நாங்கள் இரண்டுபேரும் எங்காவது போய்விடுவோம்" என்றான் அவன்.

"ஓம் நாங்கள் போய்விடுவோம்"

"இது ஒரு அற்புதமான விளையாட்டு அறை. சந்தோசமான விளையாட்டு அறை" என்றான் அவன்.

சில வேளைகளில் டிப்ஸுக்கு




இந்த அறை மகிழ்ச்சி கரமானதாக இருந்தது உண்மைதான். ஆனா அவன் தன் உணர்வுகளுக்குள்ள தோண்டிப்பார்க்கிற, அவனை ஆழமாகப் பாதித்துவிட்ட கடந்தகால அனுபவங்கள மீளவாழ்ந்து பார்க்கிற நேரங்களில இந்த அறைஅவனுக்கு துன்பம் தந்த வேளைகளும் இருந்தன.

டிப்ஸ் இப்போது எனக்கு முன்னால் நின்று கொண்டிருந்தபோது அவன் தலை உயர்ந்திருந்தது. அவனின் மன ஆழத்திலே, பாதுகாப்பாக இருப்பதான உணர்வு இருந்தது. அவன் தன் உணர்வுகளுக்கான பொறுப்புணர்வு ஒன்றையும் வளர்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய கசப்பு மற்றும் பழிவாங்கும் உணர்வுகள் இரக்க சிந்தையால் பக்குவப்பட்டிருந்தன. தனது உணர்வுகளின் கலவையால் ஆன முட்புதரினுள்ளே கண்ணை மூடிக்கொண்டு துழாவிக் கொண்டிருக்கும் பொழுதே. தான் சுயம் தொடர்பான ஒரு எண்ணக்கருவை டிப்ஸ் கட்டியெழுப்பிக்கொண்டிருந்தான். அவனால் வெறுக்க முடியும். அவனால் நேசிக்கவும் முடியும். குற்றம் சுமத்த அவனால் முடியும். மன்னித்து விடவும் அவனால் முடியும். உணர்வுகள் என்பவை வளைந்து, நெகிழ்ந்து தங்களுடைய கூர்மையான வெட்டு விளிம்புகளை இழந்து போகின்றவைதான் என்பதை அவன் அனுபவத்தினூடாகக் கற்றுக்கொண்டிருந்தான். அவன் தன்னுடைய உணர்வுகளை பொறுப்பான முறையில் கட்டுப்படுத்தவும் பொறுப்பான முறையில் வெளிப்படுத்தவும் அவன் கற்றுக் கொண்டிருந்தான். அதிகரித்துக் கொண்டிருந்த தன்னுடைய சுயம் பற்றிய அறிவினூடாக தனது இயலுமைகளையும் உணர்வெழுச்சிகளையும் முன்னரைவிட அதிக ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தும் சுயாதீனம் கொண்டவனாக அவன் மாறுவான்.



## அத்தியாயம்- 21

உலகப் பரிசோதனைத் தொகுதியொன்றை நான் இரவல் வாங்கியிருந்தேன். அடுத்த வியாழக்கிழமை டிப்ஸ் வந்த போது விளையாட்டறையில் அதுவும் இருந்தது. சிறிய அளவுகளில் மிக நுணுக்கமாகத் தயார் செய்யப்பட்ட ஆட்கள், மிருகங்கள், கட்டடங்கள், மரங்கள், புதர்கள், கார்கள், ஆகாயவிமானங்கள் மற்றும் இவை போன்ற பொருட்கள் இந்தத் தொகுதியிலே இருந்தன. ஆளுமைப் பரிசோதனைத் தொகுதியாகவே இந்தத் தொகுதி உருவாக்கப்பட்டிருந்தது. எனினும் டிப்ஸைப் பொறுத்தவரை இந்த நோக்கத்துக்காக அந்தத் தொகுதியைப் பயன்படுத்தும் நோக்கம் எனக்கு இருக்கவில்லை. அதிலிருந்து சின்னஞ் சிறிய உருக்களில் டிப்ஸ் ஆர்வம் கொள்வான் என நான் நினைத்தேன். அவற்றைப் பயன்படுத்த டிப்ஸ் முனைந்தால் அவனுடைய விளையாட்டு ஆர்வமூட்டுவதாக இருக்கும். அவன் இதைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறுவதற்குக் கூட நான் உத்தேசித்து இருக்கவில்லை. உண்மையைச் சொல்லப் போனால் அவனுடைய செயற்பாடுகளை குறித்த ஒரு பொருளின் ஊடாக நெறிப்படுத்தக் கூடிய எதையும் நான் செய்யப் போவதில்லை. அவன் பயன்படுத்த தெரிவு செய்யக் கூடியதாக அது விளையாட்டறையில் இருந்தது.

இந்தப் பொருட்களைக் கொண்டிருந்த பெட்டியை அவன் வந்த உடனேயே கவனித்து விட்டான். வேகமாக அந்தப் பெட்டியைத் திறந்தான்.

"புதுசா ஒரு சாமான் இங்கே இருக்குது" என்று உரக்கச் குரல் கொடுத்தவன், "இஞ்ச பாருங்கோவன்... இந்தச் சின்னச் சின்னப் பொருட்கள்..." விரைவாக அந்தப் பொருட்களை வகை பிரித்தான். "இஞ்ச சின்னச் சின்ன ஆட்கள், கட்டடங்கள், மிருகங்கள் எல்லாம் இருக்குது என்ன இது?"

நீங்கள் விரும்பினா இதுகள வச்சு ஒரு உலகத்த உருவாக்கலாம். தரையில விரிப்பதுக் கெண்டு ஒரு விரிப்பும் இருக்குது. அந்த நீல நிறக் கீலங்கள தண்ணீருக்குப் பயன்படுத்தலாம்.

"அப்படியோ. அது சரியான ஆர்வமூட்டுற பொருளாகத்தான் இருக்குது!" என்று வியப்போடு குரல் கொடுத்தான். "இதவச்சு பொம்மை நகரம் ஒண்ட செய்யலாம். நான் எந்த மாதிரி விரும்புறனோ அந்த மாதிரி நகரம் ஒண்டச் செய்யலாம்."

"ஓம் நீங்க விரும்பினபடி செய்யலாம்."

டிப்ஸ் அந்த விரிப்பை நிலத்தில் விரித்து விட்டு, அந்தப் பொருட்களுக்குப் பக்கத்தில் தானும் அமர்ந்து கொண்டான். அதிலிருந்த பொருட்களை அவதானமாக வகைபிரித்துக் கொண்டான். ஒரு வீடு, ஒரு ஆலயம், ஒருட்றக் முதலியவற்றை அவன் தெரிந்து கொண்டான்."நான் என்ர உலகத்த செய்யப்போறன்" என்று மகிழ்ச்சியோடு சொன்னான். இந்தக் கட்டடங்கள், ஆக்கள், பொருட்கள் எல்லாம் எனக்கு விருப்பமா இருக்குது. நான் கட்டியெழுப்புறத நீங்க அவதானிச்சுக் கொண்டு இருக்கயுக்க, நான் கட்டியெழுப்பப்போற கதைய உங்களுக்குச் சொல்லுறன்"

ஒரு சின்னஞ் சிறிய வெள்ளை ஆலயம் ஒன்றை அவன் தெரிந்து கொண்டான். "இது கோயில். ஒரு பெரிய, வெள்ளைக் கோயில் கடவுளுக்கும் மனிதர்களுக்கும் உரியது. இதுகள் நகரத்துக்கானவை..." வீடுகள் ட்றக்குகள், கார்களை வெளியே எடுத்தான்.

"நகரத்துக்கான இந்தப் பொருட்கள்... இந்த வீடுகளிலயும் ட்றக்குகளிலையும் சத்தங்கள் நிறைஞ்சிருக்கு நகரத்தின்ர சத்தங்கள் தான் அப்பிடி நிறைஞ்சிருக்குதுகள்."

இப்போ அவன் வீதிகளைப் பொருத்தத் தொடங்கினான். வீடுகள் ஒண்டுக்குப் பின் ஒண்டாக வரப் போகுதுகள். இது ஒரு முழுமையான நகரம். இது ஒரு அமைதியான உள் வீதி, இது விமான நிலையத்துக்கு போற பாதை. விமான நிலையம் தண்ணீருக்குக் கிட்டவா இருக்குது. விமான நிலையத்தில விமானங்கள நான் வைக்கிறன் அங்க... தண்ணீரில... இந்தச் சின்னப் படகுகள நான் விடப் போறன்.

(தொடரும்)

## உலகை ஆட்டிப் படைக்கும் புதிர் விளையாட்டு

புதிர்-11இற்கான விடையினை சரிபார்த்துக் கொள்ளுங்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 4 | 1 | 3 | 5 | 7 | 6 | 9 |
| 3 | 6 | 5 | 9 | 2 | 7 | 4 | 8 | 1 |
| 9 | 1 | 7 | 4 | 6 | 8 | 5 | 2 | 3 |
| 5 | 7 | 3 | 2 | 4 | 9 | 8 | 1 | 6 |
| 6 | [illegible] | 2 | 8 | 7 | 1 | 3 | 4 | 5 |
| 1 | [illegible] | 8 | 6 | 5 | 3 | 9 | 7 | 2 |
| 7 | 5 | 1 | 3 | 8 | 6 | 2 | 9 | 4 |
| 8 | 2 | 9 | 5 | 1 | 4 | 6 | 3 | 7 |
| 4 | 3 | 6 | 7 | 9 | 2 | 1 | 5 | 8 |

ஒற்றை இலக்கம் என்று அதற்கு பொருள். றூபிக்சதுர முகிக்குப் பின் (Rubik Cube) உலகிலேயே ஆகப் பிரபலமான எண்- விளையாட்டாக உருவாகியிருப்பது சுடோக்கு ஆகும்.

## சுடோக்கு (SUDOKU)

இப்புதிரை தீர்க்கத்தொடங்கினால் அதைக் கீழே வைக்கவே மாட்டீர்கள்.

எண்கணித அறிவு எதுவும் இதற்குத் தேவையில்லை. உங்களுக்குத் தேவையானதெல்லாம் தர்க்கபூர்வமான மனமும் ஒரு பென்சிலும் ஒரு அழிறப்பரும் மட்டும்தான். முயற்சியைத் தொடங்குங்கள்.

### புதிர் -12

அதனுடைய சித்திரவதையை அனுபவியுங்கள். அதுதரும் பேரின்பத்தை உணருங்கள்.

இந்தப் புதிரில் ஒருபெரிய சதுரத்துள் 3X3 அளவிலான 9 சிறிய சதுரங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு சதுரங்களுக்குள்ளும் 1-9 வரையான எண்களை நிரப்ப வேண்டும். ஒருமுறை பயன்படுத்திய எண்ணை இந்தச் சதுரங்களில் மீண்டும் பயன் படுத்தக் கூடாது.

அதேபோலவே பெரிய சதுரத்து நிரைகளிலும் நிரல்களிலும் ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

ஒருகுறிப்பிட்ட புதிருக்கு ஒரு சரியான தீர்வு மட்டும் உள்ளது.

(இதற்கான விடை அடுத்தவாரம்)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | | | | | | 3 |
| | | | | | | 2 | 5 | |
| 5 | | | 9 | | | | 8 | 4 |
| | | 8 | 4 | 7 | | 3 | | 5 |
| | | | 5 | 2 | 9 | | 1 | |
| | | | | 8 | | | | |
| | 1 | | 7 | | | | | 2 |
| | 9 | 5 | | 1 | | | | 8 |
| 2 | | 7 | 6 | | | 5 | 9 | |

# தீர்வு எங்கே ஒளிந்திருக்கிறது

வாழ்வில் பிரச்சினை வந்துவிட்டால் நாம் எல்லோரும் முழுவதுமாய் உடைந்து விடுகிறோம். அதற்கு எதிராகப் போராடும் வல்லமை, திறமைஉள்ளவர்களாக இருப்பினும் அதை எம்மால் செய்ய முடியாது இருக்கின்றது . அழுதுகொண்டு ஒரு மூலையில் போய் இருந்துவிடுகின்றோம்.

இவற்றில் இருந்து நாம் எப்படி மீள்வது? பிரச்சினைகள் வருவது வாழ்வில் சகஜமான ஒருவிடயம். வாழ்க்கையில் பிரச்சினை இல்லாத மனிதன் என்று ஒருவரை சுட்டிக்காட்ட முடியுமா? ஆனால் மனிதனின் பேராசை இறங்கவேண்டும்.

அஞ்சிக்கொண்டு நிற்போமாக இருப்பின் அப்படியே இருந்துவிட வேண்டியதுதான். பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு கிடைக்காது. மெல்ல மெல்லத்தான் விலகும். அதற்காக நாம் சில காலங்கள் காத்திருந்தே தீரவேண்டும்.

பிரச்சினைகள் வரும்போது வேதனைகூட வருகிறது. அண்மையில் கவிஞர் ஒருவர் கவலைப்படுவது பற்றி கூறிய வரிகளை உங்களுக்கு கூற நினைக்கின்றேன்- அந்த வரிகள் என்னவென்றால்- உங்கள் கவலைகளைத் துடைக்கும் ஆற்றல்

தன் பிரச்சினை என்ற ஒன்றிற்குநிச்சயம் தீர்வு என்று ஒன்று இருக்கும். ஆனால் அது எங்கே எப்படி இருக்கின்றது என்பதை அறிவதில்தான் சிக்கல்கள் இருக்கின்றன. அதைத் தேடி அறிவதில்தான் எமது வெற்றியும் தங்கியிருக்கிறது. அந்தத் தீர்வு எங்கே ஒளிர்ந்திருக்கிறது என்பதைத் தேடி அறியுங்கள். பிரச்சினை என்ற புதிர் முடிச்சுக்கு விடைகொடுங்கள்.

அதை விடுத்து பிரச்சினைகளில் இருந்து ஓடி ஒளிந்துவிடாதீர்கள் முடிந்தவரை போராடுவோம். முடியாவிட்டால் என்ன செய்வது போராடாமல் கோழையாக தோற்பதைவிட போராடி வீரனாக தோற்பது மிகச்சிறந்தது.



காரணமாக தனது துன்பத்தைவிட, அடுத்தவனது துன்பம் சிறிதாகத் தெரியும். ஆனால் உண்மையில் துன்பம் என்பது எந்த அளவு என்பதில் இல்லை. எவ்வளவு வலி என்பதிலேயே இருக்கிறது.

காய்ச்சலும் தலையிடியும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பது போல அவரவர் கஷ்டம் அவரவருக்குத்தான் புரியும். பிரச்சினை வந்துவிட்டதேஎன்று மூலையில் இருந்தால் பிரச்சினை எம்மைச் சுற்றி புற்று அமைத்துவிடும். பின் அதில் இருந்து மீள்வது கடினமானதாக மாறிவிடும். எனவே பிரச்சினைகள் வரும்போது அவற்றை எதிர்த்து உடனடியாக நாம் களத்தில்

கண்ணீருக்கு இருந்தால் அழுங்கள். ஆனால் வருத்தப்படாதீர்கள். மிக அருமையான கூற்று. அழுங்கள் வேண்டாம் எனக் கூறவில்லை. ஆனால் ஒப்பாரி வைத்துக்கொண்டு ஒடுங்கிவிடாதீர்கள். அது உங்களைச் சிறைப்படுத்திவிடும்.. தீர்வுகள் உடனடியாக அறியப்படாவிடினும் பிரச்சினைகளுக்குத் தீர்வு உண்டு.

தோல்வி என்பது நாம் தோற்பதல்ல. பிரச்சினைகளை தோற்பதே. எனவே பிரச்சினைகளை முடிந்தளவு சமாளிக்கும் பக்குவத்தை எமக்கு நாமே ஏற்படுத்தி அதிலிருந்து வெளிவந்து வென்றிட முனைவோம்.

**இ.றஜித்**




அதுக்கிடையில மழை வந்து கெடுத்துப் போட்டுது.

மழை வந்து கெடுத்துப் போட்டுதோ எண்டைக்ககடா மனிசர் தாங்கள் செய்தது பிழை யெண்டு ஒத்துக் கொள்ளுறம். அதால பிசகினது இதால பிசகினதெண்டு ஏதாவது ஒரு காரணம் வச்சிருக்கிறம். மழை வாற காலந்தான் இது. மண்போடுற காலம் போயிற்றுது.

அதுக்கென்னப்பா செய்யிறது வாகன வசதியளும் வேணுமே-

ம்...ம்... உங்கட கோல்மாலுகள்ள இருந்த ரோட்ட இருந்த மாதிரி யெண்டாலும் விட்டிருக்கலாந்தானே. அதுசரி என்ன கால்லரத்தம் வருது.

சும்மா.... உதில வரக்க மூலையில கிடந்த கல்லிடிச்சுப் போட்டுது.


பாத்தியே உன்ர பிழைய ஒத்துக் கொள்ளனப்பா. நீ போய்க் கல்லில் இடிச்சுப் போட்டு கல்லு வந்து இடிச்சதோ. ஹ....ஹ... திருந்த மாட்டியள்.

மண்ஒழுங்கையளுக்க மனிசர் வாழுகினமெண்டு ஆரும் நினைக்கினமே- அவனவன் பாட்டில ரைக்ரருகள விட்டு ஊழுது விட்டிருக்கிறாங்கள்.

நீங்கள் கிடக்கும் வரைக்கும் கிடந்திட்டு அடைமழைக்கயே காண்வெட்டிப் போடுறது.

நேரமுள்ள நேரந்தானே செய்யலாம் மக்கியடிக்கிறதெண்டுதான் துவங்கின நாங்கள்

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -150



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள்-150**

.........................................................................

.........................................................................

.........................................................................

.........................................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -149



**தே.சந்திரமோகன்,
இல: 448, மாணிக்கபுரம்,
விசுவமடு,
முல்லைத்தீவு.**

### பரிசுக்குரிய வரிகள்

*இதுவரை அறியாத, புதிரான தலைமை,
எதுவரை செல்லும் எமக்கான நிலைமை,
அதுவரை நான் காக்காமல் பழைமை,
விளைகிறேன் அறிகிறேன் இப்போதே புலியை.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*உறுதியின் உறைவிடத்தை
உரிமையோடு பார்ப்பவளே!
இறுதிகாலமீது
உறுதியோடு இரு.*

எஸ்.சிவா,
பருத்தித்துறை.

*சினிமாவை தேடும் இளசுகளின்
காலத்தில் சிந்திக்கத் தேடும்
சின்ன மலரே- நீ
சிறப்பாய் வாழ்வாய்.*


ஆ.சுவர்ணா,
தருமபுரம்.

*பிஞ்சு உள்ளத்தில் கூட
போராட்ட
நல் எண்ணங்கள்
தோன்றும் காலம் இது.*

ச.சதீஸ்குமார்,
கிளிநொச்சி.

*மண் மீட்டுத் தரும் -எம்
மன்னவனின் படத்தை
பார்க்கும் மழலையே மகிழ்வாயிரு
உன் வருங்காலம் சிறக்கும்.*

மு.ரமேஸ்குமார்,
ஊற்றுப்புலம்.







படங்கள்:சோதி

கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தின் பிரதான நுழைவாயில் பகுதி சேதமுற்று சேறும் சகதியுமாக காட்சியளிப்பதுடன் பயணம் மேற்கொள்ளவேண்டிய மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து பேருந்து நிலையத்தினுள் செல்வதைக்காணலாம்.

பலவருட காலத்திற்கு பின்பு புனரமைப்புபணிகள் மேற்கொள்ளப்பெற்று அண்மையில் தார் ஊற்றி செப்பனிடப்பட்ட கிளிநொச்சி திருநகர் வீதியின் இருமருங்கும் வடிகால் அமைப்புக்களை மேற்கொள்ளாமையால் மழைவெள்ளம் தேங்கியிருப்பதைக்காணலாம்.



தாயகத்திலும் சிறிலங்காவிலும் தேசியமட்டத்தில் நாடகப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களை நெறிப்படுத்திய பாடசாலை அதிபருக்கு தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை படத்தில் காணலாம்.



லெப்.கேணல் மறவனின் 1ஆம் ஆண்டு நிகழ்வின் போது கலைஞர்களை பாராட்டி கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாச மேலாளர் மோகன் அவர்கள் பரிசில் வழங்குவதைக்காணலாம்.

படங்கள்-சசி



கப்டன் வாமகாந் எழுசிய வீழுமுன் சில வரிகள் நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புப்பிரதியைஅரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கனிடமிருந்து திரைப்பட. வெளியீட்டுப் பொறுப்பாளர் ராதா பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.



தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவி கோணேசமூர்த்தி டேனிகாவிற்கு வவுனியா வடக்கு கோட்டக்கல்வி அதிகாரி இந்திரராஜா பணப்பரிசில் வழங்கிக்கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

படங்கள்-குகன்


உங்கள் இன்றைய தெரிவுக்கு...

குமரகுரு

புடைவை

அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி

KUMARAKURU

Textile & Fancy House

Yarl Road, Kilinochchi.

SM Graphics

EXPOAIR

your friend in the skies...

எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

(C-11725)



இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.